

கண்ணன் என்னும் கடவுள்
இயற்றியவர்
சுவாமி சித்பவானந்தர்
CHANDRAN.

கண்ணன் என்னும் கடவுள்

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா
1986

தபோவனத் தொடர் 32

முதல் பதிப்பு	*1956*
இரண்டாம் பதிப்பு	*1957*
மூன்றும் பதிப்பு	*1960*
நான்காம் பதிப்பு	*1962*
ஐந்தாம் பதிப்பு	*1976*
ஆறும் பதிப்பு	*1981*
ஏழாம் பதிப்பு	*1986*

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்

கண்ணன் என்னும் கடவுள்

1. சூழ்நிலை

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

படைப்பில் பல படித்தரங்கள்

உலகம் முழுதுக்கும் முதல் காரணம் கடவுள். தோற்றத்தில் இல்லாத நீராவியினின்று தோற்றத்தில் உள்ள நீரும் உறைபனியும் உண்டாவது போன்று தோற்றத்தில் இல்லாத மெய்ப்பொருளினின்று உலகம் யாவும் உரு எடுத்திருக்கிறது. இரண்டு பகுதிகளை உடைத்திருப்பதாக இவ்வுலகம் நமக்குக் காட்சி கொடுக்கிறது. அப்பகுதிகளை முறையே உயிர்கள் என்றும் உடலங்கள் என்றும் இயம்பலாம். உயிர்களிடத்து உணர்வும் அறிவும் மிளிர்கின்றன. உடலங்களோ உணர்வற்ற வெறும் ஜட வஸ்துக்களாம். உயிர்களுள் பலதரப்பட்டவைகள் இருக்கின்றன. நிலத்தில் வேர் பிடித்து வாழ்பவைகள் நிலைத்திணை எனப்படுகின்றன. ஸ்தாவரம் என்பது இவைகளுக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர் ஆகும். மரம் செடி கொடிகள் நிலைத்திணையைச் சேர்ந்தவைகளாகும். நிலைத்திணையினும் மேலானது இயங்குதிணை. இடம் மாறிப்போகும் தன்மை இதனிடத்துண்டு. நீந்துவன, ஊர்வன, நடப்பன, பறப்பனவாகிய அனைத்தும் இயங்குதிணையைச் சேர்ந்தவைகள். ஜங்கமங்கள் என்றும் இவைகளைப் பகர்வதுண்டு.

உயிர்வகைகள் மேல்நிலைக்குப் போகுமளவு அவைகளுக்குப் பொறிகள் அதிகரிக்கின்றன. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்து வகைகளால் வெளியுலகம்

அறியப்படுகிறது. அவைகளுக்கு வாயிலாகவிருப்பவைகள் ஐம்பொறிகள். அந்த ஐந்து வாயில்களைப் பெற்றிருக்கும் உயிர்கள் ஐந்து அறிவு படைத்தவைகள் எனப்படுகின்றன. மனிதனே ஆறு அறிவு படைத்தவன். மனபரிபாகத்தில் மற்ற உயிர்களைவிட அவன் மேல் நிலைக்குப் போயிருப்பதே அதற்குக் காரணமாகிறது. பின்பு அந்த மனபரிபாகத்துக்கு ஒரு முடிவு கிடையாது. உள்ளம் உயர்வு அடைகின்றவளவு மனிதன் உயர்வு அடைகிறான். படிப்படியாக உயர்ந்த நிலைக்குப் போவதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும்.

மனத்தகத்து குறைபாடு ஒன்றும் இல்லாத மனிதனைக் காண்பது அரிதிலும் அரிது. ஏதேனும் ஒருவிதக் குற்றம் ஒவ்வொருவனிடத்திலும் இருக்கிறது. ஆயினும் மக்களுள் அவதார புருஷர்கள் என்று அழைக்கப்படும் ஒரு சிலர் இருக்கின்றனர். கடவுளுடைய முழு மகிமைகளோடு யார் மண்ணுலகில் பிறக்கின்றனரோ அவர்கள் அவதார புருஷர்கள் ஆவார்கள். கடவுளை ஊனக்கண்கொண்டு நாம் நேரில் காணமுடியாது. சான்றோர்களோ ஞானக்கண் கொண்டு அவரைக் காண்கின்றனர். ஆனால் மற்ற மனிதர்களைக் காண்பது போன்று அவதார புருஷர்களைக் காணலாம். அன்னவர்கள் உண்மையில் உடலில் கட்டுப்படாதவர்கள். உடலில் கட்டுப்பட்டவர்கள் போன்று அவர்கள் தென்படுகிறார்கள். பிறந்தது முதற்கொண்டு தெய்வீகம் ஒன்றே அவர்களிடத்துத் திகழ்ந்து கொண்டிருக்கும். மறந்தும் அவர்கள் அறநெறி பிறழ்வது கிடையாது. அவர்கள் விளையாட்டாகச் செய்கின்ற செயல்களிலும் சீரிய தத்துவங்களே செறிந்திருக்கும். மக்களுக்கு நல்லொழுக்கத்தையும் நல் வாழ்வையும் காட்டித் தருவதே அவர்கள் பிறப்பு எடுத்ததன் நோக்கமாகும். பண்டிதர் பாமரர்,

கற்றவர் மற்றவர், ஆடவர் மகளிர், பெரியவர் சிறியவர், முதியவர் இளைஞர் ஆகிய அனைவர்க்கும் விளங்கும்படி அவதார புருஷர்கள் நல்வாழ்வை வாழ்ந்து காட்டுகின்றனர். நல்லாரைக் காப்பதும் கொடியவர்களைக் கரப்பதும் அவர்களுடைய சீரிய செயல்களாகும். சாதாரண மனிதர்களால் செய்யமுடியாத அதிசயச் செயல்கள் சிலவற்றை அவர்கள் எளிதில் செய்து முடிப்பார்கள். தங்கள் உடல் சிசுவின் வடிவத்தில் இருப்பது அவர்களுக்கு இடைஞ்சல் ஆவதில்லை. பஞ்சபூதங்களும் அவர்களுடைய ஆணைக்கு உட்பட்டு நடக்கும். மக்கள்மீது அவர்கள் வைத்துள்ள மெய்யன்பே இதற்கெல்லாம் மூல காரணமாகும். அக்ஞான இருளை அகற்றி அவர்களுக்கு நல்லறிவைப் புகட்டுவதும் அவதார புருஷர்களின் கடமையாகின்றது. நேரான வழியில் முயன்றால் மக்கள் எல்லாரும் மேல் நிலைக்கு வரலாம் என்பதை அவர்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

பூரண அவதாரம்

உயிர்கள் எல்லாம் கடவுளிடத்திருந்து வந்தவைகள். ஆனால் தங்கள் வரவைச் சாதாரண உயிர்கள் மறந்துவிட்டன. தாங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதோ அல்லது எக்குறியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதோ அவர்களுக்குத் தெரியாது. தாங்கள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதையும் யாண்டும் உணர்கின்றவர்கள் ஏதோ சில காலங்களில் உலகில் தோன்றுகிறார்கள். அவர்களுக்குக் கடவுளின் அவதாரங்கள் என்று பெயர். பிறப்பிலிருந்தே அவர்கள் தூய வாழ்வு வாழ்கின்றவர்கள். மறந்தும் அவர்கள் நெறிதவறிப் போய்விடுவதில்லை. நல்வாழ்க்கைக்கு முன்மாதிரியாக நின்று மக்களை நல்வழியில் நடாத்துவது

அவர்களின் சீரிய செயலாகும். அவர்களின் சரீரம் மறைந்து போனபிறகும் அவர்கள் துவக்கி வைத்த நல் இயக்கம் வளர்ந்துகொண்டே போகும். இதுவே அவதார புருஷர் களின் சிறப்பாம்.

அவதார புருஷர்களுள் பூரண அவதாரம் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகரப்பெறுகின்றார். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது மறைமொழி. பகவன் என்னும் சொல்லுக்குப் பரந்தபொருள்கள் ஆறு இருக்கின்றன. இறைமை, ஆற்றல், புகழ், திரு, பேரறிவு, பற்றற்ற நிலை ஆகிய இந்த ஆறுவித தெய்விக இயல்புகள் யாரிடம் ஓங்கி ஒளிர்கின்றனவோ அப்பரம புருஷன் பகவன் எனப்படு கிறார். இந்த ஆறுவித சம்பத்துக்களும் கடவுளிடத்தே நிறைந்திருக்கின்றன. ஆனால் அவர் உயிர்களாகப் பரிண மிக்கின்றபொழுது இந்த ஆறு சம்பத்துக்களும் பெரிதும் மறைந்து நிற்கின்றன. மற்ற அவதார புருஷர்களிடத்து அவைகள் சிறப்புற்று விளங்குகின்றன. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடத்தோ அவை ஆறும் பரிபூரணமாக மிளிர்ந்து கொண்டிருந்தன. உடல் அமைப்பில் இளமை முதுமை என்ற பாகுபாடு அவருடைய பேராற்றலுக்கு எந்தவித மான இழுக்கையும் உண்டுபண்ணவில்லை. செயற்கரிய செயல்களைச் சின்னஞ்சிறு வயதிலேயே அவர் விளையாட்டா கச் செய்ய ஆரம்பித்துவிட்டார். கேட்போர் கட்டுக்கதை யென்று புறக்கணிப்பதற்கு இடந்தருகிற அசாதாரணமான நிகழ்ச்சிகளை அவருடைய பால்ய லீலைகளில் காணலாம். பின்பு வரம்பு கடந்த அன்பையும் அறிவின் உச்சநிலையையும் அவரிடத்துக் காணலாம். வாழ்க்கைக்குரிய மேலாம் கோட் பாடுகளையெல்லாம் அவருடைய வரலாறு தெற்றென விளக்குகிறது. இவற்றையெல்லாம் முன்னிட்டே அவரைப்

பூரண அவதாரம் என்று பெரியோர் பகர்கின்றனர். இப்புவியினுள் அவர் பிறப்பெடுத்த பாங்கு வருமாறு :

கொடுங்கோல் ஆட்சி

துவாபர யுகத்தின் இறுதியில் வடமதுராபுரியில் கம்சன் என்னும் கொடுங்கோல் மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். தன் தந்தை உக்கிரசேனனிடமிருந்து ராஜ்யத்தைப் பல வந்தமாகப் பிடுங்கிக் கொண்ட சிறுமை அவனுக்குச் சொந்தமாயிற்று. மனதுக்குத் தோன்றியதையெல்லாம் அவன் சட்டமாக வைத்துக்கொண்டு மக்களைத் துன்புறுத்தி வந்தான். கம்சன் என்னும் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அழுகிற பிள்ளை அச்சத்தால் வாய் பொத்தும். சான்றோர்க்கு அவன் யாண்டும் சத்துரு. அம்மன்னனைப் பற்றி நினைத்த பொழுதெல்லாம் குடிமக்கள் உள்ளத்தினின்று அமைதி பறந்தோடிவிடும். கம்சனுடைய கொலைக்கு அஞ்சி அவர்களுடைய உள்ளம் நடுங்கும்.

தேவகி என்பவள் கம்சனுடைய தங்கை. தக்க வயதில் அவள் வசுதேவன் என்னும் கோமகனுக்கு மணமகள் ஆனாள். விவாகம் மிக விமரிசையாக நடந்தேறியது. மணமக்களை மணாளனுடைய மனைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லுதற்கு ஏற்பாடாயிற்று. அவர்கள் இருவரும் இன்னியல்பே வடிவெடுத்தவர்கள். அழகுத் தெய்வங்களாக அவர்கள் தென்பட்டார்கள். மேன்மையும் கம்பீரமும் அவர்களிடம் மிளிரலாயின. சுவை ததும்பிய மிருதுத் தன்மையிலே அவர்கள் மேவியிருந்தார்கள். அத்துடன் அவர்களிடத்து உறுதிப்பாடோடு கூடிய திண்மையும் திகழலாயிற்று. நன்கு அலங்கரிக்கப்பட்டதும் வேந்தனுக்கு உரியதுமான விமானத்தில் அவர்கள் ஊர்ந்து சென்றனர். அந்த ஊர்திக்கு முன்னும் பின்னும் பிரமுகர்கள் பலர் படாடோபத்தோடு

போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் கண்ணைக் கவர்வனவாயின. விலை மதிப்புப் போட முடியாத சீதனங்கள் பலவற்றை அவர்கள் கையில் ஏந்திச் சென்றனர். வையகத்துக்கு வந்துள்ள வானவர் போன்று அக்கூட்டத்தார் காட்சி கொடுத்தனர். அவர்களுக்கிடையில் நடுநாயகமாகத் தம்பதிகள் தென்பட்டார்கள். விமானம் ஓட்டிய மனிதனோ தோற்றத்தில் எவ்விதத்திலும் தம்பதிகளுக்குப் பின்வாங்கவில்லை. ஆடையாபரணங்களை அணிந்திருந்த பாங்கில் மணமக்களுக்கும் மற்றவர்கள் எல்லார்க்கும் மிக்கானாகவே அவன் மிளிரலானான். ரத்தினங்கள் இழைத்த பொன் கிரீடம் அவனுடைய முடிமீது தகதக வென்று திகழ்ந்து கொண்டிருந்தது. இறைமை நிறைந்த கண் பார்வையை அவன் படைத்திருந்தான். தேர் ஓட்டி ஒருவனுக்கு இத்தகைய தெம்பா என்ற ஐயம் ஒருவேளை எழலாம். அவன் வெறும் தேர்ப்பாகன் அல்லன். தறுகண் ஆண்மை படைத்த கம்சனே தேர்கடாவ முன்வந்தான். தங்கையாகிய தேவகி மீது தான் காட்டிய அன்புக்கு அது அறிகுறியாம் !

முன் எச்சரிக்கை

மணமக்களாகிய தேவகியும் வசுதேவனும் உண்மையாகவே மகிழ்வுற்றிருந்தனர். ஏனென்றால் உலகையெல்லாம் கலக்குகின்ற கோமானே தங்களுக்குத் தேர்ப்பாகனாகத் தொண்டுபுரிய முன்வந்திருந்த பொழுது தாங்கள் இனி யார்க்கும் அஞ்சவேண்டியதில்லை. தம்பதிகள் கொண்டிருந்த குதூகலத்தை வளர்க்கக்கூடிய தென்றலும் இடையிடையே வீசுவதாயிற்று. காட்டு மலர்கள்மீது மேவியிருந்த மணத்தை அம்மெல்லிய பூங்காற்று சுமந்தெடுத்து வந்தது. மரக் கிளைகள் மீது புள்ளினங்கள் கொஞ்சிக் குலாவிக்கொண்

டிருந்தன. பறப்பனவற்றுள் சில கிளப்பிய இன்னிசை செவிக்கு நல்விருந்தாயிற்று. சூரியனும் வானவெளியில் தங்கத்தட்டுப் போன்று தோன்றி கண்ணுக்கினிய காட்சி கொடுத்தான். இரவெல்லாம் உறக்கத்தில் முடங்கிக்கிடந்த உயிர் வகைகள் தங்கள் உடல்களை நீட்டி, உறுப்புக்களை நெளித்து எழுந்திருந்து தத்தம் அலுவல்களில் நுழைந்தன.

இயற்கையின் இன்னியல்பு திடீரென்று மாறுபாடு அடைந்தது. பறவைகள் பாடுவதை நிறுத்தின. கார்மேகம் ஒன்று தோன்றிக் கதிரவனை மறைத்தது. இளங்காற்றே புயல் காற்றாக ஓலமிட்டு உறுமியது. மணமக்களை அழைத்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்ற மேன்மக்கள் முகத்தில் மண்ணையும் குப்பையையும் அது வாரி இறைத்தது. காகங்கள் கடுமையாகக் கரைந்தன. யாதோ கேடு வரப்போகிறது என்பதன் அறிகுறிகள் தென்பட்டன. நடந்தேறிய விவாக வைபவத்தைக் குறித்து மகிழ்வுற்றிருந்த அக்கூட்டத்தார் இப்பொழுது திடீரென்று மனங்கலங்கலாயினர். சடக்கென ஏனைய அரவங்கள் அடங்கின. தெளிவுற வானொலி ஒன்று விளம்புவதாயிற்று: "விவேகமற்ற வேந்தா, இத்தகைய விநோதமான வைபவம் எதற்காக? யாரை நீ ஊர்வலமாக அழைத்துச் செல்லுகின்றாயோ அவளுடைய எட்டாவது மகப்பேறு உன்னை மாய்த்துவிடப் போகிறது." திடுக்கிட்டான் கம்சன்; வாகனத்தினின்று எட்டிக் குதித்தான்; வாளை உருவினான்; தங்கை தேவகியின் கூந்தலை இடக்கையால் சுருட்டிப் பிடித்தான்; வனிதையை வெட்டித்தள்ள வலக்கையிலிருந்த வாளை ஓங்கினான். நொடிப்பொழுதில் விளைந்த விபரீதத்தைக் குறித்து மணமகன் வசுதேவன் விதிர்விதிர்த்தான். கம்சனுடைய காலில் விழுந்து அவன் வணங்கினான். அரசனுக்கு வரப்போகிற ஆபத்து தேவகியின் எட்டாவது

குழந்தையினால்தானே! அதற்காக அந்த அபலையை அல்லல் படுத்துவது எதற்காக? தேவகிக்கு வாய்க்கின்ற மகவு ஒவ்வொன்றையும் வசுதேவன் தானே கம்சனிடம் கொண்டு சேர்க்க உறுதிமொழி கூறினான். கோமானும் தான் கருதியவாறு அக்குழவிகளைக் கையாண்டும் கொள்ளலாம். இங்ஙனம் வசுதேவன் வினய பூர்வமாக விண்ணப்பிக்கவே அவன் வார்த்தைகளில் புதைந்து கிடந்த பொருள் வேந்தனுக்கு விளங்கிற்று. தனது கொடுஞ் செயலை ஒத்திப் போட்டு விட்டுத் தன் அரண்மனைக்கு அவன் திரும்பிப் போய் விட்டான்.

ஆறு குழந்தைகளின் அழிவு

இதுகாறும் இன்பம் ததும்பிய ஊர்வலத்தில் கலந்திருந்த ஏனைய அனைவரும் இப்பொழுது துன்பம் துய்ப்பவர்களாய்க் கோகுலத்தை நாடிச் சென்றனர். ஆங்கு இருந்த வசுதேவனுடைய வீட்டுக்கு அவர்கள் வருத்தத்தோடு வந்து சேர்ந்தனர். கோகுலத்தை ஆண்டு வந்த ஆயர்களின் கோமான் நந்தனே மணமக்களை வரவேற்க மகிழ்வோடு முன் வந்தான். ஆனால் அவர்களுக்கு உற்ற இன்னலைக் கேட்டு அவனும் கவலை மிகக்கொண்டான். பிறகு 'எல்லாம் இறைவன் விட்டபடி ஆகுக' என்று அவன் தேறுதல் அடைந்து தம்பதிகளையும் தேற்றினான். வசுதேவன் ஒரு விவேகி. ஆயர்கோன் மொழி கேட்டு அவனும் இறைவனைச் சார்ந்து ஆறுதல் அடைந்திருந்தான்.

தேவகியானவள் வசுதேவனுக்கு இரண்டாம் மனைவியாக வாய்த்தவள். ரோகிணி என்பவள் அவனுடைய மூத்த தாரம். அவள் நல்லியல்பே வடிவெடுத்தவள். மனைவிமார் இருவரும் மனைமாட்சி யாவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்கள். தகைசான்ற தற்கொண்டானை அவர்கள் இனிது

போற்றி வாழ்ந்து வந்தார்கள். தனக்குற்ற இடுக்கண்களுக்கிடையில் வசுதேவனும் தெய்வத்தைச் சார்ந்திருந்து மனங் கலங்காது வாழ்ந்து வந்தான். நாளடைவில் தேவகிக்கு முதல் ஆண் மகவு முளைத்தது. வாய்மையே வடிவெடுத்திருந்த வசுதேவன் தனது உடன்படிக்கைக்கு ஒப்ப இச் செய்தியைக் கம்சனுக்குச் சொல்லியனுப்பினன். அக்கொலை பாதகனும் ஏவல் ஆட்களை ஏவி அக்குழந்தையை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். உண்மையில் தேவகியின் எட்டாவது குழந்தையினால்தான் தன்னுயிருக்கு ஆபத்து என்று அவன் கேட்டிருந்தும் அம்மடந்தையின் மணிவயிற்றில் வாய்த்த சிசுக்கள் அனைத்தையும் பொசுக்கிவிட அவன் துடித்து நின்றான். குழந்தை தன் கைக்கு அகப்பட்டதும் அவன் அதைக் காலைவாரியடித்து ஒழித்துவிட்டான்! தான் கொண்டிருந்த தீர்மானத்துக்கு ஒப்ப இப்புல்லிய நிகழ்ச்சியானது தொடர்ந்து ஆறு தடவை நடந்தேறிவிட்டது. கொடுமைகள் அனைத்தும் திரண்டு உருவாய் வந்திருந்த கம்சன் தன் கைப்பட இவ்விழிதொழிலைச் செய்தான். தனக்கு வரப்போம் வினைப்பயனை விலக்கிவிடலாம் என்று அவன் இங்ஙனம் இறுமாப்புற்றிருந்தான்.

ஏழாவது குழந்தை எங்கே?

தேவகியின் வயிற்றில் வாய்த்த ஏழாவது குழந்தையின் வாழ்வு வேறு ஒருபோக்கில் போய்விட்டது. சில மாதங்களாக அவள் கர்ப்பவதியாயிருந்தாள். அது செய்தி கம்சனுக்கும் தெரிந்திருந்தது. பிறகு திடீரென்று அவள் சூல் அற்றவள் ஆய்விட்டாள். கரு மறைந்து போய்விட்டது. உண்மையில் நிகழ்ந்தது யாது என்பது பலருக்குத் தெரியாது. தெய்வாதீனமாகத் தேவகியின் வயிற்றில் இருந்த கரு ரோகிணியின் வயிற்றுக்கு மாற்றப்பெற்றது. தக்க காலத்

தில் அவளுடைய பிள்ளையாக அது பிறந்தது. ஒரு கர்பத்திலிருந்து மற்றொரு கர்ப்பத்துக்கு அது மாற்றப்பெற்றதால் அதற்கு சங்கர்ஷணம் என்னும் பெயர் வந்தது. எனவே, கம்சன் கையில் அகப்பட்டு அழிவுறாது அது வாழ்ந்து வந்தது. ஈண்டு இயற்கையின் நடைமுறை ஒன்றை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. சிறந்த செயல்புரியத் தகுதியற்ற உயிர்கள் மண்ணுலகில் பிறப்பதும் பிறவாதிருப்பதும் ஒன்றே. அப்படிப் பிறந்துவிட்டால் அவை நெடுநாளைக்குப் பிறகு அழிந்துபட்டுப்போவதைவிட உடனே அழிந்து போவது உத்தமம். மற்றுச் சீரிய செயல்புரிய வந்திருப்பவைகளை உலகத்தவர் அழிக்க முயன்றாலும் அவைகள் அழிந்துபட்டுப்போகா. சங்கர்ஷணனது பாங்கு அத்தகையது. இனி, அவனைவிட மிக்கதோர் ஆத்மா ஆபத்துக்களினின்று எங்ஙனம் பாதுகாக்கப்பட்டான் என்பதை ஆராய்வோம்.

பெற்ற தாய் ஒருத்தி தன் பிள்ளையினிடம் கொள்ளும் அன்பு ஒப்பற்றது. குழந்தையின் பொருட்டுத் தன்உயிரையே வழங்க அவள் முன் வருகிறாள். இதுவே தாயின் இயல்பு. தன் குழந்தைகள் பொருட்டுத் தேவகி என்ன பாடுபட்டாள் என்பது நமக்கு முற்றும் விளங்காது. அவளுடைய உயிரையே பிடுங்கியது போன்று ஆறு சிசுக்கள் அவளிடமிருந்து பலவந்தமாகப் பெயர்த்தெடுத்துச் செல்லப்பட்டன. என்ன பாங்கில் அவைகள் அடித்துக்கொல்லப்பட்டன என்பதை அவள் மனக்கண்கொண்டு கண்டு கதறியழுதாள்; புழுவாகத் துடித்தாள். இத்தனைக்கும் காரணம் கொடும்புலியினும் கடுமை வாய்ந்த கல்நெஞ்சக்காரன் கம்சனே. பெண் இனத்தின் பதைபதைப்புக்கும் இளகாத வைர நெஞ்சக்காரன் அவன்.

எட்டாவது குழந்தையை எதிர்பார்த்தல்

தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறக்கும் காலம் கிட்டியது. கம்சன் அதை நன்கு உணரலானன். இப்பொழுது தேவகியையும் வசுதேவனையும் தங்கள் போக்கில் அவன் விட்டுவிடவில்லை. அவர்களைத் தன்னிடம் பிடித்துக் கொண்டு வரும்படி ஆணையிட்டு அவர்களைச் சிறையில் அடைத்துவைத்தான். உறுதியான இரும்புச் சங்கிலியில் இருவரும் ஒருங்கே தளைக்கப்பட்டனர். சிறைச்சாலையின் சிறு வாயில்களெல்லாம் நன்கு அடைக்கப்பட்டன. காவற்காரர்கள் அல்லும் பகலும் காவல் இருந்தனர். அந்த நெருக்கடியில் என்ன செய்வதென்று கணவனுக்கோ மனைவிக்கோ விளங்கவில்லை. கண்ணீரும் கம்பலையுமாக அவர்கள் கடவுளையே சார்ந்திருந்தனர். அப்படி நாட்கள் பலகழிந்தன. ஆயினும் உதவிமட்டும் வந்தபாடில்லை. தூயமனம் படைத்த தம்பதிகள் தெய்வத்தையே நம்பியிருந்தனர். தாங்கள் பட்ட துயரத்தைக் குறித்து அவர்கள் தெய்வத்தையோ வேறு யாரையோ நொந்துகொள்ளவில்லை. தங்கள் பழவினையையே அவர்கள் பழித்துக்கொண்டனர். தங்கள் துன்பத்துக்கு எப்பொழுதாவது முடிவு வருமா என்று அவர்கள் ஏங்கியிருந்தனர். அவர்கள் ஓயாது விடுத்த வணக்கம் இறைவனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. நொந்து கொண்டிருந்ததற்கிடையில் அந்த நோயைச் சகிக்கும் ஆற்றலும் அவர்கள் உள்ளத்தில் உதித்துக்கொண்டிருந்தது.

கம்சனுடைய கொடுமையையும், சித்திரவதையையும், அநீதியையும் பொறுக்க பூமாதேவிக்கே இயலவில்லை. அவளுடைய நன்மக்கள் பட்டபாட்டையெல்லாம் பிரம்மதேவனிடம் சென்று அவள் முறையிட்டாள். அவளுடைய கூக்குரலைக் கேட்டு நான்முகக் கடவுளே மனமுருகிவிட்டார்.

உடனே அவர் நிலமகளை நாராயணனிடம் அழைத்துச் சென்றார். அப்பரம புருஷனே பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தார். அந்தப் புருஷோத்தமனுடைய அறிதுயில் அல்லது யோகநித்திரையைக் கலைக்க பிரம்மதேவன் முற்பட்டார். "ஹே பரந்தாமா, அடியேனது விண்ணப்பத்துக்குச் சிறிது செவி சாய்ப்பீராக. மண்ணுலகில் அறம் அழிந்துபட்டுப்போய் அக்கிரமம் தலையெடுக்கின்ற காலங்களிலெல்லாம் நீர் அவதரித்து வந்து அனைத்தையும் சீர்படுத்துவதாக ஆணையிட்டிருக்கின்றீர். அத்தகைய நெருக்கடி இப்பொழுது வந்துவிட்டது. கம்சன் புரிகின்ற கொடுமையைச் சகிக்க முடியாது உலகம் தத்தளிக்கிறது. அவனை அடக்க மக்கள் எவர்க்கும் இயலாது. தேவரீர் திருவவதாரம் செய்து உலகமக்களை உய்வித்து அருளவேண்டும்." அவ்விண்ணப்பத்துக்கு இணங்கி நாராயணனும் தமது சொரூபத்தில் இரண்டு சிறு பகுதிகள் பலராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் தேவகியின் வயிற்றில் வந்து வாய்ப்பதாக உறுதி கூறினார். அதன் விளைவாகக் கம்சனும் அவனை ஒத்த கொடியவர்களும் அழிவார்கள் என்றும், அறநெறி நிலவுலகில் நிலைநாட்டப்பெறும் என்றும் மகாவிஷ்ணு வாக்களித்தார். அதைக்கேட்ட பூமாதேவியும், பிரம்மதேவனும் மகிழ்வடைந்து தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள்.

2. அவதாரம்

கம்சனது பீதி

தனது பாதுகாப்பைக் குறித்துக் கம்சனும் எச்சரிக்கை மிக எடுத்துக்கொண்டான். விரைவில் தனக்கு ஆபத்து வரக்கூடும் என்று அவன் அடிக்கடி நினைத்துக்கொள்வான். தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறக்கப்போவதை நினைந்து உலக மக்கள் அனைவரும் ஆவலோடு இருந்தனர். நல்லார், பொல்லார் ஆகிய இருதரத்தாருக்கும் பரபரப்பு அதிகரித்தது. கொடுமையினின்று காக்கப் பெறுவதை எண்ணி நல்லார் ஆறுதல் அடைந்து வந்தனர். கொடியவர்களுடைய கோரிக்கையோ வேறு ஒரு போக்கில் போய்க் கொண்டிருந்தது. கம்சன் எப்படியும் தேவகியின் எட்டாவது குழந்தையையும் ஒழித்துவிடுவான். அதன் பிறகு தங்களுடைய கொடூரச் செயல்களுக்குத் தடைசெய்வார் யாரும் இல்லையென்று எண்ணி வந்தனர். பேய்க்குணம் படைத்த கம்சன் செய்த ஏற்பாடும் மிகப் பெரியது. தான் அஞ்சிய சத்துரு பிறந்ததும் அதைப்பற்றிய செய்தி தனக்கு உடனே கிடைக்கவேண்டும் என்று அவன் உத்தரவு போட்டிருந்தான். தனது நம்பிக்கைக்குரிய காவலாளர் கணக்கற்ற பேரை அவன் நியமித்திருந்தான். குற்றமறியாத குலமக்கள் இருவர் மீது அன்னவரும் அல்லும் பகலும் அலுப்பறியாத கண்காணிப்பு வைத்திருந்தனர்.

தேவகியின் வயிற்றுவாய்ப்பு நிறைநிலையை எட்டி வந்தபொழுது அவளுக்கும் அவளுடைய கணவனுக்கும் கவலை பன்மடங்கு அதிகரித்தது. தங்கள் குழந்தைக்கு என்ன கதி வரப்போகிறதோவென்று அவர்கள் குலை நடுங்கினர். கொடுமையினின்று உலகத்தைக் காப்பவனே தன்

கருவில் வந்து வாய்த்திருக்கிருன் என்பதைத் தேவகிமறந்து விட்டாள். அன்று ஒருநாள் தங்களது திருமணத்தின் பொழுது அசரீரியாக எழுந்த சொல் ஏதோ சில வேளை களில் அவர்களின் ஞாபகத்துக்கு வரும். அப்பொழுது சிறிதுநேரம் கவலையை மறந்திருப்பார்கள். திரும்பவும் அதை மறந்துவிட்டு அவர்கள் தாபத்தில் மூழ்கிக்கிடப் பார்கள். தாங்கள் இருவரும் மணந்தநாள் முதற்கொண்டு இதுவரையில் துன்பம் கலவாத இன்பத்தை அனுபவித்தது கிடையாது. கம்சன் புரிந்த கொடுமை இப்பொழுது உச்ச நிலைக்கு வந்து விட்டது. செத்து ஒழிந்துபோனல் தங்கள் துன்பத்துக்கும் ஒரு முடிவு வந்துவிடுமே என்று அவர்கள் ஏங்கியிருப்பார்கள்.

இனி, கம்சன் கவலையற்றிருந்தான் என்று இயம்புதற் கில்லை. அவனுடைய சஞ்சலமும் தலைக்குமேல் ஏறிவிட் டது. தன் எதிரியின் பிறப்பை ஒவ்வொரு நொடிப்பொழு திலும் அவன் எதிர்பார்த்திருந்தான். தான் பூண்டிருந்த பயத்தால் தனது நம்பிக்கைக்குரிய வேலையாட்களையே அவன் சில வேளைகளில் சந்தேகிப்பான். பிறந்த குழந்தை யின்மீது இரக்கம்கொண்டு அவர்கள் அதை எங்கேயாவது மறைத்து வைத்துவிடுவார்களோவென்று அவன் ஐயமுறு வான். சிலவேளைகளில் அவன் தானே சிறைச்சாலையை நேரில் வந்து பார்வையிடுவான். ஏற்பாடுகளெல்லாம் ஒழுங் காக இருக்கின்றனவாவென்று கவனித்துப் பார்ப்பான். பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த தங்கையின் மீதும் அவளு டைய கணவன்மீதும் அவன் சீறி விழுவான். முகத்தை நெறித்துக்கொண்டு அவர்களை ஏறிட்டுப் பார்ப்பான். அதி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்று காவற்காரர்களிடம் கர்ஜிப்பான். இனிப்பிறக்கும் குழந்தையை முதன் முதல்

காட்டிக் கொடுப்பவனுக்குச் சீரிய சன்மானம் அளிப்பதாக ஆசையூட்டிடுவான். இரவில் கம்சனுக்கே சரியாகத் தூக்கம் பிடிப்பதில்லை, சிறிய சந்தடியும் அவனைச் சயனத்தினின்று எழுப்பிவிடும். ஏவலாள் எவனுவது பிறந்த குழந்தையைக்கொண்டு வருகின்ருனென்று ஆவலுடன் இங்கும் அங்கும் திரும்பிப்பார்ப்பான். படுக்கையினின்று அவன் திடுக்கிட்டு எழுந்திருந்து கதவண்டை ஓடுவான். சமீபத்தில் இருந்த சிறைச்சாலையை ஜன்னல்கள் வாயிலாக எட்டிப்பார்ப்பான். அங்கிருந்து ஏதாவது ஓசை ஒலி வருகிறதா என்று அறிந்துகொள்ளுதற்பொருட்டு ஒருபுறம் தலையைத் திருப்பிக் காதுகொடுத்து அசையாது நிற்பான். தன்னைக் கொல்லுதற்குக் குழந்தையொன்று கதையையும் சக்கரத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிவருகிற காட்சி எங்குத் திரும்பிப் பார்த்தாலும் அவனுடைய கலங்கிய கண்ணுக்குத் தென்பட்டது. தனது மனதில் பதிந்துகிடந்த பீதியைப் போக்குதற்குப் பக்கத்தில் இருந்த தனக்கு விருப்பமான மரங்களையும் அவைகளில் கொத்துக் கொத்தாய்த் தொங்கிக்கொண்டிருந்த காய் கனிகளையும் மலர்களையும் உற்று நோக்குவான். ஆயினும் என்ன! தான் அஞ்சிய சிறுவன் கதையையும் சக்கரத்தையும் ஏந்திக்கொண்டு வெளியே கிளம்புவதைக் காண்பான். பின்பு பால்வெண் நிலாவைப்பார்ப்பான். தனக்கு ஆறுதல் அங்கிருந்தாவது வருமா என்பது அவனுடைய நோக்கம். என்ன விபரீதம்! அக்கொடிய கோளத்தினுள் புதைந்திருப்பதும் தன் பகைவனே என்பது கம்சனுக்குப் புலனாகும். கலவரம் ஊட்டும் அக்காட்சியைத் தவிர்த்துவிட முயன்ற மன்னன் இயற்கையில் வேறு பல பொருள்கள் மீதும் தனது மனதைச் செலுத்தினன். என்ன பயன்! எங்குத் திரும்பிப்பார்த்தாலும் தன்பகைவனுடைய

காட்சியே கண்ணுக்கு வந்தது. உலகம் முழுதும் ஒன்று கூடி அத்தகைய சூழ்ச்சி செய்துவிட்டது போலும்! புற வுலகக் காட்சியொன்றும் தனக்கு வேண்டாம் என்று அவன் கண்ணைப் பொத்திக்கொள்வான். கண்மூடிய கார் இருளி னின்று அதே எதிரியின் உருவம் ஒளிரும். தான் வெறுக் கின்ற வடிவமே வெளியிலும் உள்ளும் நிறைந்திருக்கிறது. இனிக் கண் மூடியிருப்பதா அல்லது கண் விழித்திருப்பதா என்னும் கேள்வி அவன் மனதில் கிளம்பிற்று. பைத்தியம் பிடித்தவன் போன்று ஆய்விட்டான். அவனது மனதுக் கினிய அரசிகளும் அவன் அருகில் வர அஞ்சினர். காரண மின்றி கம்சன் கர்ஜித்துத் தன் முன் வருபவர்களைத் தாக்கு வான். அவனுடைய மனநிலை பரிதாபத்துக்கு உரியதாய் விட்டது. உண்ணும் உணவிலும் அருந்தும் நீரிலும் தான் அஞ்சி வெறுக்கின்ற வடிவத்தையே அவன் காண்பான். ஒருவிதத்தில் அவனுடைய மனது ஒருமுகப்பட்டுவிட்டது. தனக்கு ஒவ்வாத உருவத்திலே அல்லும் பகலும் அவனது மனது ஊறிக்கிடந்தது. தன்னையறியாது தன் எதிரியின் மயமாக அவன் அணு அணுவாக மாறியமைந்து வந்தான்.

சிறையில் துன்பத்துக்கிடையில் இன்பம்

இதற்கிடையில் சிறையுண்டு கிடந்த தம்பதிகள் தங் களுக்கு இனி வாய்ப்பதற்கிருந்த சிசுவை எந்த விதத்திலும் காப்பாற்ற முடியாது என்று கவலைக் கடலில் மூழ்கிக் கிடந் தனர். காவலாளர்களோ அப்போதைக்கப்போது வந்து தேவகியின்பால் நிகழ்தற்கிருந்த பிரசவ விவரங்களை வசு தேவனிடமிருந்து விசாரித்துச் சென்றனர். அன்னவருக்குப் பலநாட்களாக உறக்கம் கிடையாது. குடிவெறி அவர்களை உற்சாகப்படுத்தி வைத்திருந்தது. களைப்பால் இப்பொழுது மெய்மறந்து அவர்கள் கண் வளர்ந்துவிட்டனர். கள் ளின் வெறி தூக்கத்தைப் பலப்படுத்திவிட்டது.

இவ்வுலகத்தைத் தீமையினின்று காத்தருளத் திருவுளங் கொண்டுள்ள பரமனைப் பிறப்பிக்கின்ற வேளை தேவகிக்கு வந்தணுகுகிறது. இனித் தனக்கு வரப்போகும் கேடதனை எண்ணி அவளது நெஞ்சம் பகீரெனத் துடித்தது. தன் கணவனோடு கூடி அவள் கோவென்று கதறியழுதாள். புலம்பித் தன் மார்பிலும் மண்டையிலும் புடைத்துக்கொண்டாள். "அந்தப் பாவியினால் அடியுண்டு அழிந்துபட்டுப்போக, என் கண்ணே, நீ என் வயிற்றினின்று வெளியில் வரவேண்டாம். இறைவா, இத்தகைய கதிக்கு நாங்கள் ஆளாகிவிட்டோம். கரைகாணாத துன்பக்கடலில் நாங்கள் அழுந்திக் கிடக்கின்றபொழுது நீ துணைபுரிய வரலாகாதா? நாங்கள் உன் அடியவர்கள் அல்லவா? ஏழையர்க்கு எளியவா, எங்களைக் காத்தருள வா, வா. இனித் தாமதம் வேண்டாம். படமுடியாது இந்தத் துயரம். நாங்கள் பட்டது போதும்." இப்படி ஓலமிட்டுக்கொண்டு இருவரும் மயங்கி விழுந்து விட்டார்கள். பிரக்ஞையற்ற காரிருள். அதில் திடீரென்று பிரகாசம் ஒளிர்ந்தது. பல்லாண்டுகளாகப் பொதிந்து கிடந்த துன்பம் என்னும் படலம் படலமான கார்மேகம் மாயமாய் மறைந்து போயிற்று. பேரானந்தம் என்னும் பரிதி அவர்களுடைய மானச வெளியெங்கும் ஒளி வீசியது. அந்தப் பேரொளிப் பிழம்பு பின்பு பதினாறு வயது சிறுவனாக உரு எடுத்தது. அவனுடைய கட்டழகும் புன்முறுவலும் அவனைக் காணலுற்றவர்களது சோக மோகங்களைச் சிதறடித்து விட்டன. சங்கு, சக்கரம், கதை, கமலம் ஆகியவைகளை அவன் நான்கு கரங்கள் கொண்டு ஏந்தி நின்றான். அருள் பழுத்த அமுதத்தினை அவனுடைய முகவிலாசம் வாரி வழங்கிய வண்ணமாயிருந்தது. அக்காட்சியைக் கண்டதும் மனம் புண்பட்டுக் கிடந்தவர்களுக்கு மன

நோய் நீங்கிவிட்டது. காட்சி கொடுத்தவனுடைய புன்சிரிப்பு அதைக் காணலுற்றவர்கள் உள்ளத்தில் பேரானந்தத்தை ஊட்டியது. அந்த ஞானக்காட்சியிலே அருகில் வந்த அவ்வழகன் மொழிவானுயினன்: "அம்மையே, அப்பா, இனி நீங்கள் வருந்தவேண்டாம். உங்களை உய்விப்பதற்கும், நல்லாரை உய்விப்பதற்கும் இதோ நான் இப்போது வந்துவிட்டேன். பூமாதேவி இனி முறையிடவேண்டியதில்லை. கொடியவர்களுடைய காலத்துக்கு முடிவு வந்துவிட்டது. பாதகனுகிய கம்சன் இனி நெடுநாளைக்கு செங்கோல் தாங்கியிருக்கமாட்டான். என்னைக் கொல்ல அவனுக்கு இயலாது. எனது நுண்மையும் திண்மையும் அவனுடைய திட்டத்தில் அடங்கா. கண் விழித்து என்னை உங்களுடைய குழந்தையாகக் காண்பீர்களாக. தந்தையே, கோகுலத்தில் இலங்கும் தங்கள் நண்பனுகிய நந்தகோபன் இல்லத்துக்கு என்னை எடுத்துச் செல்லுங்கள். இப்பொழுதுதான் அவருடைய மனைவி யசோதையின் வயிற்றில் எனது யோக மாயை ஒரு பெண்ணைப் பிறந்திருக்கிருள். தூங்கிக்கொண்டிருக்கும் யசோதையின் மடியில் என்னை வைத்துவிட்டு அப்பெண் குழந்தையை இச்சிறைச்சாலைக்குக் கொண்டு வந்து விடுங்கள். உங்களுடைய முயற்சிக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராது." இங்ஙனம் பகர்ந்தான பிறகு ஆத்ம சாந்தி அளிக்கவல்ல அப்பரம புருஷன் காட்சியினின்று மறைந்து போய்விட்டான். பழையபடி காரிருள். ஆனால் மனத்தகத்தினின்று துன்ப பாரம் அகன்று போய்விட்டது. பெற்றோர் கண்விழித்துப் பார்த்தார்கள். இதுவரையில் பெற்றோர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளுள் காட்சிக்கு மிக இனியதும் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளை கொண்டு போகக்கூடியதுமான குழந்தை ஒன்றை அவர்கள் தங்கள் முன்னிலையில் கண்டார்கள். தங்களுடைய துன்பங்

களையெல்லாம் சிறிது நேரத்துக்கு அவர்கள் அறவே மறந்து விட்டார்கள். புன்முறுவல் பூத்த பச்சிளங்குழந்தை தன் அவயவங்களை அசைத்து விளையாடிக் கொண்டிருந்தது. சிசுவின் முகத்தின்மீது முத்தம் ஒன்றை நாட்டி மாதா தனது துன்பங்களையெல்லாம் அறவே மறந்து விட்டாள்.

இடம் மாறுதல்

மேலும் செய்யக்கிடக்கும் காரியம் யாது என்பதைத் தாயும் தந்தையும் திடீரென்று நினைந்தார்கள். கோகுலத் திற்குப் போவதற்காக வசுதேவன் குழந்தையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். கட்டுண்டு கிடந்த தனது காலை ஒரு உதறு உதறினன். கால் விலங்கு தானே கழன்று விழுந்தது. அடைப்பட்டுக் கிடந்த கதவருகே போனன். கீச்சென்று சத்தமிட்டுக்கொண்டு கதவு தானே திறந்தது. அந்த இரைச்சல் வசுதேவனை நடுங்கச் செய்தது. ஆனல் காவற்காரர்களெல்லாம் உறக்கத்தின் வசப்பட்டவர் களாய் மரக்கட்டைகள் போன்று அசையாது கிடந்தனர். இன்னும் ஆறு வாயில்களைக் கடந்தாகவேண்டும். வசுதேவன் வெளியே போகப்போக அவைகள் தாமே வழி திறந்தன. ஆங்காங்கிருந்த கண்காணிப்பாளர் குறட்டையிட்டுத் தூங் கிக் கொண்டிருந்தனர். சிறை கிடந்த வசுதேவன் விடுதலை பெற்று வெளியே வந்துவிட்டது அவர்களுக்குத் தெரியாது.

ஆவணி மாதம், கிருஷ்ணபட்சம். அஷ்டமியின் நள் ளிரவு. சல் சல் என்று மழை பெய்து கொண்டிருந்தது. விர் விர் என்று புயல் காற்று வீசிக்கொண்டிருந்தது. படலம் படலமாயிருந்த கார்மேகங்களைப் பிளந்துகொண்டு பளீர் பளீர் என்று மின்னல் வீசியது. தடதடவென்று இடி முழங்கியது. குழந்தையைத் தன் துணியில் மூடிக்கொண்டு வசுதேவன் திகைத்து நின்றான். கார் இருளில் கண்ணுக்கு

ஒன்றும் புலப்படவில்லை. இடையிடையே மின்னிய மின்னலைக் கொண்டு வழியை ஒருவாறு தெரிந்து கொண்டான். மெதுவாக நடந்து யமுனை நதிக்கரைக்கு வந்துவிட்டான். தெய்வாதீனமாகத் தந்தையும் சிசுவும் சிறிதேனும் மழையில் நனையவில்லை. ஆதிசேஷனே அவர்களுக்குக் குடையாகப் பின்தொடர்ந்து வந்தான் என்பது ஐதிகம். பின்பு ஆற்றங் கரையில் அவன் கண்ட காட்சி அவனை நடுங்கும்படி செய்தது. மிகு மழையின் விளைவாக அது பெருக்கெடுத்து ஓடியது. அதன்கண் எழும்பிய அலைகளும் சுழியோட்டங்களும் பார்க்கப் பயங்கரமாயிருந்தன. பிரவாகம் நிறைந்த இவ்வாற்றைக் கடப்பது எங்ஙனம் என்று வசுதேவன் கலங்கி நின்றான். அப்பொழுது நரி ஒன்று அதனுள் நடந்துபோவதைப் பார்த்தான். அதைப் பின்பற்றித் தானும் நடக்க அவன் எத்தனித்தான். நட்டாற்றினுள் போனபொழுது நீர் முழங்காலுக்கு மேல் வரவில்லை. ஆயினும் எதிர்பாராத மற்றொரு விபத்து வந்தது. தனது அஜாக்கிரதையால் குழந்தை கை நழுவி நீரினுள் வீழ்ந்து விட்டது. எவ்வளவோ விரைந்து தேடியும் அது தென்படவில்லை. வேகமாகப் பாய்ந்த நீர்ப்பெருக்கு அதை அடித்துக்கொண்டு போய்விட்டது. வசுதேவன் தலைதலையாகப் போட்டுக்கொண்டான். "தேவா, தமியேனாகிய என்னோடு இத்தகைய வீண்விளையாட்டுக்கள் எதற்காக! என் குழந்தையை இனி நான் எங்குக் காண்பேன்" என்று கதறியழுதான். அந்தோ, குழந்தையும் அவன் கண் எதிரில் நீர்மேல் மிதக்கிக்கொண்டிருந்தது. உடல் எடுப்பதும், அதை வைத்திருப்பதும், மறைத்துவிடுவதும் எல்லாம் கடவுளுக்கு விளையாட்டுப் போலும்! மிதக்கின்ற குழந்தையைக் கண்ட தந்தை ஆவலோடு அதை வாரியெடுத்தான்; நெஞ்சத்தோடு அணைத்துக் கொண்டான்;

திரும்பத்திரும்ப முத்தமிட்டான். நரி சென்ற வழியில் தானும் சென்றான். அக்கரை போய்ச் சேர்ந்துவிட்டான். மனமாரக் கடவுளைத் துதித்துவிட்டுக் கோகுலத்தை நோக்கி அவன் விரைந்து சென்றான்.

விந்தையுள் பெருவிந்தை! நந்தகோபனுடைய வீட்டு வாயில் திறந்திருந்தது. வசுதேவனுக்கு வரவழைப்பு காத்துக்கொண்டிருந்தது என்று இயம்பலாம். வீட்டின் உட்புறம் முழுதும் அவனுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தது. யசோதையின் அறைக்குச் சென்றான். யசோதையும் அவளுடைய தோழிமார்களும் தூக்கத்தில் மூழ்கிக்கிடந்தனர். அவளுக்குப் பெண் குழந்தையொன்று பிறந்திருந்ததை அவர்கள் யாரும் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. அப்பெண் குழந்தையானது அன்னையின் மடிமீது விளையாடிக்கொண்டிருந்தது. ஒரு நொடிப்பொழுதில் தன் கரத்தில் இருந்த ஆண் குழந்தையை யசோதையின் மடியில் வைத்துவிட்டு, ஆங்கிருந்த பெண் குழந்தையை வசுதேவன் பற்றியெடுத்துக்கொண்டான். தான் செய்த செயல் அவனுடைய உள்ளத்தைத் துளைத்தது. ஏனென்றால் தன் குழந்தையைக் காத்தல் பொருட்டுப் பிறர் குழந்தையைப் பலிகொடுக்கும் பாதகச் செயல் அது. ஆயினும் தெய்வத்தின் ஆணைப்படி அவன் அதைச் செய்தே ஆகவேண்டும்.

தன் மார்பில் இருந்த பெண் குழந்தையோடு அவன் வீதி வழியே வந்தான். யமுனைக்குச் சென்றான்; முன் போலவே அதை எளிதில் கடந்தான்; கம்சனுடைய சிறைச்சாலைக்கு விரைந்து ஓடினான். வாயில்களெல்லாம் திறந்தபடி கிடந்தன. காப்பாளர்களும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். ஏழு வாயில்களையும் தாண்டி வசுதேவன் சிறையினுள் சென்றான். அதன் பிறகு கதவுகள் தாமாகவே மூடிக்

கொண்டன. தாளிட்டுப் பூட்டுப்போடும் செயல்களும் தெய் வாதீனமாக நிகழ்ந்துவிட்டன. கண்ணீர் சிந்திக் கவலையில் ஆழ்ந்துகிடந்த தேவகியின் முன்னிலையில் மாற்றுங் குழந் தையை வைத்தான். ஆ, அந்தக் குழந்தையின் அழகை என்னென்பது! வெளியுலகிலே காரிருளுக்கிடையில் மின் னல் தோன்றி இன்பமூட்டியது. சிறைப்பட்டுக்கிடந்த தம்பதி களின் உள்ளத்தில் துன்பம் என்னும் காற்றும் கார்மேகமும் சூழ்ந்து கிடந்ததற்கிடையில் இக்குழந்தை ஊட்டிய இன்பம் மின்னல் போன்று இடையிடையே மின்னிக்கொண்டிருந் தது. இன்னும் அரைமணி நேரத்தில் தான் அறையுண்டு அழிந்துபட்டுப் போவதை அறியாது அச்சிசு ஆனந்தத்தில் ஊறியிருந்தது.

ஈசன் செயலுக்கு எதிர்ப்பு

'காவல் காத்திருந்தவர்கள் எல்லாரும் வைகறையில் வெகுண்டெழுந்தனர். தங்கள் குற்றத்தைக் குறித்து அவர் கள் நடுநடுங்கினர். ஆனால் அவர்கள் தண்டனையினின்று தப்பித்துக்கொள்ளுதற்கு உபாயம் ஒன்று இருந்தது. அரச னுடைய ஆணையை மீறி அயர்ந்து தூங்கியவன் ஒருவன் அல்லது இருவர் அல்லர்; அனைவருமே அப்படிச் செய்து விட்டனர். ஆதலால் தங்கள் குற்றத்தை அவர்கள் ஒன்று கூடி மறைத்து விட்டனர். முகம் தெளிந்தவர்களாய் சிறை யினுள் சென்று பார்த்தார்கள். அந்தோ, குழந்தையொன்று அவர்கள் கையில் குலாவிக்கொண்டிருந்தது. பெற்றோர்கள் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். எனினும் வெங்காவ லாளர் அதை வலியப்பிடுங்கிக்கொண்டு போய்விட்டனர். கம்சன் முன்னிலையில் அவர்கள் அதை வைக்கவே அவனுக் குக் கடுங்கோபம் மூண்டு விட்டது. இதில் ஏதோ சூழ்ச்சி நேர்ந்து விட்டது. ஆண் மகவு ஒன்று தனக்கு எதிரியாகத்

தோன்றும் என்றல்லவோ அன்று ஒருநாள் அசரீரி முழங்கிற்று. விரைந்து எழுந்திருந்தான்; வேகமாகச் சிறைச்சாலையை நோக்கிப் போனான்; வசுதேவனிடம் கண்டிப்பான வேவு விசாரணை செய்தான். ஆயினும் உளவு ஒன்றும் தெரிந்துகொள்ள இயலவில்லை. "பெண் குழந்தை ஒன்று எப்படி உமக்குப் பொல்லாங்கு செய்யும் பகையாகக் கூடும்? தயைகூர்ந்து அதன் உயிரைக் காப்பாற்றும்" என்று வசுதேவன் விண்ணப்பித்தான். அதட்டுகின்ற பாங்கில் கம்சன் கர்ஜித்தான். "என்னை என்ன மடையன் என்று எண்ணிக்கொண்டாயா? சூழ்ச்சி முழுதும் இப்பொழுது எனக்கு விளங்கி விட்டது. என் எதிரி எந்த வேடம் வேண்டுமானாலும் எடுக்க வல்லவன். அவன் இப்பொழுது வேண்டுமென்றே பெண் வேடம் போட்டு வந்துள்ளான். நான் அவனை மட்டும் விடப்போவதில்லை." இப்படி இயம்பி விட்டுக் காப்பாளர் புடைசூழத் திரும்பவும் தன் கொலு மண்டபத்துக்குப் போனான். ஆங்கு அப்பச்சைக் குழந்தை சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. பகடி பண்ணுவது போன்று இருந்த அதன் பார்வையானது கம்சனுடைய கல் நெஞ்சத்தைக் கலக்கியது. அவன் எதிரில் கல் ஒன்று இருந்தது. ஆனந்தத்தில் அமிழ்ந்திருந்த அச்சிசுவின் கால்களை உறுதியாகப் பிடித்து உயரத்தூக்கினான். கல்லின்மீது அச்சிசுவைச் சிதறடிக்கச் செய்வது அவன் கொண்டிருந்த தீர்மானம். ஆனால் உயரத்தூக்கப்பெற்ற சிசுவானது கம்சனுடைய கை நழுவி மேலும் உயரப்போனது. மேலே போகப் போக முன்பு யாரும் கேட்டறியாத குதூகலக் கேகை போட்டது அக்குழந்தை. மேலும் அதன் மேனி வடிவத்தில் பெரியது ஆனது. எட்டுக்கைகளையுடைய மங்கையாக அது மாறியது. கீழ்நோக்கிக் கம்சனைக் கடிகிற பாங்கில் அக்

காரிகை கூறுவாளாயினள்: "அடே அற்பா, எல்லாம் வல்ல பரமனுடைய பெருந்திட்டத்தைத் தகர்க்கவல்லவன் என்றல்லவா உன்னை நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உன்னை அழிப்பதற்கென்று வந்துள்ளவன் கோகுலத்தில் நந்தகோபன் வீட்டில் நலமுற்று வாழ்ந்திருக்கிறான்." இங்ஙனம் மொழிந்துவிட்டு அந்த மாயாசக்தியின் மேனி மறைந்து போய்விட்டது. கம்சன் நடுநடுங்கினான். சிறிது நேரம் அவன் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். பின்பு அவனுக்கு மெய்யுணர்வு வந்தது. அத்துடன் சிறிது நல்லுணர்வும் வந்தது. உண்மையில் தன்னை வதைக்க வந்திருப்பவன் தேவகி நந்தனன் அல்லன். ஒருவேளை அவன் நந்த நந்தனாக இருக்கலாம். அப்படியிருக்க தன் தங்கையையும் தங்கையின் கணவனையும் துன்புறுத்துவானேன்? இங்ஙனம் எண்ணி அவன் தேவகியையும் வசுதேவனையும் கடுங்காவலிலிருந்து மீட்டுவித்து வெறுங்காவலில் வைத்தான். காக்கும் தெய்வம் அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்ததின் பயனாக அவர்களின் கஷ்டத்தில் பெரும்பகுதி கரைந்து போய்விட்டது. முழுதும் விடுதலை பெறும் நாளை எதிர்பார்த்து அவர்கள் அண்ணலை வழுத்தி அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

கோகுலத்தில் அன்று காலையில் ஒரே கொண்டாட்டம். நெடுநாளாகப் புத்திரப்பேறு இல்லாதிருந்த நந்தகோபனுக்கு ஆண்மகவு ஒன்று முளைத்துள்ளது. யசோதையையும் நந்தகோபனையும் பாராட்டுதற்கு ஊரார் அனைவரும் அங்குக் கூடினர். ஆடல் பாடல் மிக நடந்தேறின. வந்திருந்தவர்களுக்கெல்லாம் விதவிதமான பால் பட்சணங்கள் வேண்டியவாறு வழங்கப்பட்டன. அன்று துவங்கிய அந்த கோகுலாஷ்டமி விழா இன்றுவரை ஆண்டுதோறும் நாடெங்கும் நடைபெற்று வருகிறது. மதுராபுரியில் ஒருத்தி மகனாய்ப் பிறந்த குழந்தை, கோகுலத்தில் மற்றொருத்தி மகனாய் நன்கு வளர்ந்து வந்தது.

3. கடவுளை எதிர்த்து மானுட முயற்சிகள்

வலைக்கு அகப்படாத சிசு

இதற்கிடையில் கம்சன் தன் காரியத்தில் கண்ணுங் கருத்துமாய் இருந்துவந்தான். தக்க வேவுகாரர்களை உடனே கோகுலத்துக்கு அனுப்பிவைத்தான். அவர்களும் தங்கள் வேந்தனை வெருளச் செய்கின்ற செய்திகளை அதிவிரைவில் கொண்டுவந்தார்கள். கோகுலத்தில் நந்தகோபனுக்கு நந்தனன் ஒருவன் வாய்த்திருப்பதை அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இனி என்செய்வது என்னும் கேள்வி கம்சன் மனதில் எழுந்தது. வான் ஒலியாகத் தனக்கு வந்த செய்திகளிலேயே விபரீதங்கள் தென்படுகின்றன. தங்கையாகிய தேவகியின் எட்டாவது மைந்தன் தனக்கு ஒவ்வாதவன் என்பது முதல் செய்தி. ஆனால் அவளுடைய எட்டாவது வாய்ப்பு ஆண்மகவு அல்லாது போய்விட்டது. பிறந்த பெண் மகவு ஏதோ ஒன்றைப் பிதற்றிவிட்டுப் போயிருக்கிறது. அதில் கொஞ்சம் உண்மையும் கலந்திருக்கிறது. மற்றும் நந்தகோபனே தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசன். எப்பொழுதும் தனக்கு அடிபணிந்து நடப்பவன். வெளிப்படையாக அவனைப் பகைத்துக்கொள்வது பொருந்தாது. ஆயினும் அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்திருப்பவனை வஞ்சகமாக வீழ்த்திவிடுவது உசிதம். இல்லையேல் இடுக்கண் நேரிடலாம். முளையில் கிள்ளமுடியாவிட்டால் மரமான பிறகு அதை என்ன செய்யமுடியும்? இங்ஙனம் தனக்குள் தீர்மானம் செய்து கொண்டான்.

உயிர்களுக்குக் கேடுவிளைவிக்கின்ற பாங்குடையவர்கள் எக்காலத்திலும் உண்டு. அன்னவர்களுக்கு அசுரர் என்பது பொதுப்பெயர். அரக்கர்கள் என்றும் அவர்கள்

இயம்பப்பெறுவார்கள். மற்ற உயிர்களைத் துன்புறுத்தலி லேயே அவர்களுக்குப் பெருமகிழ்வு உண்டாகிறது. அதற்கு விதவிதமான முறைகளை அவர்கள் கையாளுவார்கள். அந் தக்காலத்தில் அவர்கள் பில்லிசூனிய வித்தைகள் பல கற் றிருந்தார்கள். உருமாறித் தோன்றுதல், கூடுவிட்டுக் கூடு பாய்தல் போன்ற சில கொடிய கலைகளை அவர்கள் கற்றிருந் தார்கள். அவைகளைக்கொண்டு மக்களுக்கு நலன் ஒன்றும் செய்துவிட முடியாது. வேண்டியவாறு அவர்களைத் துன் புறுத்துதற்கே அப்புல்லிய பயிற்சிகள் பயன்பட்டு வந்தன.

பூதனை என்ற அரக்கி ஒருத்தி அக்காலத்தில் இருந் தாள். அவள் பொல்லாத ராட்சஸி. வேண்டிய வடிவெடுக்க அவளுக்குத் தெரியும். சிசுவதையில் அவள் கைதேர்ந்தவள் வஞ்சகமாகப் பல குழந்தைகளை அவள் கொன்றிருக்கிறாள். கம்சனுக்கு அவளைப்பற்றி நன்றாகத் தெரியும். தனது எண் ணம் நிறைவேறுவதற்கு அந்த அசுரப் பெண்ணைப் பயன் படுத்த அவன் முடிவுகட்டிக்கொண்டான். கோகுலத்தில் நந்தகோபன் வீட்டில் இருந்த குழந்தைக்குப் பாலூட்டி அதைக் கொன்றுவிட்டு வரும்படி அவன் ஏவினான். அந்த அரக்கியும் அதற்கு மகிழ்வுடன் இசைந்தாள். ஏனென்றால் அதுவே அவளுக்கு விருப்பமான தொழிலாய் இருந்து வந்தது.

கட்டழகே வடிவெடுத்த காரிகையாக அவள் தன்னை உருமாற்றியமைத்துக்கொண்டாள். நற்குடியில் பிறந்து நல் லியல்பே வடிவெடுத்த நங்கையாக அவள் காட்சியளித்தாள். பிறந்த பிள்ளையைப் பார்க்கப் பெண்பாலர் பலர் நந்தகோ பன் வீட்டுக்கு வந்துகொண்டே இருந்தனர். அழகிற் சிறந்த பூதனையும் ஆங்குச் சென்று அமர்ந்துகொண்டாள். அவள் யார் என்று யாருக்கும் விளங்கவில்லை. ஏதோ ஒரு பெரிய

குடும்பத்திலிருந்து வந்துள்ள பெம்மாட்டியென்று அவர்கள் எண்ணினார்கள். குழந்தையை எடுத்துச் சீராட்டிப் பாராட்ட அவள் முற்பட்டாள். அது ஏற்புடைய செயலாதலால் அதற்கு யாரும் தடை செய்யவில்லை. ஆனால் என்ன நோக்கத்துடன் அவள் அதில் ஈடுபட்டாள் என்பது அவளுக்குத் தெரியும். ஒன்றும் தெரியாத குழந்தைபோன்று காட்சி கொண்டு கண்ணைமூடிப் படுத்திருந்த கடவுளுக்கு இன்னும் நன்றாகத் தெரியும். கொடிய விஷங்கலந்த தனது முலைப் பாலைப் பாலகனுக்கு ஊட்டினாள். மானுட வடிவெடுத்து மண்ணுலகில் வந்திருந்த மாயோனது திருவிளையாடல் இப்பொழுது துவங்கியது. அந்த மாதின் முலையினின்று சுரந்து வந்த நஞ்சையெல்லாம் அமுதாக மாற்றி அவன் அருந்தினான். மேலும் அவளுடைய முலைக்காம்பைச் சப்பி உறிஞ்சினான். உறிஞ்ச உறிஞ்ச அவளுடைய உடலெங்கும் வியாபித்திருந்த உயிரே உறிஞ்சி எடுக்கப்பட்டது. கோவென்று கதறி அவள் பிணமாகக் கீழே சாய்ந்தாள். மாயமாகப் பூண்டிருந்த கட்டழகு பூதனையைவிட்டுப் போய் விட்டது. பேய்க்கோலம் போன்று அவளுடைய பிணம் புலனாயிற்று. பாலகனோ அந்தப் பொதியுடம்பின்மீது தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தான். ஊரார் அனைவரும் ஒன்றுகூடி அந்த உடலத்தை எடுத்துச் சென்று நெருப்புக்கு இரையாக்கினர். யசோதையின் இளங்குழந்தைக்கு மேலும் இன்னல் ஒன்றும் வாராதிருக்கவேண்டும் என்று இறைவனை வழுத்தினார்கள். பிறர் உயிரை வாங்க வந்த உயிரை இறைவனே உறிஞ்சி எடுத்துவிடுகிறார். இக்கோட்பாட்டுக்கு எக்காலத்திலாவது எவரேனும் விலக்காவது கிடையாது.

சூழ்ச்சிக்கார அரக்கர்கள் ஒருவன் பின் ஒருவனை இந்த தெய்வக் குழந்தையின்மீது படையெடுத்து வந்தார்

கள். இரண்டொரு நிகழ்ச்சிகளை ஈண்டு இயம்புவது பொருந்தும். ஒருநாள் யசோதையின் குழந்தை ஒரு வண்டிக் கடியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த வண்டியில் தயிர்க் குடங்களும் ஏனைய பண்டங்களும் ஏராளமாய் ஏற்றப்பட்டிருந்தன. சகடாசுரன் என்பவன் ஒருவன் அந்த வண்டியின் பளுவைப் பன்மடங்கு அதிகப்படுத்தினான். அதை ஒடித்துத் தள்ளிக் குழந்தையை நசுக்கிக் கொன்றுவிட அவன் தீர்மானித்திருந்தான். அவன் எண்ணியபடி வண்டியும் ஒடிந்து பண்டங்களெல்லாம் கீழே விழுந்தன. என்ன விந்தை! குழந்தையின்மீது ஒரு பொருளும் விழவில்லை. பின்பு அக் குழந்தை கொடுத்த சிறு உதையால் சகடாசுரன் சவமாகக் கீழே சாய்ந்தான்.

தனது அழகிய செல்வனை யசோதை ஒரு தடவை மார்பில் அணைத்துக்கொண்டு கொஞ்சி விளையாடினாள். திடீரென்று குழந்தையின் கனம் அதிகரித்தது. அதைத் தாங்க முடியாத தாய் தனயனைத் தரையில் வைத்தாள். அத்தருணத்தை த்ருணவர்த்தன் என்னும் அசுரன் பயன்படுத்த எத்தனித்தான். புயல்காற்றாக வடிவெடுத்துவந்து பாலகனை அவன் உயரத் தூக்கிச் சென்றான். பின்பு ஓங்கித் தரையில் அடித்துக் குழந்தையைக் கொன்றுவிடுவது அவன் கொண்டிருந்த தீர்மானம். ஆனால் உயரச் சென்றதும் அந்த அசுரனால் தாங்கமுடியாத பெரும் பாரம் படைத்தவன் ஆனான் பாலகன். அந்த பாரத்தால் அமிழ்த்தப்பட்டவனாய் அசுரன் ஊர் நடுவில் விழுந்து உயிர் துறந்தான். அவ்வேளையில் அவன் ஓலமிட்டது ஊரையே நடுங்கச்செய்தது. நிகழ்ந்தது யாது என்று பார்க்கச் சென்ற ஊரார் பாறைபோன்ற ஒரு பிணத்தின்மீது தங்கள் கோமானின் குழந்தை தவழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டு வியந்தார்கள். தன் மகனைக்

காணாது மருண்டுகிடந்த யசோதையிடம் அவர்கள் அவனைக் கொண்டு சேர்த்தார்கள். மகனைக் கண்ட மாதாவும் மட்டில்லா மகிழ்ச்சியடைந்திருந்தாள்.

நாமகரணம் சூட்டுதல்

கர்காசாரியர் என்னும் பிராம்மணோத்தமர் ஒருவர் அக்காலத்தில் வசித்து வந்தார். அவர் நந்தகோபனுடைய மாளிகைக்கு ஒருநாள் வந்து சேர்ந்தார். ஆயர்குலத்து அரசனும் அவரை அன்போடும் ஆதரவோடும் வரவேற்றான். பின்பு தன் இல்லத்தில் வளர்ந்து வந்த ரோஹிணியின் மகனுக்கு நாமகரணம் சூட்டிவைக்கும்படி அந்த ஆசாரியரிடம் நந்தகோபன் பணிவோடு கேட்டுக்கொண்டான். கர்காசாரியர் மறுமொழி கூறுவாராயினர்: "நான் யாதவர்களுக்குப் புரோகிதன். இந்தப் பிள்ளைகள் இருவருக்கும் நான் பெயர் வைத்தால் ஏற்கனவே கம்சன் கொண்டுள்ள சந்தேகம் ஊர்ஜிதம் ஆய்விடும். தேவகியின் எட்டாவது வாய்ப்பாக வந்த யோக மாயை, கம்சனுடைய நாசகாரி, நந்தகோபன் வீட்டில் வளர்ந்து வருகிறான் என்று எச்சரிக்கை செய்துவிட்டு மறைந்து போயிற்று. ஆகையால் உன் மகன் ஒருவேளை தேவகியின் மகனாய் இருக்கக்கூடுமோவென்று கம்சன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறான். நான் நாமகரணம் சூட்டினால் உன் மைந்தனை தேவகியின் மைந்தன் என்றே கம்சன் முடிவுகட்டிவிடுவான். பின்பு உன் பிள்ளையின் உயிருக்கு ஆபத்து வந்துவிடும்." இங்ஙனம் புரோகிதர் பகர்ந்ததை ஆயர்கோன் ஆவலோடு கேட்டான். ஆயினும் அவன் ஆசையை நிறைவேற்ற அவன் உபாயம் ஒன்று சொன்னான். அவர்கள் இருவரைத் தவிர வேறு யார்க்கும் தெரியாத வண்ணம் அச்சடங்கைச் செய்து முடிக்கும்படி அவன் விண்ணப்பித்தான். கர்காசாரியரும் மூத்த பிள்ளைக்

குப் பலராமன் என்றும் இளையவனுக்குக் கிருஷ்ணன் என்றும் பெயர் வைத்துவிட்டுப் போய்விட்டார். கிருஷ்ணன் என்றால் கருப்பு நிறமுடையவன் என்பது பொருள்.

ஆற்றலை விளக்கும் விளையாட்டுக்கள்

இப்பொழுது பாலகிருஷ்ணன் பலராமனோடும் ஏனைய சிறுவர்களோடும் இங்குமங்கும் ஓடி விளையாடினான். விளையாட்டுக்கிடையில் அவன் வாய் நிறைய மண்ணைப்போட்டு விழுங்கினான். மற்றவர்கள் பறந்தோடி வந்து அதைத் தாய் யசோதையிடம் தெரிவித்தார்கள். குழந்தையின் உடலுக்கு ஏதாவது கேடு வந்துவிடுமென்று அஞ்சி அவள் அவன் வாயைத் திறக்கச் சொன்னாள். விளையாட்டுக்காக பாலன் வடிவெடுத்திருந்த பகவான் ஹரி தமது வாயைத் திறந்து காட்டினார். ஓர் அண்டமே அதனுள் தென்பட்டது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, மலைகள், ஆறுகள், எண்ணிறந்த உயிர்வகைகள் அவன் வாயினுள் தென்பட்டன. தாயோ திகைத்துப் போய்விட்டாள். பாலனும் உடனே அக்காட்சியை மறைத்து விட்டான். பிறகு தாயினுடைய ஞாபகத்திலிருந்து அந்த விசுவரூபக் காட்சியையும் நீக்கி விட்டான்.

குட்டிக் கிருஷ்ணன் குறும்பே வடிவெடுத்தவனாக இலங்கினான். ஒரு தடவை அவனுடைய குறும்புத் தனத்தைக் சகிக்கத் தாய்க்கு இயலவில்லை. கயிறு போட்டு அவனைக் கட்டி வைத்துவிட அவள் தீர்மானம் செய்தாள். கட்டக் கட்டக் கயிறுமட்டும் போதவில்லை. வீட்டில் இருந்த கயிறு எல்லாம் கையாளப்பட்டன. இன்னும் போதவில்லை. தாயும் சலிப்படைந்து போய்விட்டாள். கடைசியாகக் கட்டுக்கு உட்பட அவன் உள்ளங்கொண்டான். அவனை ஓர் உரலோடு பிணைத்துக் கட்டி வைத்துவிட்டுத் தாய் தன் காரியங்களைப்

பார்க்கப் போய்விட்டாள். உரலைத் தன்னோடு இழுத்துக் கொண்டே சிறுவன் இங்குமங்கும் தவழ்ந்து சென்றான். அண்மையில் பக்கம் பக்கம் இரண்டு மரங்கள் நின்றுகொண்டிருந்தன. சிறுவன் நுழைவதற்கு ஏற்ற இடைவெளி இருந்தது. நெளிந்து வளைந்து அவன் அதனுள் நுழைந்து விட்டான். அவன் இழுத்துச் சென்ற உரலோ சந்தில் சிக்கிக் கொண்டது. சிறுவன் அதை விரைந்திழுத்தான். இரண்டு மரங்களும் பெயர்ந்து கீழே விழுந்தன. அதனால் சிறுவனுக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடவில்லை. இரண்டு மரங்களும் சாபம் நீங்கி குபேரனுடைய இரண்டு குமாரர்களாக விண்ணுலகுக்குப் போய்விட்டார்கள். இடுப்பில் கயிறிட்டுக் கட்டப்பட்டிருந்ததால் கிருஷ்ணனுக்குத் தாமோதரன் என்னும் பெயர் வந்தது.

கோகுல வாசிகள் அனைவருக்கும் மிக விருப்பமான செல்வனாக் கிருஷ்ணன் திகழ்ந்தான். அவனுக்கு அன்புடன் உணவு ஊட்டுவதில் அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி. ஆனால் அவன் தனியாக உணவு ஏற்பது கிடையாது. ஆயர்பாடி இடையர் கூட்டம் ஒன்று எப்பொழுதும் அவனைச் சூழ்ந்து கொண்டே இருக்கும். தனக்குத் தின்பண்டங்கள் தருவது போன்று தன் தோழர்களுக்கும் தந்தாலொழிய அவன் திருப்தியடையான். புதியதாகக் கடைந்தெடுத்த வெண்ணெய்க்கு நவநீதம் என்று பெயர். அதில் கண்ணனுக்கு விருப்பம் அதிகம். ஆகையால் அவனுக்கு நவநீதகிருஷ்ணன் என்னும் பெயர் வந்தது. கோபியர் பலர் கண்ணனுக்கு வெண்ணெய் கொடுப்பார்கள். ஆனால் ஏனைய கோபாலர்களுக்குக் கொடுக்க மறுத்துவிடுவார்கள். அவர்களுடைய குறுகிய மனப்பான்மை கிருஷ்ணனுக்குப் பிடிக்கவில்லை. எல்லார்க்கும் வெண்ணெய் கொடுக்க மறுத்தால் அதைத்

தான் திருடி மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவதாகச் சபதம் கூறுவான். அவனுடைய முயற்சி வெற்றி பெருது என்று முதியோர் சபதம் கூறிச் சிறுவர்களுக்கு எட்டாத உயரத்தில் உறிகளில் வெண்ணெயைப் பத்திரப்படுத்துவார்கள். முதியோர்களுடைய முன் எச்சரிக்கைகள் அத்தனையையும் மீறி முகுந்தன் தந்திரமாக வெண்ணெயைத் திருடித் தன் கூட்டாளிகளுக்குப் பங்குபோட்டுவிடுவான். திருடுதலில் அவன் ஒருபொழுதும் தோல்வியடைந்தது கிடையாது. பின்பு திருடிய பண்டத்தை உண்கிற வேளையில் வேண்டுமென்றே அகப்பட்டுக்கொள்வான். கொடுக்கின்ற தண்டனையையும் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வான். அவனுடைய முகவிலாசத்தையும் மனப்பான்மையையும் பார்த்த தாய்மார்களுக்கு மனம் இளகிவிடும். அவனைத் தண்டிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தவர்களுக்கு தயாளகுணம் தானுக வந்துவிடும். வெண்ணெயை அபகரிப்பதில் அவன் விதவிதமான உபாயங்களைக் கையாண்டான். ஊர்ப்பிள்ளைகளுக்கு அவ்வுணவைப் பங்குபோட்டது போன்று குரங்குக்கும் பூனைக்கும் பங்கு போடுவான். உயிர்கள் அனைத்தையும் ஒரே பாங்கில் நேசித்தது அவனுடைய தனி இயல்பாகும்.

அவனுடைய விளையாட்டின் மூலம் வாழ்க்கைக்குரிய மற்றொரு தத்துவத்தை அவன் விளக்கிக் காட்டினன். செல்வத்துக்கு அறிகுறியாய் அக்காலத்தில் வெண்ணெய் இருந்தது. செல்வத்தைச் சம்பாதிப்பது நன்று. ஆனல் அதைத் தனக்கென்றே வைத்துக்கொள்ளுதல் தீது. தனக்கென்றே தேடிவைத்த தேட்டையை இயற்கைத்தாய் ஏதேனும் ஒரு விதத்தில் அபகரித்துக்கொண்டு போய்விடுகிருள். தேடிய பொருளைப் பிறர்க்குப் பறிகொடுப்பதைவிட மன்முவந்து

அதை அவர்களுக்கு அளிப்பது உத்தமம். கண்ணன் விளையாடுவதுபோன்று காட்டிய வழி அதுவேயாம். அந்த நல் வழியைக் கடைப்பிடிப்பவர் மேன்மையுறுகின்றனர். மற்றவர் கீழ்மையுற்றுத் துன்பத்துக்கு ஆளாகின்றனர். இது எக் காலத்திலும் நிகழ்கிற நிகழ்ச்சி. தனது விளையாட்டின்மூலம் கிருஷ்ணன் இதை விளக்கியுள்ளான்.

பிருந்தாவனத்துக்குப் போதல்

கோகுலவாசிகளைத் துன்புறுத்துதற்குக் கம்சன் அடிக்கடி அரக்கர்களை அனுப்பி வைத்தது நந்தகோபனுக்குப் பிடிக்கவில்லை. ஊராருடன் அவன் கூட்டம் ஒன்றுகூட்டி ஆலோசனை செய்தான். சற்று தூரத்தில் யமுனை நதிக் கரையில் இருந்த பிருந்தாவனம் தங்களுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமான இடம் என்று அவர்கள் முடிவுகட்டினார்கள். அது வனப்பு மிக வாய்ந்த இடம். பார்ப்பதற்கு அது பிரீதிகரமானது. விண்ணுலகோடு போட்டிபோடுகிற பாங்கில் அது மண்ணுலகில் அமைந்துள்ள ஒரு பகுதியாகும். அத்தகைய பூங்காவுக்குக் குடியேறிவிட கோகுல வாசிகள் ஏகோபித்துத் தீர்மானம் செய்தனர். தங்களுடைய மனைவி மக்கள், ஆடுமாடு, தட்டுமுட்டு, மூட்டை முடிச்சு ஆகியவைகளைச் சேகரித்துக்கொண்டு அவர்கள் புறப்பட்டுப் போயினர். அப்பொழுது கிருஷ்ணனுக்கு வயது ஐந்து.

பிருந்தாவனத்துக்குக் குடியேறியவர்கள் இயற்கையழகுக்குச் செயற்கை அழகையும் ஊட்டினர். அதிவிரைவில் வீதிவீதியாக வீடுகளும் ஆங்காங்கு தேவாலயங்களும் உருவெடுத்துவிட்டன. அணியணியாக மாட்டுத் தொழுவங்களும் அமைக்கப்பட்டன. உலாவும் விலங்குகளுக்கும் பாடிக் குலாவும் பறவைகளுக்கும் இருப்பிடமாயிருந்த கானகம் இப்பொழுது மானுடர் கலகலவென்று மகிழ்வுற்று வாழும்

நல்லூர் ஆய்விட்டது. அதற்கு அருகில் கோவர்த்தனம் என்னும் குன்று ஒன்று இருந்தது. அதைச் சுற்றிலும் தென்பட்ட காட்சி காண்பதற்கு இனியதாய் இருந்தது. நந்த கோபன் வீட்டில் மானுட வடிவெடுத்து வந்து வசித்திருந்த இறைவனுக்காகவென்றே இயற்கைத்தாய் அந்த இடத்தை அங்ஙனம் அலங்கரித்து வைத்திருந்தாள் போலும்! பறவைகள் பாடி அப்பரமனைப் போற்றலாயின. யமுனை நீர் தன் தலைவன் முன்னிலையில் தாண்டவம் புரிந்துகொண்டு போயிற்று. இனிய தென்றல் கண்ணனுக்கு ஆலவட்டம் வீசியது. மரங்களோ நறுமணம் செறிந்த மலர்களை அம் மாயோன்மீது தூவின. இயற்கைத்தாயின் ஒவ்வொரு பகுதியும் கண்ணனுடைய வழிபாட்டுக்கென்றே அமைந்தது போன்று காட்சி கொடுத்தது. வசதிகள் அனைத்தும் வாய்ந்த நல்வாழ்வை ஆயர்கள் பிருந்தாவனத்தில் இனிது வாழ்ந்து வந்தனர். கண்ணனை அவர்கள் கோபாலன் என்று அழைத்து வந்தனர்.

கோபாலன் சுறுசுறுப்பே வடிவெடுத்தவன். சிறிது நேரம்கூட அவன் செயலற்றுச் சும்மா இருக்கமாட்டான். கோபிகைச் சிறுமிகளை அவன் அடிக்கடி அல்லல் படுத்துவான். அவன் பண்ணும் தொந்தரவுகளைச் சகிக்கமுடியாது அச்சிறுமிகள் ஒரு கும்பலாய்க் கூடித் தாய் யசோதையிடம் போய் முறையிடுவார்கள். குறும்பு அரும்பிய சிறுவனைத் தண்டிக்கத் தாய் முற்பட்டபொழுதெல்லாம் அவர்கள் அவனை அடிக்கவேண்டாமென்று வணங்கி வேண்டிக்கொள்வார்கள். குறும்புக்காரன் எனினும் கண்ணனிடத்து அவர்களுக்குக் கரைகாணாத அன்பு பெருகிவந்தது. கோபச் சிறுவர்களுக்கிடையில் கண்ணன் எப்பொழுதுமே தலைவன். ஒரே ஒரு இளைஞனுக்குமட்டும் அவன் தயக்கமின்றிக் கீழ்ப்படிந்து

நடந்துகொள்வான். அன்னை ரோஹிணியின் மைந்தன் பலராமனுக்கு மீறி அவன் நடந்துகொள்ளமாட்டான். நாள் தோறும் காலையில் கோபச் சிறுவர்கள் கானகத்துக்கு மாடு மேய்க்கப் புறப்படுவது காண்பதற்கு அரிய காட்சியாயிருக்கும். பலராமனும் கிருஷ்ணனும் அவர்களுக்குத் தலைமை வகிப்பதே அந்த இனிமைக்கு மூலகாரணமாகும். மகிழ்வோடு அவர்கள் மந்தைகளை ஓட்டிச் செல்வார்கள். வனத்தினுள் விதவிதமான விளையாட்டுகள் நடைபெறும். இதற்கிடையில் அவர்களுக்குப் பெருஞ்சோதனைகள் பல சம்பவிக்கும். கம்சனுடைய கொடிய முயற்சிக்கு இன்னும் முடிவு வந்துவிடவில்லை. விதவிதமான வடிவெடுத்திருந்த அசுரர்களைப் பிருந்தாவனத்துக்கு அவன் ஏவி வந்தான். எப்படியாவது கோபாலனைக் கொன்றுவிடுவது ஒன்றே அவர்கள் கொண்டிருந்த கொள்கை. ஆதலால் ஆயர் சிறுவர்களுக்கு ஆபத்தானது ஒரு நாளைக்கு ஒரு வடிவெடுத்து வந்து வாட்டும். பலராமனும் கோபாலகிருஷ்ணனும் அக்கொடிய விபத்துக்களை விளையாட்டாகவும் வெற்றியுடனும் சமாளிப்பார்கள். அப்போதைக்கப்போது அவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைப்பற்றி இடைச் சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களிடம் பதைபதைப்போடு பகர்வார்கள். வனாந்தரத்துக்குள் சிறுவர்களைச் செல்லவொட்டாது தடுத்து விடத் தாய் தந்தையர் பல தடவைகளில் தீர்மானித்தார்கள். இரவு நேரம் முழுதும் அந்தத் தீர்மானம் நடைமுறையில் இருக்கும். காலை நேரம் வந்ததும் கண்ணன் காளைகளை ஓட்டுவது போன்று காளைச் சிறுவர்களையும் தன்னோடு அழைத்துக் கொண்டு போய்விடுவான். வாழ்க்கையை வந்து தாக்குகின்ற நோய் வகைகளைக் குறித்துக் கோழைகள் அஞ்சுகின்றனர். உறுதிபடைத்தவர் அஞ்சுவதில்லை. நோயை ஒழிக்க

அவர்கள் முற்படுகின்றனர். பிருந்தாவன வாழ்க்கையைப் பிடிப்பதற்கு உற்ற நச்சு நோய் போன்று அரக்கர் குழாம் அதன்மீது மறைமுகமாகப் படையெடுத்து வந்தது. அப் புல்லிய நோயைப் போக்கவேண்டும் என்னும் எண்ணம் கொண்டே கண்ணன் ஆங்கு அவதரித்து வந்திருந்தான்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அமைந்துள்ள பல பெயர்களில் ஹ்ருஷிகேசன் என்பது ஒன்று. இந்திரியங்களையெல்லாம் நன்கு அடக்கி ஆள்பவன் என்பது அதன் பொருளாகும். எவன் ஒருவன் தனது மனதையும் இந்திரியங்களையும் நன்கு கட்டியாள்கின்றானோ அவனுக்கு அலாதியான ஆத்ம சக்தி உண்டாகிறது என்று யோக சாஸ்திரம் பகர்கிறது. இப் பெருநூலில் பகர்ந்துள்ள மேலாம் கோட்பாடுகளுக்கெல் லாம் விளக்கமாகக் கிருஷ்ணன் தென்பட்டான். எனவே, நாளடைவில் அவனுக்கு யோகேசுவரன் என்ற சிறப்புப் பெயரும் வந்தது. அதற்குச் சான்றுகளாகச் சில சம்பவங்கள் அவனுடைய சிறுவயதிலேயே நிகழ்வனவாயின. வழக்கம் போன்று இடையச்சிறுவர்கள் ஆடு மாடு மேய்க்க வனத்துக்குள் போய்க்கொண்டிருந்தனர். அப் பொழுது அகன் என்னும் அசுரன் ஒருவன் ஒரு பெரிய பாம்பின் வடிவெடுத்து அங்கே வாயைப் பிளந்துகொண்டு படுத்திருந்தான். ஒரு மலையில் உள்ள பெரிய குகைபோன்று அது காட்சி கொடுத்தது. அந்தக் குகைக்குள் இருப்பவை களை வேடிக்கை பார்க்கும் பாங்கில் பசு மேய்க்கும் பிள்ளை கள் நுழைந்தார்கள். அவர்கள் எல்லார்க்கும் கடைசியில் போனவன் கிருஷ்ணன். அதுவரையில் அமைதியாகக் காத் திருந்த அகன் மலை நுழைவு போன்ற வாயை மூடினான். உள்ளிருந்தவர்கள் அனைவரும் உயிரை இழந்தவர்கள் போன்று மூர்ச்சை போய்விட்டனர். கிருஷ்ணனுக்கு மட்டும்

அந்தக் கஷ்டதசை விளங்கிற்று. அவன் திடீரென்று தனது உடலை மற்றொரு மலைபோன்று பெரியதாக்கினன். அகாசுரனும் வாய்வெடித்து மாண்டுபோனன். அப்பெரும் பிணத்தினுள் சிறு பிணங்கள்போன்று விறைத்துக் கிடந்த வாலிபர்களையெல்லாம் கோபாலன் வெளியே இழுத்து வந்தான். சிறிது நேரத்திற்குள் அவர்கள் உயிர்பெற்று எழுந்திருக்கும்படியும் செய்தான். அதில் வியப்பு ஒன்றுமில்லை. ஏனென்றால் அவன் யோகேசுவரன். பஞ்ச பூதங்களுக்கும் பிராணனுக்கும் அவனே தலைவன். விஷத்தை அமிர்தமாக மாற்றும் திறமை அவனுக்கு இருந்தது. உயிர் அற்றதை உயிர் உற்றதாக்கவும் அவனுக்கு இயன்றது.

4. தேவர்களுக்கு மேலான தெய்வம்

பிரம்மதேவனுக்கும் முதல்வன்

உண்மையில் சர்வேசுவரனுக்கு எது சாத்தியமோ அது இந்தக் கண்ணன் என்னும் சிறுவனிடத்துத் தென்பட்டது. படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவன் இந்த அதிசயச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தார். கிருஷ்ணனுடைய ஆற்றல் முழுவதையும் தெரிந்துகொள்ள அவர் முன்வந்தார். இடைச் சிறுவர்கள் அனைவரும் ஒருநாள் யமுனை தீரத்தில் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது பிரம்மதேவன் அவர்களுடைய கன்றுக்குட்டிகளையெல்லாம் எங்கேயோ கொண்டுபோய் மறைத்து வைத்து விட்டார். காணமற்போன கன்றுக்குட்டிகளைக் குறித்து அவர்கள் அழ ஆரம்பித்து விட்டனர். கால்நடைகளைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும் என்னும் கருத்துடன் கண்ணனும் காட்டுக்குள்ளே சென்றான். இப்பொழுது இந்த

இடையப் பையன்களையும் பிரம்மா தூக்கிக்கொண்டு போய் விட்டார். சிறுவர்களையும் கன்றுக்குட்டிகளையும் ஒரு குகைக்குள் கொண்டுபோய் ஒருவிதமான தூங்குகின்ற நிலையில் பிரம்மதேவன் அவர்களை வைத்து விட்டார்.

கன்றுகளைத் தேடுதலில் தோல்வியடைந்து திரும்பி வந்த தாமோதரன் தனது தோழர்களையும் நதிக்கரையில் காணவில்லை. இதற்குள் சாயங்காலம் வந்து விட்டது. இதெல்லாம் பிரம்மாவின் செயல் என்பதைக் கண்ணன் யோக சித்தியில் அறிந்துகொண்டான். அவர்கள் எல்லாரும் பத்திரமாக வீட்டுக்குத் திரும்பாவிட்டால் பெற்றோர்கள் வருத்தப்படுவார்கள். ஆதலால் கிருஷ்ணன் யோக வலிமையால் தனது மனத்தகத்திலிருந்து அத்தனை ஆயர் சிறுவர்களையும் ஆடுமாடுகளையும் உண்டுபண்ணினான். கனவு காண்கிறபொழுது இப்படி மனிதர்களையும் மற்றவர்களையும் உண்டுபண்ணுகிற சக்தி நமது மனதுக்கு வருகிறது. ஆனால் அந்த சக்தி வெறுங்கனவாய்ப் போய்விடுகிறது. கண்ணனுக்கோ தனது யோக மகிமையினால் அத்தனை உயிர்களையும் தன் மனதிலிருந்தே உண்டுபண்ண முடிந்தது. தீக்கொள்ளியை ஊதி, அதிலிருந்து தீப்பொறிகள் பறக்கும்படி நாம் செய்வதுபோன்று யோகி ஒருவன் தன் மனதைக்கொண்டே தன்னைப் பல வடிவங்களாக அமைத்துக்கொள்ள முடியும் என்று யோக சாஸ்திரம் பகர்கிறது. தான் உண்டுபண்ணிய இடையர்களையும் ஆடுமாடுகளையும் கண்ணன் ஊருக்குள் நடாத்திச் சென்றான். இத்தனை உயிர்களும் கிருஷ்ணனுடைய மனதில் தோன்றி வந்தவர்கள் என்பதை ஊரார் கண்டு பிடிக்க முடியவில்லை. தங்களுடைய சொந்தப் புதல்வர்களும் பெற்றங்களும் பிரம்மாவால் ஒருவித மயக்க நிலையில் மறைத்து வைக்கப்பட்டனர் என்பதும் அவர்களுக்குத்

தெரியவில்லை. அன்று மாலையில் தங்களிடம் வந்து சேர்ந்த சிறுவர்களைத் தாங்கள் முன்பு நேசித்ததைவிட அதிகமான அன்பு கொண்டு நேசித்தார்கள். அத்தகைய ஆழ்ந்த அன்புக்குக் காரணம் என்ன என்பதும், அவர்களுக்குத் தெரியாது.

பரமாத்மா ஒருவரே உலகத்திலுள்ள இத்தனை உயிர்களுமாக ஆயிருக்கிறார் என்பதைச் சுவானுபூதியில் அறிந்து கொள்பவரே எல்லா உயிர்களையும் உள்ளன்போடு நேசிக்க முடியும். பிருந்தாவனத்திலிருந்த ஆயர்குலப் பெற்றோர்களோ தங்களுடைய பிள்ளைகளிடத்தில் இப்பொழுது புதியதொரு பேரன்பைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். கடவுளே கண்ணனாக வடிவெடுத்து வந்துள்ளார் என்பதற்கு இந்த அன்பே சான்றாகும். தூய அன்பே கடவுள், கடவுளே தூய அன்பு. உலகத்தவர் உலக மக்களோடு வைக்கும் அன்பு ஒரு பிறப்பையும் ஓர் உடல் வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டது. ஆதலால் அது நிலையற்ற அன்பு, போலி அன்பு என்றும் அதைப் பகரலாம். யான், எனது என்னும் செருக்கை அடிப்படையாகக் கொண்டது அந்த ஆதரவற்ற அன்பு. தான், தனது என்னும் தெய்வப் பாங்கைப் பெற்றுள்ள அன்பே நிலையான அன்பு ஆகும். கண்ணனிடத்து அத்தனை உயிர்களும் காட்டிய தூய அன்பே அவன் கடவுள் என்பதற்கு அத்தாட்சியாகும்.

பிரம்மதேவன் அந்த உயிர்களையெல்லாம் நித்திரை நிலையில் வைத்திருந்ததும், கிருஷ்ணனே பின்பு அத்தனை உயிர்களாக விரிவடைந்து விளையாற்றி வந்ததும் தொடர்ந்து ஓராண்டு காலத்துக்கு நீடித்துக்கொண்டு போனது. சிறுவன் போன்று தென்பட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணன் யார் என்பது பிரம்மாவுக்கு அப்பொழுது விளங்கிற்று. படைப்புக் கடவுள் ஆகிய பிரம்மதேவனைத் தமது உந்திக்கமலத்தி

னின்று தோற்றுவித்தவர் ஸ்ரீமந் நாராயணன். அந்த நாரா யணனே இப்பொழுது மானுட வடிவம் தாங்கித் தாமோதர ஞகத் தரணியில் விளையாடிக்கொண்டிருக்கிருர். கணக்கற்ற படைப்புக் கடவுள்களையே படைக்க அவருக்கு இயலும். பின்பு பெற்றங்களையும் பெற்றம் மேய்ப்பவர்களையும் படைப் பது அப்பரம புருஷனுக்கு ஒரு பெரிய காரியமா? இதை உணர்ந்துகொண்ட பிரம்மதேவன் கண்ணனிடம் சென்று கைகூப்பி வணங்கினர். தூங்குகின்ற நிலையில் தாம் வைத் திருந்த சிறுவர்களையும் கன்றுகளையும் எழுந்திருக்கச் செய்து கிருஷ்ணனிடம் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டார். உறக்கத்தினின்று எழுந்திருந்த அவ்வுயிர்களுக்கு ஓராண்டு கழிந்து போனது தெரியாது. ஒரு கணப்பொழுதில் கண் மூடிக் கண்விழித்த அனுபவம் ஒன்றுதான் அவர்களிடத்தில் இருந்தது. அவர்கள் குகையினின்று வெளியே வருவதற்குள் தனது மனதினின்று உண்டுபண்ணிய மக்களையும் மாடுகளை யும் மாயோனுகிய கிருஷ்ணன் திரும்பவும் தனது மனதுக் குள்ளேயே மறைத்துக்கொண்டான். விளையாட்டுப்போன்று நிகழ்ந்த இந்தச் சம்பவத்தினின்று நமக்கு வாழ்க்கையைப் பற்றிய இரண்டு பேருண்மைகள் வெளியாகின்றன. உணர் வற்றநிலை (suspended animation) நமக்கு எப்பொழுது வேண்டுமானுலும் உண்டாகலாம். அந்த நிலையில் காலதேச வர்த்தமானம் நமது கருத்துக்கு எட்டாது போய்விடுகின் றன. யோகி ஒருவனுக்குக் கணக்கற்ற வடிவங்களாகத் தன்னைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்பது மற்றோர் உண்மை.

காலியன் வதை

யமுனை நதிக்கரையோரத்தில் காலிந்தி என்னும்குளம் ஒன்று இருந்தது. அது மிக ஆழமானது. அதில் காலியன்

என்னும் கொடிய சர்ப்பம் ஒன்று வசித்து வந்தது. அதன் பயங்கரமான விஷம் குளத்து நீர் முழுவதையும் நஞ்சாக்கி விட்டது. நடப்பன பறப்பனவாகிய எவ்வுயிரும் அந்த நீர் நிலைக்குப் பக்கத்தில் போகமாட்டா. அதில் கொஞ்சம் வாய் வைத்துக் குடித்தால் அவ்வுயிர் அப்பொழுதே அவ் விடத்திலேயே மாண்டுபோம். அங்கு வீசிய காற்றே நச்சுக் காற்று ஆய்விட்டது. அங்குளத்துக்கு மேலே பறந்து சென்ற பறவை பொசுங்கிக் கீழே விழும். வழி தவறி விலங்கு ஏதேனும் அவ்விடத்துக்கு வந்துவிட்டால் விஷ வாயுவை உட்கொண்டு வாடிவதங்கி அது கீழே விழுந்து விடும். ஆங்கிருந்த நச்சுக்காற்றின் கொடுமையால் மரம் செடிகள் பட்டுப்போய்விட்டன. மண்ணுங்கூட கருகிப் போனது போன்று காட்சி கொடுத்தது.

கிருஷ்ணனும் அவனுடைய கூட்டாளிகளும் கால்நடை களை ஓட்டிக்கொண்டு அக்குளத்துக்கு அருகில் வந்தார்கள். அதற்குள்ளாக அவர்களுக்கு வெயிலின் வெப்பத்தால் தாங்க வொண்ணாத தாகம் வந்துவிட்டது. பசுக்களுக்கும் கன்று களுக்கும் அதே விடாய் வந்துவிட்டது. எல்லாம் விரைந் தோடி வேண்டியவாறு நீர் அருந்தின. வயிறு நிறைவதற் குள் பையன்களும் பெற்றங்களும் உயிர் அற்றவைகளாய்க் கீழே விழுந்தன. சிறிது நேரத்துக்குள் குளக்கரை முழுதும் பிணங்கள் தூவப்பெற்றது ஆய்விட்டது. உயிர் உற்று இருந்தவைகளெல்லாம் நொடிப்பொழுதில் உயிர் அற்றவை கள் ஆய்விட்டன.

மந்தைக்கும் மானுடர்க்கும் நேர்ந்த விபத்தைக் கண்ணன் காணலுற்றான். மடிந்துபோனவர்கள்பால் அவனுக்குக் காருண்யம் பிறந்தது. செத்தவர்களைச் சஞ்சீவினி எழுப்பு வது போன்று கண்ணனுடைய அருள் நோக்கம் அவர்

களுக்கு உயிர் கொடுத்தது. தரையினின்று எழுந்து நின்று ஒருவனை ஒருவன் வியப்போடு பார்த்தான். கேடுகளைக் களைதற்கென்றே கிளம்பியுள்ள கண்ணன் அவர்கள் வீழ்ந்ததற்குக் காரணம் யாது என்பதைக் கண்டுபிடித்துவிட்டான். குளத்திலிருந்த நச்சு நீரை நன்னீராக மாற்றியாகவேண்டும். அதனால் ஆடுமாடுகளும் மாந்தரும் நலன் அடைவார்கள். உயிரை ஒழிக்கின்ற உயிர்களை அக்குளத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இலைகளின்றி தளிர்களின்றி வெறும்கவையாகிக் கொம்பாகிக் கரையோரம் நின்றுகொண்டிருந்த ஒரு கடம்ப மரத்தின்மீது கிருஷ்ணன் ஏறினான். நீர்ப்பரப்பு முழுதையும் சற்று நின்று பார்த்து விட்டு அதனுள் சடக்கெனத் தாவினான். நீரும் சளார் பிளாரென நாலாபக்கமும் கரையின் மீது பரவியது. குதூகலத்தோடு கண்ணன் காரிருள் செறிந்த நீரினுள் நீந்தி விளையாடினான்.

இத்தகைய இடைஞ்சலை முன்பு எப்பொழுதும்கண்டறியாத காலியனுக்குக் கடுங்கோபம் மூண்டுவிட்டது. படங்கள் பல எடுத்துக்கொண்டு அந்தப் பெரும்பாம்பு இந்தப் பாலன் மீது பாய்ந்தது. அவன் மேனிமீது மூன்று வட்டமிட்டு அவனைச் சுழற்றிப் பிடித்துக்கொண்டு நச்சுப்பல்லால் இங்குமங்கும் கொட்டிற்று. பிடிபட்டுத்தன் ஆற்றலை இழந்து விட்டவன் போன்று கிருஷ்ணன் முதலில் சும்மா கிடந்தான். கரையில் நின்றுகொண்டிருந்த கோபச் சிறுவர்கள் கலங்கிக் கட்டைகள் போன்று ஆய்விட்டனர். தங்கள் கண்மணி போன்ற கண்ணனுக்கு இத்தகைய கேடு வந்துவிட்டதே என்று உள்ளங் கரைந்தனர். ஆவினங்களும் ஆவலுடன் அரற்றின. கானகத்தில் ஏதோ கேடு விளையப்போகிறது என்பதை உள்ளத்தில் உணர்ந்த ஊராரில் பலர் சிறுர் இருக்

கும் இடம்தேடி வந்துவிட்டனர். காலியனிடம் அகப்பட்டுக் கொண்டு கிருஷ்ணன் கடியுண்டதைக் கண்ட கோபர்களும் கோபியர்களும் தலைதலையாகப் போட்டுக்கொண்டு கதறி யழுதனர். தங்கள் உயிர்க்கு உயிராகிய கண்ணன் தொலைந் தான் என்றே அவர்கள் கவலைக் கடலில் மூழ்கிவிட்டனர்.

இப்பொழுது திடீரென்று காட்சி மாறியது. கிருஷ்ணன் தன் காயத்தைப் பன்மடங்கு பெரியதாக்கினன். அதன் பளுவைத் தாங்கமுடியாத காலியன் தனது சூழல்கட்டை அவிழ்த்தது. அதற்கிடையில் படமெடுத்த பாங்கில் தாமோ தரனது தலைமீது தீண்டி அவனைத் தொலைத்துவிடமுந்திற்று. அப்பொழுது காலியனுடைய கண்களோ பொறிபறக்கும் தீக்கோளங்கள் போன்று திகழ்ந்தன. அதனுடைய நச்சுப் பற்களினின்று நஞ்சு சுரந்து கொட்டியது. கிருஷ்ணனே காலியனுடைய பிடியினின்று தப்பித்துக்கொண்டு தண்ணீ ரில் துள்ளி விளையாடினன். விதவிதமாக வளைந்து வளைந்து பாம்பு இவன்மீது பாய்ந்தது. அதன் இலக்கினின்று இவன் இலகுவாகத் தப்பித்துக்கொண்டான். இப்பொழுது கடி யுண்பவன் போன்று தென்படுவான். அடுத்தகணத்தில் வேறு ஓர் இடத்தில் தலையைத் தூக்கிக் காட்டுவான். கிருஷ்ண னுக்கு விளையாட்டு அதிகரிக்க அதிகரிக்கக் காலியனுக்குக் கோபம் மூண்டது. விளையாடுபவனேடு வெகுளுபவன் வெகு நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. இது வாழ்க்கையைப் பற்றிய ஒரு பேருண்மை. தான் கொண்டிருந்த கோபத்தி னலேயே காலியனுக்கு இப்பொழுது களைப்புமிக வந்து விட்டது. மேலும் அசைய முடியாத ஆயாசத்துக்கு அது அடிமையாயிற்று. கிருஷ்ணனும் அதற்காகத்தான் காத் திருந்தான். இதுவே அவன் ஆக்கிரமிப்பில் முந்துவதற்கான தருணம். பாம்பின் கழுத்தைப் பிடித்து வளைத்தான். அதன்

படத்தின்மீது ஏறிக்கொண்டு ஆனந்தத் தாண்டவமாடினன். சிறிது நேரத்துக்குள் காலியன் வாயிலிருந்து ரத்தத்தைக் கக்கிற்று. கிருஷ்ணனுடைய விளையாட்டு இன்னும் கொஞ்ச நேரம் நீடித்தால் காலியன் உயிர் துறந்துவிடும். ஆனால் அந்த நெருக்கடி நேர்தற்கு முன்பே அதனுடைய மனைவி மக்கள் நீரினுள்ளிருந்து அலறிப் பதறிக்கொண்டு மேற்பரப்புக்கு ஓடிவருவன வாயின. தங்களுக்கு உயிர்ப்பிச்சைத் தரும்படி அவை கெஞ்சின. கிருஷ்ணனும் அவைகள்மீது இரக்கம்கொண்டு அவைகளைக் கொல்லவில்லை. கடலினுள்ளே இருந்த ரமணகம் என்னும் தீவுக்கு அவைகளை ஓட்டிவிட்டான். அதுமுதல் அக்குளத்து நீர் அமிர்தம் போன்ற நன்னீர் ஆய்விட்டது.

இகத்துக்கும் பரத்துக்கும் உரிய இரண்டு பெரிய கற்பிதங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. இகத்தில் நலன் அனைத்தும் அடையப்பெற்று நன்கு வாழத் தெரிந்துகொண்டவனே பின்பு பரத்துக்கும் தகுதியுடையவனாகிறான். மக்களில் பலர் தங்கள் குடிநீரில் படிந்துள்ள கேடுகளையும் நோய்க் கிருமிகளையும் போக்குவது கிடையாது. அதைத் தூயது ஆக்குவதற்கான தீவிர முயற்சி எடுத்துக்கொள்வதும் கிடையாது. நச்சுநீரைப் பருகி அவர்கள் பலவிதமான நோய்க்கு ஆளாகிறார்கள். அதற்கு மாறாக எத்தனங்கள் பல எடுத்துக்கொண்டு நச்சு நீரை நன்னீராகத் தெளிவுபடுத்துவது அவர்களுடைய கடமையாகிறது. மக்கள் கற்றுக் கொள்ளவேண்டிய முதற் பாடம் இது.

இரண்டாவது பாடம் மிக முக்கியமானது. இந்த உடல் வாழ்க்கை பிறவியில் முற்றிலும் தூயதாய் இருக்கிறது. கட்டில் அடங்காத காமம் என்னும் பாம்பு அதனுள் புகுந்துவிடுகிறது. அது மனது என்னும் தடாகத்தை விஷ-

முடையதாக்கிவிடுகிறது. அதனால் ஐம்பொறிகளும் கெட்டுப் பாழாய்விடுகின்றன. அத்தகைய உடல் வாழ்வு பின்பு யாருக்கும் உதவுவதில்லை. காமம் யாரிடத்தில் தலைக்கு ஏறியிருக்கிறதோ அவன் இவ்வுலக வாழ்க்கைக்கு உதவமாட்டான். பொறுப்பான காரியம் எதையும் அவனிடம் ஒப்படைக்க முடியாது. பின்பு பாரமார்த்திகப் பெருநிலைக்கு அவன் ஒருநாளும் தகுதியுடையவன் ஆகான். ஒரு மனிதனிடத்து உள்ள கேடுகள் அனைத்துக்கும் காரணம் காமம். அருள்தாகம் என்னும் பேருணர்வு உள்ளத்தினுள் பாய்ந்து மனிதனைப் பரவசமாக்கவேண்டும். காமநோய் என்னும் நஞ்சை நீக்குதற்கு அது ஒன்றே உற்ற உபாயம். கிருஷ்ணனைக் கொன்றுவிட வல்லதுபோன்று காலியன் முதலில் தென்பட்டது. ஆனால் பின்பு அதனுடைய ஆற்றல் எல்லாம் அடங்கிவிட்டது. அதே பாங்கில் அருள்தாகம் தலையெடுக்கவொட்டாது காமநோய் ஆதிக்கம் செய்யும். ஆனால் இறைவனைச் சார்ந்திருக்குமளவு அருள்தாகம் உறுதிப்பெறும். அருள்தாகம் வலுத்துவிடுமிடத்து காமத்தின் வேகம் தானே குறைந்துபட்டுப்போம். காமத்தை முற்றிலும் வெளியே ஓட்டியான பிறகு மனிதனுடைய வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. பிறகு இவ்வுலகில் அவன் எதையும் சாதிக்க வல்லவனாகிறான். கடவுளை அடைதற்கான தகுதியும் அவனுக்கே உண்டாகிறது.

இந்திரன் பரம்பொருள் ஆகான்

இந்திரனுக்கு ஆண்டுதோறும் ஒரு பெரிய விழாக் கொண்டாடுவது பிருந்தாவனத்தில் வசித்துவந்தவர்களின் வழக்கமாய் இருந்து வந்தது. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வயது ஒன்பது ஆயிருந்தபொழுது அத்தகைய விழாக்கொண்டாடுதற்கான பருவம் பக்கத்தில் வந்தது. கோபர்களும் கோபி

களும் அதற்குவேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தனர். கண்ணனும் அக்காட்சியைக் காணலுற்றான். "எதற்காக இத்தகைய ஆடம்பரமான ஏற்பாடுகள்?" என்று அவன் தந்தையிடம் வினவினான்.

தந்தையும் அதற்கேற்ற பதில் விடுத்தார்: "இது நெடுங்காலமாக நடந்து வந்துள்ள நோன்பு ஆகும். இந்திரனை ஏத்துதற்கு என்றே இது ஏற்பட்டது. அவன் பருவத்தில் மழைபெய்து மக்களைப்பேணுவதால் நாம் அவனைப்போற்றி வருகிறோம். ஐதிகமாக வந்துள்ள ஆராதனைகளை முறையாக அனுஷ்டித்து வருவது நம் கடமையாகும்."

வெறும் விளையாட்டுப் பிள்ளைபோன்று பேசிய கண்ணன் மேலும் பகர்வானாயினன்: "இந்திரனுக்குச் சதகிருது என்று பெயர். அதாவது நூறு யாகம் செய்து அவன் அப்பதவிக்கு வந்தவன். இந்திரபதவி பெரியதே. ஆனால் அது பரிபூரண நிலைக்கு ஒப்பாகாது. வழிபாடு செய்கின்றவர்கள் பரம்பொருளைப் போற்றலாம். அல்லது பரிபூரணமுணர்ந்த நிறைஞானிகளைப் போற்றலாம். பரமனை வழுத்துவதும் நிறைஞானியை வழுத்துவதும் ஒன்றே. ஏனென்றால் நிறை ஞானியானவன் குற்றங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றுப் பூரணப் பொருளில் கலந்தவனாகிறான். இந்திரன் போன்று இடையில் இருக்கும் சித்தர்களோ இன்னும் முழுப்பக்குவம் அடையாதவர்கள். அன்னவர்களை ஆராதிப்பது தலையாய வழிபாடு ஆகாது. ஆதலால் இந்த விழாவை இந்திரனுக்குரியது ஆக்குவதைவிட இறைவனுக்கே உரியது ஆக்குவது மிக நன்று."

"முழுமுதற் பொருளாகிய இறைவனை அறிந்துகொள்வது என்போன்ற சாதாரண மனிதனுக்கு எளிதன்று. அவன் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளான் என்கின்றனர் ஆன்றோர்.

ஆயினும் அவனை எப்படி வழிபடுவது என்பது விளங்கவில்லை" என்று நந்தகோபன் நவிலலானான்.

"அனைத்துக்கும் ஆதிமூலமாகிய பெரிய பொருளைப் போற்றுவது மிக எளிது. அவனைக் கிரகிக்க முடியாவிட்டாலும், எல்லாம் ஆனவன் அவனே என்று உணரவேண்டும். வெளியாகி, வளியாகி, நெருப்பாகி, நீராகி, நிலமாகி, வெவ்வேறு உயிராகி இருப்பவன் அவனே. ஆதலால் தென்படும் அனைத்தையும் அவனுடைய தோற்றமாய் பாவித்து வணங்குவது உசிதம்." இங்ஙனம் கோபாலன் கூறிமுடித்தான்.

அவனுடைய கூற்றைக் கேட்டவர்க்கு அது முற்றிலும் சம்மதமாயிற்று. பெரிய பொருளாகிய கடவுளே கோவர்த்தன மலையாக வடிவெடுத்துள்ளார் என்று கருதி, அம்மலையின் மூலம் முழுமுதற் பொருளைப் போற்ற ஊரார் முன்வந்தனர். விழாவும் மிகச் சிறப்பாக நடந்தேறிற்று.

இந்த மாறுபாட்டைக் காணலுற்ற இந்திரனுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. கோபர்களை நன்கு தண்டிக்கவும், கூடுமானால் உயிர்ச்சேதம் உண்டு பண்ணவும் அவன் தீர்மானித்து விட்டான். தனது தவ வலிவால் மேகத்துக்கும், மழைக்கும், மின்னலுக்கும், இடிக்கும் அவன் அதிபதியானான். அவைகளை இப்பொழுது அவன் ஆரவாரத்தோடு அவிழ்த்துவிட்டான். படலம் படலமாக மேகம் சூழ்ந்தது; பளீர் பளீர் என்று மின்னல் வீசியது; படார் படார் என்று இடி இடித்தது; சொரேலென்று மழை கொட்டியது; தடதடவென்று ஆலங்கட்டி பொழிந்தது. நீர்ப்பெருக்கெடுத்துப் படிப்படியாக மேலே வந்தது. தங்கள் உயிருக்கே ஆபத்து வரப்போகிறது என்று ஆயர் கூட்டத்தார் அஞ்சினர். நிகழ்வதையெல்லாம் நந்தகோப நந்தனன் கவனித்தான். இது இந்திரனுடைய இறுமாப்பின் விளைவு என்பதை அவன்

அறிந்துகொண்டான். தன்னுடைய திறன் எத்தகையது என்பதைத் தேவர்கோனுக்குக் காட்டவேண்டிய தருணம் வந்தது. ஆகவே ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன மலையை ஒரு கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டான். அது அவ் வூரார் அனைவரும் அண்டியிருப்பதற்கான குடையாயிற்று. அவர்களுடைய ஆடுமாடுகளும் அம்மலையின் அடியில் தங்கி யிருக்க இயன்றது. இப்படி ஏழு நாட்கள் கழிந்தன. களைப் பின்றி கண்ணன் கோவர்த்தன மலையைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டேயிருந்தான். இந்திரனுக்கு இப்பொழுது நல்லறிவு வந்தது. தன்னிலும் மிக்கதொரு சக்தி இயற்கை யில் இருக்கிறது என்று அவன் அறிந்து கொண்டான். தனது கர்வத்தை அப்பொழுதே அவன் ஒழித்துவிட்டான். கண்ணனைக் கடவுள் என்று வணங்கினன். மழையும் நின்றது. அவரவர் வீட்டுக்குப் போக பிருந்தாவன மக் களுக்கு இயன்றது. பெயர்த்தெடுத்த மலையைக் கண்ணனும் இருந்தபடி வைத்துவிட்டான். இயற்கையின் சக்தி அளப் பரியது. ஓர் அண்டத்தையே அழித்துவிடுகிற சக்தி ஓர் அணுவிடத்திலும் இருக்கிறது என்பதை அக்காலத்து ஆன் றோர் அறிந்திருந்தனர். அதுமட்டுமல்ல எண்ணத்தின் சக்தி அணுசக்தியை விடப் பெரியது. Thought can move mountains 'எண்ணம் மலைகளையே பெயர்த்தெடுக்க வல்லது, என்பது பழமொழி. ஒரு மனிதனிடத்து தெய் விகம் அதிகரிக்குமளவு அவனுடைய எண்ணமும் வலிவு மிகப் பெறுகிறது. பின்பு கண்ணனே மானுட வடிவத்தில் தோன்றிய கடவுள். அவனுடைய எண்ணத்துக்கு மலை ஏன் உட்பட்டு நடவாது?

> **எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
> **திண்ணியர் ஆகப் பெறின்.**

என்னும் மறைமொழிக்கு மாயோனுடைய செயல் நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும். மனிதனுடைய உள்ளத்துக்கு அகம் என்று பெயர். நாம் வாழும் இவ்வையகத்துக்குப் புறம் என்று பெயர். வையகத்திலும் வானத்திலும் உள்ள சக்திகளைக் கட்டியாளும் முறைகளை இக்காலத்திய பௌதிக விஞ்ஞானம் புகட்டி வருகிறது. மனதில் உள்ள சக்திகளை மேன்மைப் படுத்த முன்னைய முனிவர்கள் அறிந்திருந்தனர். கண்ணனோ அகம் புறம் ஆகிய இரண்டு நிலைகளில் இருக்கும் சக்திகளையும் நன்கு அடக்கியாண்டு மேலான காரியங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தி வந்தான்.

5. அழகு தெய்வம்

ஐம்பொறிகளும் அழகை நுகர்கின்றன

இம்மண்ணுலகில் மானுடர்களுடைய மனதைக் கவர வல்லது யாது என்னும் கேள்வி எழலாம். மாந்தர் அனைவர்க்கும் பொதுவாயுள்ள கேள்வி இது. எந்த நாட்டில் வசிக்கும் மாந்தர் என்றோ, எக்காலத்திய மாந்தர் என்றோ பாகுபடுத்த வேண்டிய அவசியம் ஈண்டு இல்லை. எல்லா நாட்டவர்க்கும் எக்காலத்தவர்க்கும் பொதுவாயுள்ள பொது விதி. மக்களுடைய மனதைக் கவரவல்லது அழகு. இக் கோட்பாட்டை ஒரு பொதுவிதி எனலாம்.

அழகு என்று இயம்புமிடத்து ஒரு வடிவத்தில் பொலிவையும் ஒழுங்குப்பாட்டை மட்டும் நாம் அழகு என்று எண்ணுகிறோம். அது போதாது. அழகு இன்னும் பல படித்தரங்களில் பொலிகிறது. ஞான பூமிகள் ஏழு இருக்கின்றன வென்று ஆன்றோர்கள் பகர்ந்திருக்கின்றனர். அதன் கருத்து முழுதும் நமக்கு விளங்குவதில்லை. அதை நாம் ஆராய்ந்து

பார்க்காமல் இருப்பதே அதற்குக் காரணமாகும். முறை யாகத் துருவி ஆராய்ந்து பார்த்தால் மிக எளிதில் அது நமக்கு விளங்கும். சூரிய வெளிச்சமானது வானத்தில் உள்ள நீர்த்திவலைகளில் படிந்து வரும்பொழுது அது வானவில்லாக வடிவெடுக்கிறது. வானவில்லில் ஏழு நிறங்கள் இருக் கின்றன. நிறத்தை ஏழு படித்தரங்களில் வைத்து நாம் அறிகிறோம். ஒவ்வொரு படித்தரமும் நிறத்துக்குரிய ஞான பூமியாகிறது. அப்படி நிறத்துக்கு ஏழு ஞானபூமிகள் இருக் கின்றன. அதே பாங்கில் அழகுக்கும் ஏழுவித நிலைகள் இருக்கின்றன. அவைகளைச் சுருக்கமாக ஆராய்வோம்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகிய ஐம்பொறி கள் வாயிலாக அழகு நுகரப்படுகிறது. பிறகு எண்ணம் அல்லது கருத்தில் அழகு நிறைந்திருக்கிறது. இறுதியாக ஒழுக்கம் அல்லது நல்வாழ்வில் அழகு திகழ்கிறது. இப்படி அழகுக்கு இருப்பிடங்கள் ஏழு இருக்கின்றன. உணவு உண்டு நாம் உயிர் வாழ்கிறோம். நல்லுணவு எப்பொழுதும் சுவை நிறைந்தது ஆகிறது. நாவின் துணைகொண்டு நாம் உணவைச் சுவைக்கிறோம். எது நாவுக்கு இனியதோ அது நாவைக்கொண்டு நுகரப்படும் அழகு ஆகிறது. உயிர்வகை கள் அனைத்தும் அவ்வவைக்கு உகந்த நல்லுணவில் நாட்டம் கொள்கின்றன. அதாவது நாவுக்கினிய தீஞ்சுவையழகில் அவ்வுயிர்கள் சொக்கி விடுகின்றன. இனி, நாவுக்கினிய நல்லுணவைச் சமைக்கின்ற மனிதன் ஒருவன் இருக்கின்றான். சுவையற்ற பண்டங்களையெல்லாம் சுவையுடையவைகளாக அவன் மாற்றித் தருகிறான். மற்றொரு மனிதன் நல்ல பண்டங் களையும் சமைக்கத் தெரியாது கெடுத்து விடுகிறான். இவ் இருவர்களுள் நன்கு சமைக்கத் தெரிந்தவனிடத்தே நமக்குச் சார்பு உண்டாகிறது. சுவையழகைத் தரவல்லவன் யாரோ

அவனை நாம் சார்ந்துவிடுகிறோம். வெளியுலகில் உள்ள ஒளியும் நம்மிடத்து உள்ள கண்ணும் ஒன்றுகூடி உருவத்தின் அழகைப் புலனாக்குகின்றன. வனப்பு வாய்ந்த இயற்கை, காட்சிக்கினிய நிறம், மனதுக்கினிய வடிவம் ஆகியவைகளை அழகு வாய்ந்தவைகள் என்கிறோம். கண்ணின் துணை கொண்டு நாம் அழகைப் போற்றுகிறோம். மேனியால் தொட்டுணர்ந்து அறியப்படுவது ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சி எனப்படுகிறது. இனிய தென்றல் வீசி நம் உடலில் வந்து படிகிறது. சிறு குழந்தையை அல்லது நமது அன்புக்குரியவரைத் தொட்டுணர்ந்து நாம் இன்பமடைகிறோம். ஸ்பரிச உணர்ச்சியில் அடங்கியிருக்கும் அழகு அதுவாம். இனி, ஓசையில் அடங்கியிருக்கும் அழகு அற்புதமானது. குழல் ஓசை உள்ளத்தைக் குளிப்பாட்டுகிறது. பறவைகளின் பாடல்கள், பாடகர்களின் குரல் வகைகள் ஆகிய யாவும் ஒலியழகை விளக்குகின்றன. பின்பு நறுமணம் நிறைந்த பூவானது நமது மனதைக் கவர்கிறது. வாசனைத் திரவியங்களிடத்திலும் நாற்றத்தின் அழகு நிறைந்திருக்கிறது. ஆக, ஐம்பொறிகளும் ஐந்து விதங்களில் அழகை ஆதரிக்கின்றன.

அறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் அழகு உண்டு

கருத்து அழகையும் ஒழுக்கத்தின் அழகையும் இனி ஆராய்ந்து பார்ப்போம். திருவள்ளுவருடைய திருக்குறளைப் படிக்கப் படிக்க நமது உள்ளம் திருவள்ளுவர்க்கே உரியதாய்விடுகிறது. போற்றுதற்கு உரிய பெரிய கருத்துக்கள் ஒன்றன்மேல் ஒன்று அந்நூலில் வந்துகொண்டே இருக்கின்றன. இனி, சொல் அழகோ பொருள் அழகுக்கு முற்றிலும் ஒத்தது. சொற்சுவை உள்ளத்தில் உவகை ஊட்டுகிறது. அன்று ஒரு காலத்தில் வாழ்ந்திருந்த திருவள்ளுவர் இன்று

உடல் தாங்கி வாழ்ந்திருப்பாராகில் அவருடைய நூலைக் காண்பார் அனைவரும் அவருடைய உடலைக் காணவும் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் ஏகுவர். ஏனென்றால் கருத்து அழகுக்கு அத்தகைய கவரும் சக்தி இருக்கிறது. ஒழுக்கத்தின் அழகோ இதுகாறும் இயம்பிய அழகுகள் யாவிலும் மிக்கது. அரிச்சந்திரன் என்பவன் முன்பு ஒரு காலத்தில் வாழ்ந்திருந்தான் என்று கேள்விப்படுகிறோம். அவனுடைய வரலாற்றைப் படிக்கப் படிக்க நாம் முற்றிலும் அவனுக்கு உரியவர் ஆய்விடுகிறோம். அவன் கடைப்பிடித்த சத்திய விரதம் முற்றிலும் நமக்கு ஒத்தது ஆய்விடுகிறது. ஒரு மனிதனிடத்து உள்ள ஒழுக்கம் மற்றவர்களையெல்லாம் அந்த ஒழுக்கத்தின் கண் கொண்டு சேர்க்கிறது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்னும் பொய்யா மொழியை மக்கள் அனைவரும் மெய்ப்பிக்கின்றனர். ஒழுக்கம் யாரிடத்து ஒளிர்ந்து கொண்டிருந்தாலும் அதைப் போற்றிப் பாராட்டுவது அவர்களுடைய இயல்பாகிறது. ஒழுக்கத்தின்கண் ஒருவித தெய்விக அழகு பொலிவதே இதற்குக் காரணமாகிறது.

மக்கள் மண்ணுலகில் தோன்றிய காலம் முதல் இன்று வரை என்ன நிகழ்ந்து வருகிறது என்பதை இனித்தொகுத்து ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஏழுவித அழகுகளில் ஏதேனும் ஒன்று ஒரு மனிதனிடத்துச் சிறப்புற்று ஓங்கியிருந்தால் போதுமானது. ஊசியானது காந்தத்தினிடம் கவர்ந்து இழுக்கப்படுவது போன்று மாந்தர் அழகினிடத்து ஆகர்ஷிக்கப்படுகின்றனர். கட்டழகே வடிவெடுத்துள்ள காளை ஒரு வனைக் கடவுள் போன்று கருதுவது உலகத்தவர் இயல்பு. சங்கீத வித்வான் ஒருவனுக்கு வசப்பட்டு விடுவது வையக

வைபவமாகும். நல்லுணவு சமைப்பவன் நாட்டார் அனைவர்க்கும் நனி சிறந்த நண்பனாகின்றான். நறுமணம் செறிந்த வாசனைத் திரவியங்களை வகைப்படுத்துபவன் ஊரார்க்கு உகந்தவனாகிறான். மேனிக்கு மிருதுவானவைகளும் சொகுசானவைகளுமான பண்டங்களை உண்டுபண்ணுபவர் யாண்டும் பொதுமக்களால் பாராட்டப்படுகின்றனர். இனி, வீரன் ஒருவனுடைய பெற்றி முற்றிலும் போற்றத்தக்கது ஆகிறது. மக்களுடைய உயிரையும் உடைமைகளையும் அவன் காப்பாற்றுகிறான். தாக்க வருகிற கொள்ளைக்காரர்களையும் கொலைகாரர்களையும் அவன் தோற்கடிக்கிறான். ஆபத்துக்கு உள்ளாகும் உற்றார் உறவினர்க்கு அவன் உறுதுணையாகிறான். குடியிருப்பதற்கு நல்ல இடம் தேடித் தருகிறான். இத்தகைய வீரன் ஒருவனைத் தெய்வமெனத் தரணியில் இருப்பவர் துதிப்பார்கள். இனி, நல்லறிவு படைத்திருப்பவர்களும், நகைச்சுவை நிறைந்திருப்பவர்களும், கூரிய சிந்தனையாளர்களும் உலகத்தவர்களுக்கு ஏற்புடையவர்களேயாவர். இது காறும் இயம்பியுள்ள அழகின் இத்தனைவிதக் கூறுகளும் கண்ணனிடத்து ஒன்றுகூடி ஒளிர்வனவாயின. ஆக, மக்கள் அனைவரும் அவனை நேசித்ததிலும், வணங்கியதிலும், கௌரவப்படுத்தியதிலும், கடவுள் போன்று போற்றியதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

விழுப்பத்துக்கு இருப்பிடம்

ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்து இத்தனைவிதமான தெய்வீக மகிமைகளெல்லாம் மிளிர்ந்துகொண்டிருந்தன. ஏதோ ஒரு தேகத்தின் மூலமாக அவர் தம்மை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக்கொண்டிருந்தார் எனினும் அந்த தேகத்தினுள் அவர் ஒருபொழுதும் கட்டுப்பட்டவர் அல்லர். அழகுக்கு இருப்பிடம் ஆத்மா என்னும் கோட்பாட்டுக்கு

அவரே சான்று ஆவார். பரமாத்மாவாகிய அவருடைய பேரழகை அவருடைய உடல் ஒருவிதத்தில் கட்டுப்படுத்தியது என்று இயம்பலாம். கார்மேகத்தைத் துளைத்துக் கொண்டு வருகிற கதிரவனது வெளிச்சம் போன்றது நமது உடல் வாழ்க்கை. நீலக்கண்ணாடியில் புகுந்துவரும் கதிரவனது வெளிச்சம் போன்றவர் கண்ணபிரான். அவருடைய கட்டழகைக் கண்டு ரசிப்பதற்கு இரண்டு ஊனக் கண்கள் போதமாட்டா. ஞானக்கண்கொண்டு தரிசித்த யோகியர்க்கே அந்த சௌந்தர்யத்தின் உச்சநிலை ஓரளவு விளங்குவதாயிற்று. வேணுகோபாலன் என்று அவர் இயம்பப்பட்டார். புல்லாங்குழல் இசைப்பதில் வல்லவன் என்பது அதன் பொருள். குழல் ஓசை இனியதா அல்லது அவருடைய குரல் ஓசை இனியதாவென்று ஒப்பிட்டுச் சொல்ல எவர்க்கும் இயலாது. குழலின்கண் ஓசையைப் பாலகோபாலன் மீட்டுவானாகில் அதன் இனிமையில் உயிர்கள் அனைத்தும் ஒடுங்கிவிடும். அவன் ஏந்தியிருந்த இன்னிசைக் கருவி வெறும் வேய்ங்குழல். அவன் தாங்கியிருந்த உடல் நம் உடல்போன்று பஞ்சபூதத்தால் ஆனது. ஆயினும் அவன் குழலில் கிளப்பிய கானமோ கல்லையும் கரைத்துவிட வல்லதாயிற்று. உயிர்களின் உள்ளம் குழையாது வேறு என் செய்யும்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பேரறிவு படைத்தவர் என்பதற்கும், பேச்சுவன்மை மிகவாய்க்கப்பெற்றவர் என்பதற்கும் பகவத்கீதை நல்ல சான்று ஆகிறது. உலகில் உள்ள நுண்ணறிவு நிறைந்த நூல்களிலெல்லாம் பகவத்கீதை முதலிடம் பெறுகிறது. அதை முற்றும் ஓர்ந்து உணர்பவர் மாதவனுடைய மகிமையையே உணர்பவர் ஆகின்றனர். இன்று நமக்கிடையில் பகவத்கீதை எளிதில் அகப்படுவதாய்

இருப்பது பகவானே நம்மிடம் இருப்பதற்கு ஒப்பாகிறது. இனி, ஆற்றலிலோ அவருக்கு ஒப்பானவரும் உயர்ந்தவரும் யாருமில்லை. கேடதனைக் களைதற்கும் நலமதனைப் பேணு தற்கும் அவருடைய ஆற்றல் யாண்டும் பயன்பட்டது. துன் புற்ற தூயவர்களது துன்பத்தைத் துடைப்பதற்கென்றே அவர் திருமேனி தாங்கியிருந்தார். அப்படிப்பட்ட அருளா ளரிடத்து உலகத்திலுள்ளவர்கள் உவகையோடு உள்ளன்பு காட்டாது வேறு என் செய்யமுடியும்? ஆணவச் செருக்குற் றிருந்த ஒரு சிலர் தாம் அவரை அலட்சியப்படுத்தத் துணிந் தனர். மேலும் முற்றுந்துறந்த முனிவர்களே அவரைப் போற்ற முன்வந்தனர். ஏனென்றால் புலனடக்கத்துக்கு அவர் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இலங்கினார். தன் னையே கட்டியாளுதல் என்னும் தகைமையானது அவரி டத்து யாண்டும் திகழ்ந்து கொண்டிருந்தது. அத்தகைய தெய்விகப் பேற்றினை முன்னிட்டே சான்றோர்கள் ஸ்ரீ கிருஷ் ணனை ஹ்ருஷீகேசனென்று அழைத்தார்கள்.

புதல்வனிடத்துப் பரிவு காட்டுவது பெற்றோரது இயல்பு. அன்புக்குரிய புதல்வன் ஒருவன் பின்பு அம்மை யப்பனிடம் அடக்க ஒடுக்கமும் பணிவும் பணிவிடையும் உடைத்திருப்பானாகில் அந்த விழுப்பங்களை முன்னிட்டு அவர்கள் அவனை மேலும் நேசிப்பார்கள். தன்னுடைய தாய் தந்தையர்க்குத் தாமோதரன் அத்தகைய அருமைப் புதல்வன் ஆனான். இனி, இடைச் சிறுவர்களுக்கு ஒப்பில் லாத கூட்டாளியாகவும் காப்பாளனாகவும் கோபாலன் திகழ்ந்து வந்தான். எத்தனை பெரிய ஆபத்துக்களினின்று அவன் அவர்களை மீட்டெடுத்தான் என்பது அவர்களுக்கே நன்கு தெரிந்திருந்தது. மேலும் கோபியர்களுடைய கோதில் லாத மனதை முற்றிலும் கொள்ளைகொண்டு போய்விட்ட

கோமளன் அவன். அன்புக்கடவுள் என்றே அவர்கள் அவனை வழுத்தி வணங்கினர்கள். கண்ணனைத் தவிர கடவுளை அவர்கள் கனவிலும் கருதியது கிடையாது. கடவுளை மனிதனது பயபக்திக்கு உரியபொருள் என்று கருதுகின்றனர். அது உண்மையல்ல என்பதை உலகத்தவருக்குக் கோபியர் புகட்டியிருக்கின்றனர். தங்கள் உயிருக்கு உயிராய், தங்கள் உள்ளத்தில் ஊற்று எடுத்து வரும் அன்புக்கு இலக்காய் கோபியர் கண்ணனைக் கருதி வந்தனர். கடவுளை அடையவேண்டுமென்று கருதிக் கடுந்தவம் புரிகின்ற தவசிகளுக்கிடையிலும், அரியபெரிய ஆத்மசாதனம் புரிகின்ற யோகியர்களுக்கிடையிலும், நுண்ணறிவுபடைத்த ஞானியர்க்கிடையிலும் அடுத்து அடுத்து எழும் கேள்வி ஒன்று உளது. கடவுளை அடையத் தகுதியுடையவர் யார்? என்பது அக்கேள்வியாகும். அதற்கு விடையாக அந்த மேன்மக்கள் அனைவரும் கட்டிய முடிவு ஒன்றேயாம். பிருந்தாவனத்தில் வசித்துவந்த கோபியர்களுடைய களங்கமற்ற உள்ளமும் தூய அன்பும் யாருக்கு வந்து வாய்க்குமோ அந்த பாக்கியவான் பகவானை எளிதில் பெற்றுத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்வான் என்பதே அவர்கள் கட்டிய முடிவாகும்.

கடவுளுக்கு உருவம் உண்டு

கடவுளுக்கு வடிவம் கிடையாது என்று வாதிப்பவர்கள் வையகத்தில் இருக்கிறார்கள். வடிவத்தோடு கூடியவராக அவரைக் கருதுபவர்கள் விவேகமற்றவர்கள் என்கிற முடிவுக்கும் அன்னவர் வந்துவிடுகின்றனர். ஆழ்கடல் நீர் அனைத்தையும் ஓர் ஆழாக்கில் அடைத்துவைப்பது எங்ஙனம் ஆகாத காரியமோ, அங்ஙனம் அகண்ட சச்சிதானந்த வஸ்துவை ஒரு மானுட வடிவத்தில் அடைத்து வைப்பதும் ஆகாத காரியம் என்று அவர்கள் இயம்புகின்றனர். எது

எங்கும் நிறைபொருளோ, எது நித்திய வஸ்துவோ அதற்கு வடிவம் இல்லை. அந்த எல்லைகாணதை அருவப்பொருளையே தாங்கள் ஆராதிப்பதாகவும் அவர்கள் இயம்புகின்றனர். கடவுளை உருவம் உடையவராக வைத்து உபாசிப்பவர்களை அவர்கள் ஒரு போக்கில் ஏளனம் செய்கின்றனர். அத்தகையவர்களுடைய கொள்கையானது தத்துவத்தோடு எவ்வளவு தூரம் பொருந்தியிருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். உருவ வழிபாடு செய்கிறவர்கள் அருவ வழிபாடு செய்கிறவர்கள் ஆகிய எல்லார்க்கும் கடவுளைப் பற்றிச் சில பொது அபிப்பிராயங்கள் உண்டு. இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்பவரும், காப்பவரும், துடைப்பவரும் பரம்பொருளே என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த கோட்பாடு ஆகும். பரமாத்மனுக்கு மிக்கதொரு பொருள் இல்லை என்பதும் அனைவர்க்கும் சம்மதம். இந்தப் பரமாத்மன் சர்வ சக்திமான், கருணையே வடிவெடுத்தவன், சராசரங்கள் அனைத்துக்கும் பிதா, சர்வக்ஞன் என்பதும் எல்லார்க்கும் பொதுவான கொள்கை. அப்பெரிய பொருள் இப்பிரபஞ்சத்தினுள் ஊடுருவிப்பாய்ந்து இதற்கு அந்தராத்மாவாக இருக்கிறான்; இதற்கு அப்பால் உள்ள அதீதப் பொருளாகவும் இருக்கிறான்.

மானுட அமைப்பை இனிச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். யாரோ ஒரு மனிதனுக்கு யானையைத் தன் உடல் மீது தாங்கிச் சுமக்கிற பலம் வந்து விடுகிறது. இரும்புச் சங்கிலிகளைத் துண்டு துண்டாக உடைத்துத் தள்ளும் வலிவு இன்னொருவனுக்கு வந்து விடுகிறது. எதை வேண்டுமானாலும் ஒரு நொடிப்பொழுதில் கற்றுக்கொள்ளும் நுண்ணறிவு இன்னொருவனுக்கு உண்டாகிறது. கரடி, புலி, சிங்கம் போன்ற காட்டு மிருகங்களைக் கட்டியாளும் திறமை மற்றொருவனுக்கும் வருகிறது. சூரியன் சந்திரன் முதலிய கோளங்கள்

எப்பொருள்களைக் கொண்டுஆக்கப்பெற்றவை, அவைகளிடத்தில் வெப்பம் எவ்வளவு இருக்கிறது, நட்சத்திரம் ஒன்று பூமியினின்று எத்தனை கோடி வெளிச்ச வருஷ தூரத்தில் இருக்கிறது—ஆகிய இவைபோன்ற நுட்பங்களையெல்லாம் உள்ளபடி வகுத்து அறிந்துகொள்ளும் வல்லமை மனிதனுக்கு வந்திருக்கிறது. இம்மனிதன் எண்சாண் உடலில் அடங்கியவன் போன்று தென்படுகிறான். உண்மையில் அவன் இந்த உடலுக்குள் அடங்கியவனா? மனிதனுடைய உண்மையான சொரூபம் உடலா? இக்கேள்விகளுக்கு நாம் விடை கண்டு பிடித்தாகவேண்டும். பழம் ஒன்றுக்கு மேல் தோல் இருக்கிறது. அதனுள் நரம்புகள் போன்ற சில நுண் பொருள்கள் இருக்கின்றன. அதனுள் சவ்வு என்னும் மெல்லிய மூடுதோல் இருக்கிறது. அதையும் தாண்டிய உள் பகுதியே சதைப்பற்று நிறைந்த சுளையாகிறது. இந்தச் சுளை தான் பழத்தின் உண்மையான சொரூபம். மதிப்பு அனைத்தும் சுளைக்கேயொழிய ஏனைய பகுதிகளுக்கு அல்ல. மானுட அமைப்பும் அத்தகையது. உடலினும் உயர்ந்ததாய், எங்கு வேண்டுமானாலும் போகக்கூடியதாய் மனது இருக்கிறது. மனதை உடைத்திருப்பவனே மனிதன். மனதின் பெருமை உடலின் வண்ணத்தில் அடங்குவதில்லை. மனதிலும் மிக்கது ஆத்மா. அறிவாய், அன்பாய், ஆற்றலாய் இருப்பது ஆத்மா. மனதின் சக்தியை அளக்க யாருக்கும் இயலாது. ஆத்மாவே சர்வசக்திமான் எனப்படுகிறது. ஆத்மாவே மனிதனுடைய நிஜசொரூபம். உடலையன்று, ஆத்ம சொரூபத்தைத் தான் நாம் மனிதன் என்று குறிப்பிடுகிறோம். உடலில் அடங்காதவன் உடலில் அடங்கியவன் போன்று தென்படுகிறான். இது மனிதனைப்பற்றிய உண்மையென்றால் கடவுளைப் பற்றிய உண்மையும் இதுவே. கண்ணன் என்னும் கடவுள்

மானுட வடிவம் ஒன்றில் அடங்கியவன் போன்று தென்பட்டாலும் உண்மையில் உடல் ஒன்றிலும் அடங்காத அதீதப் பொருள் அவன். ஆகவே உடல் எடுத்தவனாக அவனைப் போற்றுதலில் இழுக்கு ஒன்றுமில்லை. உண்மையில் உடலின் துணைகொண்டு தான் நாம் ஒருவரையொருவர் அறிந்து கொள்கிறோம். கண்ணனாகிய கடவுளை அறிந்துகொள்ளுதற்கும் அவன் எடுத்திருந்த உடல் நன்கு பயன்பட்டது.

கடவுள் வடிவத்தைக் கடந்தும் இருக்கிறார்; வடிவத்தின் உள்ளும் இருக்கிறார். ஆதலால்தான் அவருக்கு (கட+உள்) கடவுள் என்னும் பெயர் வந்தது. அவருக்கு வடிவம் இருக்கிறது என்று நம்புவதில் குற்றம் ஒன்றுமில்லை. அழகுக் கடவுள் ஒரு வடிவத்தில் இலங்கும் பொழுது அந்த வடிவம் முழுதும் சுதந்த்ர சொரூபம் ஆய்விடுகிறது. அழகுத் தெய்வமோ ஆராதிப்பவனுடைய உள்ளம் முழுவதையும் கவர்ந்தெடுத்துக் கொள்கிறது. அன்புப் பெருக்கால் வழிபடுபவன் பித்துப் பிடித்தவன் போன்று ஆய்விடுகிறான். தன் தெய்வத்தின் பொருட்டு உயிரையே கொடுக்க அவன் ஆயத்தமாய் விடுகிறான். தெய்வத்துக்குத் தான் புரிகிற பணிவிடையில் ஏனைய பணிவிடைகளெல்லாம் மறைந்துபோய் விடுகின்றன. இவ்வுலகுக்குரிய சாமானியமான சௌந்தரியமே ஒருவனுடைய மனதை முற்றிலும் தன் வசப்படுத்தி விடுகிறது. இனி, எழில் நிறைந்த தெய்வீக அழகுக்கு வசப்படுத்தும் ஆற்றல் அளவையில் அடங்காதது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அருள் நிறைந்த அவ்வினிய காட்சியைக் காணப்பெறும் பக்தன் அதிலேயே லயமாய் விடுகிறான். கடவுள் எல்லாம் வல்லவர். அவர் கருணையே வடிவெடுத்தவர். உலகெங்குமுள்ள சமயங்கள் யாவும் இக்கோட்பாட்டை ஏகோபித்து ஏற்றுக்கொள்கின்றன.

தனது சமயம் சாற்றுவதை பக்தன் ஒருவன் முழுமனதோடு நம்புகிறான். தான் போற்றும் அழகுத் தெய்வத்தின் காட்சியைத் தான் காணமுடியும் என்னும் நம்பிக்கையும் அவனுக்கு உண்டாகிறது. அத்திருக்காட்சியைக் காட்டியருளவேண்டுமென்று பரிவுடன் அவன் பிரார்த்தனை பண்ணுகிறான். கருணாகரனான கடவுள் மனப்பூர்வமான அந்த விண்ணப்பத்துக்குச் செவி சாய்க்காது சும்மா இருப்பாரா? "யார் எந்த வடிவத்தில் என்னைக் காண விரும்புகின்றாரோ அந்த வடிவத்தில் நான் அவனுக்குக் காட்சிகொடுத்து அவனுடைய நல்லாசையை நிறைவேற்றி வைக்கிறேன்" என்று கண்ணபிரான் தாமே கீதையில் பகர்ந்தருளியுள்ளார். அவருடைய அருள் இயல்புக்கு இக்கூற்று முற்றிலும் பொருத்தமானதே.

வடிவம் அவசியமானதே

வடிவங்களெல்லாம் வெறும் மனதின் கற்பனை என்று வாயால் சொல்லுவது எளிது. உள்ளன்போடு நாம் விரும்பும் குழந்தை ஒன்றன் வடிவத்தைக் கற்பனையென்று புறக்கணிக்க நமக்கு எப்பொழுதாவது மனம் துணிகின்றதா? கட்டழகுக்கு இருப்பிடமாகிய அக்குழந்தையினிடத்திருந்து நமது கண்களை மீட்டெடுக்க நாம் மகிழ்வோடு ஒருப்படுகின்றோமா? தனது அழகைக் கலைத்துவிட்டு வெறும் ஆனந்த சொரூபமாக இருந்தால் போதும் என்று அக்குழந்தையிடத்து நாம் எப்பொழுதாவது வேண்டிக்கொள்வோமா? அழகைக் கலைக்கவோ, புறக்கணிக்கவோ யாருக்கும் மனம் வருவதில்லை. ஊசியானது காந்தத்திலேயே ஒட்டிக்கிடப்பதுபோன்று அழகிலேயே ஊறிக்கிடக்க நாம் ஆசைப்படுகிறோம். இனி, கடவுளே தனது லாவண்யத்தையெல்லாம் ஒரு பாலகனுடைய வடிவத்தில் திரண்டு வந்து ஒளிரும்படி செய்தால் அதில் வசப்படாத மாந்தரும் உலகில் உளரோ?

சுடர்விட்டு எரியும் தீயில் உள்ள அழகை விட்டில்பூச்சி அறிவதுபோன்று வேறு யாரும் அறிவதில்லை. அந்த அழகை ரசித்தல் பொருட்டு விட்டில்பூச்சி கொழுந்துவிட்டு எரியும் தீயில் பாய்கிறது. தன் உடலே அழலில் ஒரு நொடிப்பொழுதில் பொசுங்கிப்போவதைப்பற்றி நினைக்க அதற்கு நேரமில்லை. அங்ஙனம் கைம்மாறு கருதாது அழகி னிடத்துத் தங்களை ஒப்படைப்பது உயிர்களின் இயல்பு. கடவுளின் மகிமை பலவிதங்களில் வெளியாகிறது. அவர் அறிவுக் கடவுளாக, ஆற்றல் கடவுளாக, அன்புக் கடவுளாக, அழகுக் கடவுளாக ஒளிர்கிறார். இத்தனைவித மகிமைகளுள் அழகு என்னும் மகிமையை எல்லா உயிர்களும் போற்று கின்றன. பக்தன் ஒருவன் தான் வணங்கும் தெய்வத்தின் சுந்தரசொரூபத்தைக் கண்டான பிறகு வேறு எந்தவிதமான நாட்டமும் அவனுக்கு உண்டாவதில்லை. மலரின்கண் உள்ள தேனை அருந்தும் ஈ தன்னையே மறந்துவிடுவதுபோன்று, தன் தெய்வத்தின் பொலிவில் பக்தன் தன்னை மறந்துவிடு கிறான். பின்பு மாறுபடும் சமயங்களைப்பற்றிப் பேச அவ னுக்கு அவகாசமில்லை. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்னும் மதக்கோட்பாடுகளெல்லாம் அவனுக்குப் பொருளற்றவைகளாம். உருவ வழிபாடு செய்கிறவர்களெல் லாம் பிறகு அகண்ட சச்சிதானந்தமாகிய அருவ வழிபாட் டுக்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள் என்னும் பேச்செல் லாம் அறிவிலிகளின் பிதற்றுதலாக அந்த பக்தனுக்குத் தோன்றுகிறது. தனது அருள்ஜோதி தெய்வத்துடன் மாறாத இணக்கம் வைப்பதைத் தவிர வேறு ஒன்றையும் அவன் அறியான். கண்ணன் போன்ற தெய்வத்தைத் தன் தோழனாகவோ அல்லது தன் பராமரிப்புக்குரிய செல்வ னாகவோ கருதுவது பக்தனுடைய இன்னியல்பு ஆய்விடு கிறது.

6. உடல் உணர்வு பக்திக்கு இடைஞ்சல்

காத்யாயனி வழிபாடு

ஸ்ரீ கிருஷ்ணனை ஒப்பற்ற அன்புக் கடவுளாகப் பிருந்தாவன வாசிகளாகிய கோபர்களும் கோபிகளும் கருதிவந்தனர். அவனை வெறும் மானுடன் என்று கருதுவது அவர்களுக்கு சாத்தியமல்லாமல் போய்விட்டது. அசாதாரணமான தெய்வீகச் சக்திகளையும் தெய்வீகச் செயல்களையும் அவர்கள் அவனிடம் கண்டார்கள். இனி, அவனுடைய அழகோ இவ்வுலகில் எதனோடும் ஒப்பிட முடியாதது. அவன் அழகன். அதற்குமேல் பேச்சுக்கு இடமில்லை. அவனைப் போற்றுது பின்பு என் செய்வது! யசோதையும் நந்தகோபனும் இந்த அழகுத் தெய்வத்தைத் தங்கள் செல்வன் என்று கருதினார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் கண்ணனைத் தங்கள் உயிர்க்கு உயிர் என்றே எண்ணி வந்தனர். பரம்பொருளே இந்த வடிவத்தில் வந்திருக்கிறது என்று முனிவர்கள் அவனுடைய யதார்த்த சொரூபத்தை அறிந்துகொண்டார்கள். எண்ணிறந்த செயல்களைப் புரிந்துகொண்டு வந்ததற்கிடையில் ஒரு செயலிலும் கட்டுப்படாத சாந்த சொரூபி கிருஷ்ணன் என்பதை அறிந்த யோகிகள் அவன் சொரூபத்தை எண்ணி சாந்தியடைந்தார்.

பிருந்தாவனக் கோபிகளுக்குக் கண்ணனிடம் உண்டான அன்புக்கு அளவில்லை. அந்த அன்பு மேலும் மேலும் பெருகவேண்டுமென்று அவர்கள் பெரிதும் விரும்பினர். காத்யாயனி எனனும் பெயர் பூண்டு ஆங்குக் கோயில்கொண்டிருந்த அன்னை பராசக்தியிடம் அவர்கள் அதைக்குறித்துத் தவமிருந்தனர். தொடர்ந்து முப்பது நாளைக்கு நோன்புகள் நோற்றுத் தங்களைப் பரிபக்குவப்படுத்தவும் அவர்கள் தீர்மா

னித்தனர். ஹேமந்த ருது என்று இயம்பப்படும் பனிக்காலம் அப்பொழுதுதான் துவங்குவதாயிற்று. அதிகாலையில் அப் பாவையர்கள் துயில் எழுந்திருந்தார்கள். சிறுசிறு கூட்டங் களாய் அவர்கள் யமுனை நதிக்குச்சென்று நீராடித் தங்களைத் தூயவர் ஆக்கிக்கொண்டார்கள். பிறகு தொடர்ந்து தேவி வழிபாடு துவங்குவதாயிற்று. சந்தனம் தோய்ந்த நறுமலர் தூவினர்கள். அன்று அலர்ந்த பூக்கொண்டு மாலைதொடுத்து அதைச் சாத்தினர்கள். தீபம் ஏற்றி வைத்துத் தூபம் போட் டார்கள். ஆவின் பாலைக்கொண்டு அட்டிய பாயஸம், நிழலில் கனிந்த கனிவகைகள், கொம்பில் முதிர்ந்த செழுந் தேன் ஆகியவைகளை ஆயர்பாடிப் பூவையர்கள் அன்னை பராசக்திக்கு நைவேத்தியமாகப் படைத்தார்கள். நெடு நேரம் அவர்கள் அம்பிகையின் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் கள். பின்பு அவர்கள் காத்யாயனியிடம் செய்துகொண்ட கோரிக்கையாவது: "மகாமாயே, காத்யாயனி, மகாயோ கினி, புவனேசுவரி, அகிலாண்டநாயகி உன்னை நாங்கள் வழுத்துகிறோம். நந்தகோபன் மகனுகிய கண்ணனை நாங்கள் கடவுளாகக் காணும் திறனை தேவி, எங்களுக்குத் தந்தருள் வாயாக," இங்ஙனம் அம்பிகையிடம் அவர்கள் பரிந்து பிரார்த்தனை பண்ணிக்கொண்டார்கள். பக்தி நிறைந்த பிரார்த்தனைகளை நிறைவேற்றிவைக்கும் பாங்கு அந்த பகவதியிடமிருந்தது. ஆதலால் அவளைக் கருணம்பிகை யென்றும் கோபிமார்கள் கூறிவந்தார்கள்.

இப்படி அவர்கள் அம்பிகையை வழுத்தி வந்தபொழுது நெறியான வாழ்க்கையும் இயல்பாக அவர்களிடம் அமைந்து விட்டது. எதை உண்ணுதல், எதை உண்ணுது ஒழித்தல் என்ற நியமனம் தானகவே அவர்களது உள்ளத்தில் தோன் றுவதாயிற்று. ஓர் உயர்ந்த நிலைக்கு அவர்கள் தங்களைப்

பக்குவப்படுத்திக்கொண்டு வந்தார்கள் என்பதும் வெளியாயிற்று. ஒருநாள் தங்களுடைய வழிபாட்டை மிகத் தீவிரமாக அவர்கள் துவக்கினார்கள். அதிகாலையிலிருந்து ஆர்வத்தோடு ஆராதனையை நிகழ்த்தினார்கள். அம்பிகையின் வழிபாட்டுடன் சேர்த்துக் கண்ணன் புகழ்பாடவும் செய்தனர். கோபாலகிருஷ்ணன்மீது தாங்கள் கொண்டிருந்த அருள்காதல் பன்மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை. அன்று காலையிலிருந்து மாலை வரையில் காலம் கடந்ததும் அவர்கள் கருத்தில் படவில்லை. ஆனந்தபரவச நிலையிலேயே அவர்கள் ஊறியிருந்துவிட்டார்கள். கண்ணன்மீது அத்தகைய பெரும் பற்றுதல் அவர்களுக்கு ஏன் உண்டாயிற்று என்னும் கேள்வி எழலாம். அப்பொழுது அவன் இளங்குமாரன். திருமகளானவள் தனது அழகு யாவையும் ஏனைய இடங்களிலிருந்து கரந்தெடுத்துக்கொண்டு வந்து கண்ணன் மீதே குவித்துவிட்டாள் போலும். பின்பு அவனை விட்டுப் பிரிய மனமில்லாதவளாய் அவள் கண்ணனையே தன் கணவனாகக்கொண்டு அவனிடம் நிலைபெற்று விட்டாள் என்று இயம்ப வேண்டும். அவனுடைய சுந்தர சொரூபத்தைக் காணுமளவு உள்ளம் உவகையடைந்தது. தெய்வீக எழில் அவனிடம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. நிறை நிலாவின் பொலிவு அவனுடைய முன்னிலையில் பொருளற்றதாய்விடும். அப்பொழுதுதான் அலர்ந்த செந்தாமரையும் அவனுடைய முகவிலாசத்தின் முன் சோபையற்றதாய்விடும். சூரியோதயத்தில் மிளிரும் மகிமை கண்ணனுடைய களங்கமற்ற புன்முறுவலுக்கு நிகராகாது. அவனுடைய தோற்றத்தில் தென்பட்ட புதுமையை எந்தப் பனிமலரிலும் காணமுடியாது. வானவில்லில் வெளியாகிய வர்ணங்கள் கண்ணனுடைய மேனியில்

மிளிர்ந்த நீல நிறத்துக்கு ஒப்பாகா. மயிலின் அழகும் குயிலின் ஓசையும் கோபாலகிருஷ்ணனது கோமளத்துக்கு அருகில் வரமாட்டா. கருவி கரணங்கள் ஓய்ந்து முனிவர்களது உள்ளத்தில் இனிமையோடு வீற்றிருந்தது கண்ணனுடைய சொரூபம். அத்தகைய அழகன் கோபியர்களுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போய்விட்டான் என்றால் அதில் வியப்பு யாது உளது?

துகில் இழந்த தையலர்கள்

வழக்கம்போன்று காத்யாயனியை வழுத்திவிட்டுக் கோபியர்கள் ஒருநாள் மாலையில் யமுனா தீரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கண்ணனுடைய புகழ்பாடி அவர்கள் அப்பொழுது ஆனந்த பரவச நிலையடைந்திருந்தனர். கண்ணன் தனக்கு முற்றிலும் உற்றவன் ஆய்விட்டான் என்ற உணர்ச்சி ஒவ்வொருத்தியினுடைய உள்ளத்திலும் ஊற்றெடுத்தது. மனத்தகத்து மிளிர்ந்த மகிழ்ச்சியை விளக்குதற்கு நீரினுள் மூழ்கி விளையாடினாலென்ன என்ற எண்ணம் சிலர் உள்ளத்தில் உதித்தது. உடனே அவர்கள் அதை மற்றவர்களுக்கு எடுத்து உரைத்தார்கள். அது விஷயத்தில் அதிவிரைவில் எல்லார் கருத்தும் ஒருமித்து நின்றது. தாங்கள் அணிந்திருந்த ஆடைகளையெல்லாம் அப்பொழுதே அவிழ்த்தெடுத்துக் கரையின்மீது ஆங்காங்கு வைத்தார்கள். வேற்றாரோ, ஆடவரோ யாரும் அவ்வேளையில் ஆங்குத் தென்படவில்லை. ஜலக்கிரீடையில் அவர்களுக்கு உற்சாகம் பிறந்ததற்கு அதுவும் ஒரு காரணமாகும். கோது இல்லாத கோதையர்கள் சின்னஞ்சிறு சிறுமிகளைப் போன்று அப்பொழுது ஆய்விட்டார்கள். நாணம் என்பதைச் சிறிதும் அறியாதவர்களாய் அவர்கள் நீரினுள் ஓடியாடி விளையாடினார்கள். யமுனையின் குளிர்ந்த நன்னீரும் அவர்களுடைய

களியாட்டத்துக்குக் குதூகலமூட்டியது. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் அணுகியது. பனிக்காலமாதலால் குளிரும் தனது ஆதிக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படுத்த ஆரம்பித்தது. வனிதைகளும் தங்களுடைய விளையாட்டை ஒரு முடிவுக்குக்கொண்டு வந்தனர். ஒருத்தி பின் ஒருத்தியாக நீரினின்று கிளம்பிக் கரைக்கு வந்தனர். தான் துகில் வைத்த இடத்தை நோக்கி நேராகச் சென்றனர். அந்தோ, ஆங்கு ஆடையொன்றும் தென்படவில்லை! திகைத்து நின்றாள் ஒருத்தி; தயக்கத்துடன் திக்கனைத்தும் பார்த்தாள் மற்றொருத்தி; இளம் தையலர்கள் பலர் திகில் அடைந்துவிட்டனர். வெட்ககரமான இந்த நெருக்கடியினின்று மீள்வது எங்ஙனம்! ஓங்கி வளர்ந்திருந்த கடம்பமரம் ஒன்று அண்மையில் நின்று கொண்டிருந்தது. தற்செயலாய்த் தோழியொருத்தி அந்தமரத்தின் உச்சாணியை உற்றுநோக்கினாள். விந்தையுள் விந்தை! மரக்கிளைகளின்மீது மங்கையர்களது சேலைகள் பூச்செண்டுகள் போன்று தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளின் விதவிதமான வர்ணங்கள் காட்சிக்கு இனியவைகளாய் இருந்தன. மற்றொரு விந்தை மரகதம் போன்ற மேனிபடைத்திருந்த முகுந்தன், கோபியர்க்குக் கடவுளாகிய கண்ணன் அம்மரக்கிளைகளில் ஒன்றன்மீது இனிது வீற்றிருந்தான். "பாருங்களடி, நாம் போற்றும் பிள்ளையாண்டானை" என்றாள் அவனைக் காணலுற்ற பாங்கி. சிறிதுநேரத்துக்குள் அமளி ஒன்று நேர்வதாயிற்று. "அதோ, நம் உயிருக்கு உயிராகிய கண்ணன் இங்குக் கடம்பமரத்தின்மீது எழுந்தருளியிருக்கிறான். நமது ஆடைகளெல்லாம் மாயமாய் மறைந்துபோனதற்கு இந்த முகுந்தனே முகாமையாவான்."

இப்படி இயம்புதற்கிடையில் இடைச்சிகளுடைய இதயங்களினின்று பெரும் பாரம் ஒன்று மாயமாய் நீங்கப்பெற்

றது. ஆடையின்றி அல்லல் பட்டுக்கொண்டிருந்த தங்களுக்கு என்ன ஆபத்து வருமோவென்று அவர்கள் அரண்டு போயிருந்தனர். அந்தப் பீதி இப்பொழுது பறந்தோடிவிட்டது. கிருஷ்ணனுடைய பேராற்றலை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். துணிவும் தெம்பும் திடீரென்று அவர்களுக்கு வந்துவிட்டது. ஆயினும் அவர்கள் எல்லாரும் நதியினுள் ஓடிக் கழுத்தளவு நீரில் நின்றுகொண்டனர்.

சங்கடமான சம்பாஷணை

"நீராடுதல் முடிந்த பிறகு திரும்பவும் நீங்கள் ஏன் நதிக்குள் ஓடுகின்றீர்கள்?" என்றான் கோபாலகிருஷ்ணன்.

"கண்ணா, நாணத்துக்கு ஏதுவான இத்தகைய நெருக்கடியான நிலையில் நீ எங்களை வைத்துவிட்டாயே! நாங்கள் என் செய்வோம்?" இங்ஙனம் மங்கையர் மொழிந்தனர்.

"உங்களுக்காக நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கோபாலன் மேலும் கேட்டான்.

"எங்கள் ஆடைகளையெல்லாம் கிளைகளினின்று எடுத்துக்கரையில் வீசி எறிந்துவிடு. பின்பு நாங்கள் அவைகளை எடுத்து அணிந்துகொள்ளும் வரையில் நீ எட்டச் சென்று மறைந்திரு" இப்படி அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

"நேரிழையீர், அது வேண்டாம். நான் நவிலுவதற்குச் செவிகொடுங்கள். நீரினின்று நீங்கள் நிலத்துக்குக்கிளம்பி வாருங்கள். கரையின்மீது வரிசையாக நில்லுங்கள். பிறகு அவரவர் தலைமீது கைகுவித்து என்னைக் கும்பிடுங்கள். அப்பால் உங்கள் ஆடைகளை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன்." மரத்தின்மீது இருந்த சிறுவன் இப்படி நிபந்தனை போட்டான்.

"கண்ணா, எதைச்செய்ய நாங்கள் தயங்குகின்றோமோ, அதையே செய்து சாதிக்கும்படி நீ எங்களைத் தூண்டு

கின்ருய். தகைசான்ற உனக்கு இது தகாது." இப்படி யுவதிகள் மறுப்புக் கூறினர்.

"உங்கள் தயக்கந்தான் என்ன? தங்குதடையின்றி அதைத் தெரிவியுங்கள், பார்ப்போம்." கோபாலன் இப்படி மேலும் கிளறினன்.

கோபியர் ஆட்சேபம் கூறுவாராயினர்: "சிறுவன் எனினும் கண்ணு, நீ ஆடவன் தானே! உனது முன்னிலையில் நாங்கள் மகளிருக்கு உற்ற முறையில் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிருேம். ஆடையின்றி ஆடவர் எதிரில் மகளிர் தென்படலாகாது. இத்தகைய உலக வாய்ப் பாட்டை அறிந்து கொள்ளாதவன் போன்று நீ நடந்து கொள்ளுதல் பொருந்தாது. மாலை வேளை வந்து விட்டது. மேலும் அந்தி நேரமும் வரப்போகிறது. வீட்டுக்குத் திரும்பு தலில் இனிக் காலதாமதம் ஆய்விட்டால் உற்ருர் உறவினர் எங்களைக் கடிந்து கொள்வார்கள். இந்த இக்கட்டுக்குக் கண்ணு, நீயே காரணமாவாய். போதும், போதும். பொருந் தாத இந்த விளையாட்டை இப்பொழுதே நிறுத்திவிடு." இப்படி அவர்கள் நயந்து கேட்டனர்; கெஞ்சிக் கேட்டனர்; வருந்தி முகம்வாடி நின்றனர். இனித் தேம்பி அழவேண்டி யது தான் பாக்கி.

பிரேமை பக்தியைப் பெறும் முறை

இப்பொழுது இளமுறுவல் பூத்த கிருஷ்ணன் தனது நெறியை இந்த நெருக்கடியில் எடுத்து நவிலுவானயினன்; "மடக்கொடிகாள், நீங்கள் நோன்பு நோற்றதன் உட் கருத்தை நானறிவேன். உயிர்களின் உள்ளத்தில் உதிக்கிற எண்ணங்களையெல்லாம் நான் அப்போதைக்கப்போது அளந்து விடுகிறேன். உண்மையாக நீங்கள் என்னிடத்து

அன்பு பூண்டுள்ளவர்களா என்பதை ஆராய்தற்கே நான் இப்பொழுது இச்செயலைச் செய்துள்ளேன். இது அடாத செய்லென உங்களுக்குத் தோன்றுமாயின் என்னை மன்னித்து விடுங்கள். என்னைப் பொறுத்தவரையில் இதை நான் வெறும் விளையாட்டுக்காகச் செய்யவில்லை. உயர்ந்ததொரு கோட்பாடு இதில் அடங்கியிருக்கிறது. அன்பின் நிறை நிலையை உங்களுக்கு விளக்கிக் காட்டுதற்கே இந்த நெருக்கடியை நான் உண்டுபண்ணியிருக்கிறேன். அன்பின் உச்ச நிலைக்குப் பிரேமை என்று பெயர். உடல் உணர்ச்சி உடைத்திருப்பவர்களுக்கும் பேரன்புக்கும் வெகுதூரம். தங்களை உடல் சொரூபமாக உணர்பவரது அன்பு போலியன்பு. உடல் சொரூபத்தில் ஆண் பெண் என்ற வேற்றுமை இருக்கிறது. உடல் உணர்வைக் கடந்த நிலையில் பேரன்பு அல்லது பிரேமை தானாகப் பொங்கித் ததும்பிக்கொண்டு வருகிறது. உடல் உணர்வு காமத்தை உண்டுபண்ணுகிறது. காமம் இருக்குமிடத்தில் பேரன்பு இல்லை. பேரன்பு பெருக்கெடுத்து வரும்பொழுது காமம் இருக்குமிடம் தெரியாது அழிந்துபட்டுப் போகிறது. தனக்காகவென்று தேடும் தன்மையது காமம்; நான் எனது என்பனவற்றையெல்லாம் துரத்திவிடும் தன்மையது பேரன்பு. காமம் குடிகொண்டிருக்கும் உள்ளத்தில் அச்சம், நாணம், அவமானம், அவதூறு முதலியவைகளைப் பற்றிய உணர்வு உண்டாகிறது. பேரன்பு ஊற்றெடுத்துள்ள உள்ளத்தில் அச்சம் இல்லை; உடல் உணர்வினின்று வரும் நாணம் கிடையாது; மற்றவர்கள் அவமதிப்பார்களே என்ற ஏக்கம் ஏற்படாது; பிறர் பழிக்கு ஆளாகவேண்டி வருமே என்ற தயக்கம் தோன்றுவதில்லை. தீயில் வைத்த அன்பினால் விட்டில்பூச்சி தன் உடலையே தீக்கு இரையாக்கி விடுகிறது. பிரேமை பக்தி படைத்

திருப்பவர் தமது அனைத்தையும் தாம் போற்றும் புருஷனிடம் ஒப்படைத்து விடுகின்றனர். மங்கையர்காள், உங்களுக்கு அத்தகைய மனநிலை வந்துள்ளதா?"

"கண்ணா, உன்னை நாங்கள் நேசிக்கிறோம். ஆனால் நீ பகரும் பிரேமை பக்தி இன்னும் எங்களுக்கு உண்டாகவில்லை. நாங்கள் கொண்டுள்ள உடல் அபிமானம் எங்களை விட்டு எளிதில் போய்விடாது." இவ்வாறு கோபியர் தங்களிடமிருந்த தேகாபிமானத்தைத் தெரிவித்தனர்.

கண்ணன் மேலும் கூறுவானாயினன்: "உங்கள் தகைமையைத் தெளிவுபட உங்களுக்குத் தெரிவித்தல் பொருட்டு நான் ஒரு தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டேன். உடல் பற்று வைத்திருப்பவர்க்கெல்லாம் அருவருப்புக்குரியு அடாத செயலாக இது தென்படும். ஆயினும் இதுவே வாழ்க்கையைப் பற்றிய மேலாம் கோட்பாடு. மன அமைப்பில் நீங்கள் திரும்பவும் குழந்தைகளின் நிலைக்குப்போய்விட வேண்டும். சிறு குழந்தைகளுக்கு உடல் உணர்வு கிடையாது. ஆதலால் தங்களை ஆண்பாலர் என்றோ பெண்பாலர் என்றோ அவர்கள் நினைப்பதில்லை. நிர்வாணமாக ஓடியாடித் திரிவதைக் குறித்து அவர்கள் வெட்கப்படுவதில்லை. பிரேமை பக்தி உங்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்து வரும் போது உடல் உணர்வை நீங்கள் அறவே மறந்துவிடுவீர்கள். நீங்கள் உணர்வைக் கடந்து பிரேமை பக்தியைப் பெறுமாறு ஆசீர்வதிக்கிறேன்."

பின்பு மரக்கிளைகள்மீது மாட்டி வைத்திருந்த துகில்களையெல்லாம் எடுத்துத் தாமோதரன் தரையின்மீது வீசிப் போட்டான். கோபியர்களும் அவைகளை எடுத்து அணிந்து கொண்டு அதிவிரைவில் அவரவர் வீடு போய்ச் சேர்ந்தனர்.

7. ராசலீலை

குழல் ஓசை

மாரிக் காலத்துக்குப் பிறகு மண்ணுலகெல்லாம் செழிப்புற்றிருந்தது. விண்ணிலோ மேகமொன்றும் மிச்சமில்லை. எல்லாம் மழையாகப் பெய்தாய் விட்டது. மாசு மறுவற்ற நீலவெளி. அதில் மிதந்து கொண்டிருந்த நிறைநிலா தனது வெள்ளி வெளிச்சத்தை நிலமிசை நிரப்பிக் கொண்டிருந்தது. உயிர்வகைகளுக்கு அது உலப்பில்லாத உற்சாகத்தை ஊட்டுவதாயிற்று. மெல்லியல்பு படைத்திருந்த இளங்காற்று காதில் ஏதோ இரகசியம் பேசுவது போன்று கிசுகிசுத்தது. அப்பொழுதுதான் அலர்ந்திருந்த மலர்மிசை மணம் மிக மேவியிருந்தது. இளங்காற்றே அந்த நறுமணத்தைத் தன்பால் வாங்கிக்கொண்டு நாலாபக்கமும் நல்விருந்தாக அதைச் சுமந்து சென்றது. புண்ணிய நதியாக யமுனை சலசலவென்று சிற்றொலி கிளப்பிப் பாய்ந்துகொண்டிருந்தது. அவ்வாற்றின் அடங்கிய அரவம் கண்ணனது புகழ்பாடுவது போன்று ஒலித்தது. மல்லிகைப் பூக்கள் தமது தூவெண் நெஞ்சங்களைத் திறந்து காட்டுவனவாயின. அம்மல்லிகை மீது மோகங்கொண்ட மந்தமாருதம் மெல்ல வந்து அதன்மீது முத்தமிட்டது. அந்திவேளையின் அமைதி யாண்டும் நிலவுவதாயிற்று. உயிர்களில் பல ஓய்வில் ரமித்திருந்தன. இன்னும் சில உயிர்கள் உறக்கத்தின் வசப்பட்டிருந்தன.

யமுனை தீரத்தில் சோலை செறிந்த இடமொன்றில் கண்ணன் தன்னந்தனியனாய் அமர்ந்திருந்தான். புல்லாங்குழல் ஒன்று அவன் கையில் இருந்தது. இயற்கையின் வனப்பு அவனுடைய உள்ளத்தில் உவகையூட்டியது. இனிய குழலோசையை அவன் கிளப்பினான். அக்கருவியை மீட்டுதல்

மூலம் உலகத்தவர்க்கு அவன் உயர்ந்தொரு கருத்தை விளக்கி வந்தான். குழல் என்பது வெறும் நாணல் துண்டு. காலில் மிதிபட்டால் அது ஒன்றுக்கும் உதவாத குப்பை செத்தையோடு சேர்ந்துவிடுகிறது. மற்று, அதைக் குழலாகக் கையாண்டாலோ மனதை மகோன்னத நிலைக்கு அது எடுத்துச் செல்கிறது. உடல் வாழ்க்கையும் அத்தகையதே. நாணல் போன்றது உடல். அதைச் சிறு நெறியில் செலுத்தினால் மனிதன் கயவனாய்விடுகிறான். பெருநெறி பிடித்தொழுகினால் அவன் பேரானந்தமுற்றிருந்து பிறவிப்பெருங்கடலைக் கடந்து செல்வான். கிருஷ்ணன் குழலினின்று உண்டுபண்ணிய கானம் அப்பேருண்மையைப் புகட்டுவதாயிற்று.

அழகும் கடவுளும் ஒன்று என்பதற்குக் கண்ணனே எடுத்துக்காட்டு ஆவான் என்பதை ஏற்கனவே ஆராய்ந்தோம். இனி, கலைஞானம் ஒன்றை உயர்வுற உயர்த்தினால் அது உயிர்களைத் தெய்வீக நிலைக்கு எடுத்துச் செல்ல வல்லது என்பதைக் காட்டக் கண்ணன் முன்வந்தான். ஓவியம் காவியம் போன்ற கலைகள் மக்களை மட்டும் மேன்மைப்படுத்த வல்லவைகள். சிற்றுயிர்களைச் சீர்படுத்த அவை உதவ மாட்டா. ஆனால் இசை என்னும் கலையின் பாங்கு அத்தகையதன்று. எல்லா உயிர்களையும் உயர்நிலைக்கு எடுத்துச் செல்ல அதற்கு இயலும். கண்ணன் கிளப்பிய குழலோசை அக்கோட்பாட்டை நிரூபித்தது. கானகமெங்கும் அது காற்றில் கலந்து பரவியது. அந்தக் கானத்தின் இனிமைக்குக் காது கொடுத்த கரடி தன் கொடூரத் தன்மையை மறந்திருந்தது. புருஷோத்தமனுடைய புல்லாங்குழல் ஓசை கேட்ட சிறுபுலியொன்று சாந்த சொரூபமுடையதாய் மாறிவிட்டது. கர்ஜித்து மற்ற உயிர்களைப் பயமுறுத்தும் சிங்கம் ஒன்று தியானம் பண்ணுவது போன்று அமைதியுற்றிருந்

தது. தமது அச்சத்தை ஒழித்துவிட்டு மான்கள் பல முரளி கானத்தில் மூழ்கியிருந்தன. இந்த இன்னிசைக்குச் செவி சாய்த்தபொழுது நச்சுப்பாம்பு நல்ல பாம்பாகி விட்டது. உயிர்களை உயர்நிலைக்குக்கொண்டுபோக வல்லதும் இது காறும் தாங்கள் பாடாததும் கேளாததுமாகிய பண் ஒன்றைப் புள்ளினங்கள் கேட்டுப் பரவசமடைந்திருந்தன. சுருங்கச் சொல்லின் சிற்றுயிர்கள் அனைத்தும் தங்களுடைய ஜீவ போதத்தை மறந்துவிட்டு ஆனந்த நிலையில் ஒன்றுபட்டிருந்தன.

இனி, மாந்தர்க்கிடையில் இது எத்தகைய மன நிலையை உண்டுபண்ணியது என்பதை ஓர்ந்து பார்க்கவேண்டும். காற்றோடு கலந்துசென்ற குழலோசை கிராமத்துக்குள்ளேயும் பரவியது. கோமளாங்கிகளாகிய கோபியர் காதில் அது வீழ்ந்ததும் அவர்கள் ஆனந்தபரவசமடைந்து விட்டனர். அவர்களுள் ஒருத்தி தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். அக்கணமே அவள் அதைத் தன் மடியினின்று எடுத்துத் தொட்டிலில் வைத்தாள். குழந்தை கோவென்று கதறியழுததையும் கவனியாது கண்ணனைக் காண அவன் கடிதில் சென்றாள். மற்றொருத்தி முதியோர்க்கு அமுது வழங்கிக் கொண்டிருந்தாள். தனது பணியைப் பாதியோடு நிறுத்திவிட்டு அந்த நல்லாள் நாதம் தோன்றி வந்த இடத்தை நாடிப்போய்விட்டாள். கூந்தலைக் கோதிக் கொண்டிருந்த ஒருத்தி பரட்டைச்சி போன்று பறந்தோடினாள். ஆடை அணிந்துகொண்டிருந்த ஒருத்தி அதை அப்படியே சுருட்டிப் பிடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தாள். சோறு சமைத்துக் கஞ்சி வடித்துக்கொண்டிருந்த ஒருத்தி அதை அப்படியே அடுப்பில் வைத்துவிட்டு வெளியேகினாள். பசுவின் பால் கறந்துகொண்டிருந்த ஒருத்தி அக்கடமையைப்

புறக்கணித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டாள். உணவு அருந்திக் கொண்டிருந்த ஒரு மாது கை கழுவ மறந்தவளாய் முன் வந்தாள். கணவனோடு உரையாடிக்கொண்டிருந்த கோபி யொருத்தி தன் பேச்சை அப்படியே நிறுத்திவிட்டுப் புறப் பட்டுவிட்டாள். உள்ளத்தைக் கொள்ளைகொண்டுபோக வல்ல குழலோசையைக் கேட்டதுதான் பாக்கி. கணப் பொழுதில் கோபிகை ஒவ்வொருத்தியும் தன் வயம் இழந்த வளாய்த் தன் கடமையைத் துறந்துவிட்டாள். கண்ணனைச் சென்று காணவிட்டால் தன் உயிரே போய்விடும் போன்று அவள் உணர்ந்தாள். தான் மட்டும் அத்தனிச் செயலில் ஈடுபட்டதாக எண்ணிக்கொண்டு ஒவ்வொரு மாதும் வீதியில் விரைந்து ஏகினாள். ஆனால் நிகழ்ந்தது யாது? ஒருத்தி மற்றொருத்தியைக் கண்டு மகிழ்ந்தாள். இருவர், மூவர், நால்வராகத் தென்பட்ட காட்சி கடைசியில் கோபியருடைய பெருங்குழாம் ஆய்விட்டது. 'கோவிந்தா, எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம். மற்றை நம்காமங்கள் மாற்று,' என்று அவர்கள் பலகால் செய்த பிரார்த்தனையை இப்பொழுது நடைமுறைக் குக் கொண்டுவந்துவிட்டனர். அப்பெண்பாலர்களுடைய செயலில் காம வாசனைக்குச் சிறிதேனும் இடமில்லை. தனி யாகத் தன் காதலனோடு இருக்க விரும்புவது காமவாசனை. தோழிமார் அனைவரையும் தன்னோடு மனமுவந்து சேர்த்துக் கொள்வது புனிதமான பக்தியின் பிரபாவமாகும். மேலும் அவர்கள் நாடிச்சென்றது பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட தெய்வீகச் சிறுவன் ஒருவனையாம். கண்கண்ட தெய்வம் என்று நம் போன்றவர்கள் கண்ணனைப் பற்றிப் பகரலாம். ஆனால் கோபியர்களுடைய கருத்தில் அவன் அவர்களுடைய உயிர்க்கு உயிர் தெய்வம் என்று கருதினால் ஒருவேளை சிறிது

அச்சம் உண்டாகலாம். உயிரினிடத்தோ அன்பு இருக்கிறது. அச்சத்துக்குச் சிறிதேனும் ஆங்கு இடமில்லை. உயிராகிய அவனைக் கண்டுகளிக்க அத்தனைபேர் கூடிச் சென்றது அவர்களுக்கு அளவில்லாத ஆனந்தத்தை ஊட்டியது.

நடைக்கு ஒரு விடை

பெருங்கும்பலாகக் குழுமி வந்த கோபியர்களைக் கண்ட கண்ணன் கழறலாயினன்: "உற்றார் உறவினரைப்பிரிந்து இந்த இரவு வேளையில் நீங்கள் இங்கு நதிக்கரைக்கு வந்தது பொருந்தாது. நீங்கள் புரிந்தது பாராட்டத்தக்க செயலன்று. தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்துகொண்டு அவர்கள் அருகில் இருக்கவேண்டிய வேளை இது. கலந்துகொண்ட கணவனுக்குக் குற்றேவல் புரிந்து அவன் அருகில் காத்திருக்கும் வேளை இது. ஈன்றெடுத்த சிசுவுக்குச் சிசுருட்சை செய்துகொண்டு வீட்டிலிருக்கும் வேளை இது. உற்ற கடமைகளைப் புறக்கணித்துவிட்டு உங்கள் போக்கில் இப்படிப் புறம் போந்தது பாராட்டத்தக்கதன்று. இப்பொழுதே அவரவர் இல்லத்துக்கு ஏகுங்கள்.

இக்கூற்றைக் கேட்டதும் தங்கள் உள்ளம் கோடரியால் பிளக்கப்பட்டதுபோன்று கோபியர் துயரத்தால் துடித்தனர். ஆங்காங்கு அசைவற்று அவர்கள் நின்றுவிட்டனர். பெருமூச்சு விட்டுக்கொண்டு அவர்கள் பதைபதைத்தனர். அவர்களுடைய பவளச் செவ்வாய் துயரத்தால் வெளுத்துப் போய்விட்டது. கண்ணிமையில் தீட்டியிருந்த மை கண்ணீரால் கழுவப்பட்டது. கண்ணன்மீது கொண்டிருந்த பிரேமையினால் ஏனைய பற்றுதல்களையெல்லாம் அவர்கள் துறந்துவிட்டனர். தழுதழுத்தகுரலில் அவர்கள் கூறுவாராயினர்:

"எங்கள் உயிருக்கு இறைவா, இத்தகைய கொடுஞ்சொற்களைச் சொல்லவேண்டாம். உலகப்பற்று அனைத்தையும் ஒருங்கே ஒழித்துவிட்டு நாங்கள் யாண்டும் உனக்கே ஆட்பட்டவர் ஆகின்றோம். எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போய்விட்ட கண்ணா, இனி நீ கல்நெஞ்சக்காரன் ஆய்விடாதே. எங்களைக் கைவிட்டுவிட வேண்டாம்; உன்னை அடைந்து விடுதலையடைய விரும்பும் எங்களது விண்ணப்பத்துக்குச் சிறிது செவிகொடு. பெண்டிர்களாகிய நாங்கள் உற்றார் உறவினர்க்குப் பணிவிடை செய்யவேண்டுமென்று நீ பகர்கின்றாய். ஆனால் நீ உயிர்கள் அனைத்துக்கும் உயிர் என்பதை உணர்கிறோம். உனக்கு அடிமைகளாவதன்மூலம் மற்ற உயிர்களுக்கெல்லாம் நாங்கள் செய்யவேண்டிய கடமைகள் நிறைவேற்றப் பெறுகின்றன. உன்னை மறந்துவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டுக் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணிவிடை புரிவதால் எங்கள் பந்தபாசம் பன்மடங்கு அதிகரிக்கும். கமலக் கண்ணா, வேண்டினவர்களுக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்க உனக்கு இயலும். நெடு நாளாக நாங்கள் கொண்டுள்ள பேரவாவை இன்று நீ நிறைவேற்றிவைப்பாயாக. உலக வாழ்க்கையில் அழுந்திக் கிடந்த எங்கள் உள்ளத்தை மீட்டெடுத்து இப்பொழுது உனக்கே உரியதாக்கிவிட்டோம். காந்தம் ஊசியைக் கவர்ந்து இழுப்பதுபோன்று நீ எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போய்விட்டாய். உன்னைப் பிரிந்து வீட்டுக்குப் போகக் கால்கள் வலிவு பெறமாட்டா. உனக்கன்றி வேறு கடமைகளைச் செய்ய எங்கள் கைகள் உதவமாட்டா. இனி உன்னைப் பிரிந்தால் எங்கள் உயிர் பிரியும்.

"எங்கள் உள்ளத்தில் புதைந்துகிடந்த பேரன்பை உனது புல்லாங்குழல் ஓசையானது பெயர்த்துவெளியில்

கொண்டுவந்துவிட்டது. உனது பேரழகிலும் புன்முறுவலிலும் நாங்கள் பிடிபட்டுவிட்டோம். நீ எங்களுக்கு அந்தராத்மா. உன் சொருபத்தில் மூழ்கியிருத்தல் பொருட்டு எங்கள் கணவன்மார்களை நாங்கள் துறந்துவிட்டோம். அப்படிச் செய்வதை இழுக்கு என்று உலகத்தவர்கள் இயம்புவார்களாகில் அதைக் குறித்து நாங்கள் அவமானப்பட்டோம். எங்கள் உடல், உள்ளம், உயிர் ஆகிய அனைத்தும் கண்ணா, உனக்கே உரியனவாகுக. காட்டில் திரியும் கொடிய விலங்குகளும் உனது குழலோசைக்கு வசப்பட்டுவிடுகின்றன. வானத்தில் பறக்கும் புள்ளினங்களும் உனக்கு வசப்பட்டுவிடுகின்றன. ஜீவகோடிகள் அனைத்துக்கும் நீ காந்தன். கோபியர்களாகிய எங்களுக்கும் நீயே நாதன். எங்கள் போற்றுதலை நீ ஏற்றுக்கொள்வாயாக.”

உள்ளன்போடு கோபியர்கள் விண்ணப்பித்த கூற்றுக்குக் கண்ணன் காது கொடுத்தான். அவர்களிடம் சிறிது கருணையும் அவன் காட்டினான். பிறகு ஆனந்தக் களிப்பில் அவர்கள் அனைவரும் ஈடுபட்டனர். சில வேளைகளில் கண்ணன் பாடினான் அல்லது வேணுவை எடுத்து ஊதினான். அந்த இசைக்கு ஒப்ப ஆயர் மடந்தையர் கிருஷ்ணனை வட்டமிட்டு ஆடினர். வேறு சில வேளைகளில் அவர்கள் தாமே கண்ணன் என்னும் கடவுளைப் போற்றிப் பாடிக்கொண்டு ஆடினர். ஆனந்தத்துக்குப் பிறப்பிடமாகிய பரம புருஷனை அண்டி அவர்கள் அனைவரும் ஆனந்தமே வடிவெடுத்தவர் ஆய்விட்டனர்.

ஆணவம் அவனை அடைவதற்குத் தடை

ஆயினும் உலப்பில்லாத அந்த ஆனந்தத்துக்குத் தடையொன்று தாற்காலிகமாக உண்டாயிற்று. கண்ணனது

கருணைக்குத் தான் ஒருத்திமட்டும் தனிப்பாத்திரமாய்விட்ட தாகக் கோபிகையொருத்தி கருதினாள். பின்பு அடுத்த வளுக்கு அந்த எண்ணம் வந்தது. அதிவிரைவில் அவர்கள் அனைவர் உள்ளத்திலும் அத்தகைய இறுமாப்பு உரு எடுத் தது. தொத்துநோய்போன்று எல்லாரையும் அது பற்றிப் பிடித்தது. மற்று, கண்ணனோ மாயமாய் அவர்களுக்கிடை யிலிருந்து நொடிப்பொழுதில் மறைந்துபோய்விட்டான்! ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தவர்கள் இப்பொழுது அல்லல் படலாயினர். கண்ணன் காணாது போனதைக் குறித்து அவர்கள் நெஞ்சம் கலங்கினர். அவனைத் தேடிக்கொண்டு இங்குமங்கும் ஓடியலைந்தனர். சிறிது நேரத்துக்குள் பித்துப் பிடித்தவர்கள் போன்று அவர்கள் ஆய்விட்டனர். காணமற் போன கன்றினுக்குச் சேதா கனிந்திரங்குவதுபோன்று கண்ணனுக்காகக் கோபிமார்கள் கரைந்துகொண்டு கானக மெங்கும் தேட ஆரம்பித்தனர். மரம் செடி கொடிகளைப் பார்த்து அவர்கள் உருகி ஓலமிட்டு வினவியது அவர்களு டைய மனநிலையை நன்கு படம்பிடித்துக்காட்டுகிறது. "நாக மரமே, எங்கள் நந்தகோபாலன் எங்குற்றான் என்பதை நீ அறியாயா? மாமரமே எங்கள் மாடுமேய்க்கும் மகன் எங்குச் சென்று மறைந்தான்? புங்கமரமே, எங்கள் பொன்னனை பிள்ளையாண்டான் எங்குச் சென்று புதைந்திருக்கிறான்? சண்பகமரமே, எங்கள் செங்கமலக் கண்ணன் சென்ற விடத்தை நீ அறியாயா? தாருகாவிருட்சமே, எங்கள் தாமோதரன் ஓடி ஒளிந்திருக்குமிடத்தை எங்களுக்கு எடுத்து இயம்பமாட்டாயா? மல்லிகையே, எங்கள் மாதவன் மறைந் திருக்குமிடத்தை நீ மொழியலாகாதா? நலம் மிக்க இந்த நல்லானைத் தாங்கி நிற்கும் நிலமகளே, அவனை எங்களுக்குக் கட்புலனாக்கமாட்டாயா?" இவ்வாறு விதிர் விதிர்த்துப்

புலம்பியழுதுகொண்டு அப்பேதையர்கள் நதிக்கரையிலும் வனாந்தரத்திலும் அலைந்து திரிந்தனர்.

ஆயாசத்தால் அயர்ந்துபோன அந்த அபலைகள் சிறிது நேரம் ஆற்றங்கரையில் அமைதியுற்றிருந்தனர். என்ன விந்தை! எட்டவிருந்து அடங்கிய அழுகைக்குரல் ஒன்று அவர்களுடைய காதுக்கு எட்டியது. அதைக் கேட்க விரும்பிய மடந்தையர் மேலும் மௌனமுற்றிருந்தனர். பின்பு தங்களுக்குள் அவர்கள் ஏதோ முணுமுணுத்தனர். பெண் ஒருத்தியின் புலம்பல் கிளம்பிவந்த இடத்தை நோக்கி ஆவலோடு விரைந்தனர். தங்களுக்குக்கேடு ஒன்றும் வாராதிருக்கவேண்டுமென்று காணாமற்போன கண்ணனைக் கருத்தில் வைத்து வழுத்திக்கொண்டே அவர்கள் போயினர். அருகில் சென்றதும் தங்களுடைய தோழியொருத்தி தனியே தவித்துக்கொண்டிருந்ததைக் கண்டனர். அவளுக்கு உற்ற விபத்து யாது என்று வனிதையர் அனைவரும் ஒருங்கே வினவினர்.

மாசு அறியாத மடக்கொடி விம்மிவிம்மி மெய்ம்மறந்து மொழியலானாள்: "நாமனைவரும் ஆடிப்பாடிக் களித்துக் கொண்டிருந்தபொழுது கண்ணன் தனியாக எனக்கே உரியவன் ஆகவேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். நொடிப் பொழுதில் அவன் என்னைப் பிரித்தெடுத்து வனத்துக்குள் அழைத்துச் சென்றான். அதனால் நான் அடைந்த ஆனந்தத்தை என்னென்பேன்! கண்ணன் முன்னிலையில் கானகத்துக்கே புதியதொரு சோபை உண்டானதைக் கண்டேன். சரம் அசரம் ஆகிய அனைத்தும் பேருயிர் பெற்றுப் பொலியலாயின. சிறுவனாகத் தென்படுகிற அப்பெம்மான் ஒருவனே பெருவாழ்வுக்குப் பிறப்பிடம் என்பதையும் உணர்ந்தேன். 'கானகமெங்கும் கால்நலிய நடக்கும் என்னைக் கண்ணா, நீ

சற்று உன்தோள்மீது தூக்கிச் செல்லலாகாதா?' என்று கேட்டேன். அக்கணமே அவனும் எனக்கு வாஹனமானன். அதைக்குறித்து நான் மட்டற்ற மகிழ்வடைந்தேன். எப்படியும் கண்ணன் எனக்கே வசப்பட்டுவிட்டான் என்று எண்ணினேன். அம்மம்மா அப்பொழுதே அவன் மாயமாய் மறைந்து போய்விட்டான்! அவன் தோள்மீது இனிது ஊர்ந்துசென்ற நான் தடாலென்று தரைமீது விழுந்தேன். சுவர்க்கத்திலிருந்து நரகத்தில் வீழ்ந்தவள் போன்று நான் இப்பொழுது வேதனைப்படுகின்றேன். கண்ணன் எங்குற்ருன் என்பது எனக்கு விளங்கவில்லை. நான் பெற்ற இன்பமெல்லாம் துன்பமாக மாறி என்னை வாட்டுகிறது. திரும்பவும் நான் அவனுடைய அருளுக்குப் பாத்திரமாவேனு?" மேலும் பேசமுடியாது அவள் பதைபதைத்தாள், துடிதுடித்தாள், மயங்கித் தரையில் விழுந்து விட்டாள்.

மற்ற கோபியர்களுக்கும் துன்பம் தாங்கமுடியாததாய் ஆகிவிட்டது. அழுதார்கள், புலம்பினுர்கள், நைந்து உருகினுர்கள்: "நந்தகோபாலா, நீ எங்களை நட்டாற்றில் கைவிட்டு விட்டாய்; இந்த அநியாயம் உனக்கு அடாதது" என்று அரற்றினுர்கள்.

எட்ட எங்கேயோ அடவியில்மறைந்திருந்து கண்ணன் பேசியது கோபியர் காதில் விழுந்தது: "அநியாயத்துக்கும் எனக்கும் வெகுதூரம். நான் செய்வதெல்லாம் அருளுக்கு விளக்கமாகும்."

"நீ கல் நெஞ்சக்காரன்; கருணை படைத்தவன் போன்று வெளிக்குக் காட்டிக்கொள்கின்ருய்." இங்ஙனம் ஏமாற்றம் அடைந்த இடைச்சியர் இடித்துக் குற்றம் சாட்டினர்.

"ஆம், நான் ஏககாலத்தில் இறுகிய நெஞ்சமும் இளகிய நெஞ்சமும் படைத்தவன். முற்றிலும் என்னையே

சார்ந்திருப்பவர்க்கு நான் எளியவன், இளகிய நெஞ்சம் படைத்தவன். ஆனால் அஹங்காரம் பிடித்தவர்கள் பிடியில் நான் ஒருபொழுதும் அகப்படேன். நெஞ்சழுத்தக்காரன் போன்று நான் அவர்களுக்கு அன்னியன் ஆய்விடுகிறேன்."

"கண்ணா, எங்களைவிட்டு நீ மறைந்துபோய்விட்டாயே! அப்படியானால் நாங்கள் அஹங்காரம் பிடித்தவர்களா?" என்று கோபியர் கேட்டனர்.

"ஆம், உங்களுடைய அஹங்காரம்தான் என்னை உங்களிடமிருந்து பிரித்துவிட்டது" என்ற விடை வனத்துக்குள்ளிருந்து வந்தது.

"உன்னையன்றி வேறு உற்றார் உறவினர் யாரையும் பொருள்படுத்தாது நாங்கள் உன்னையே சார்ந்திருக்கிறோம். உனக்கு ஆட்பட்டுள்ள நிலையை நீ அஹங்காரம் என்று இயம்பலாமா?" இங்ஙனம் ஆயர் மாதர்கள் ஆட்சேபம் செய்தனர்.

"என் பொருட்டு உற்றார் உறவினர்மீது நீங்கள் கொண்டுள்ள பற்றுதலை ஒழித்ததை நான் பாராட்டுகிறேன். மானம், அவமானம், அச்சம், சுயநலம் ஆகியவற்றைத் துறந்ததையும் பாராட்டுகிறேன். ஆனால் என்னை வசப்படுத்திவிட்டீர்கள் என்ற இறுமாப்பு உங்களுக்கு வந்துவிட்டது. அத்தகைய பான்மை படைத்தவர்களுக்கு நான் புறம்பாய் விடுகிறேன். அண்டங்கள் அனைத்தையும் தாங்கியுள்ள ஆகாசம் எப்படி அண்டங்களுக்கு அப்பாற்பட்டதோ அங்ஙனம் உயிர்கள் அனைத்துக்கும் அந்தர்யாமியாகிய நான் எவ்வுயிர்க்கும் கட்டுப்பட்டவன் அல்லன். உடலில் அடங்கியவன்போன்று தென்படும் நான் உடலில் அடங்கியவன் அல்லன்." இக்கூற்று கோபியர்களுக்குக் கண் விழிப்பை உண்டு பண்ணிற்று.

தஞ்சம் புகுந்தவர்க்கு எளியவன்

இப்பொழுது அவர்கள் வினயத்தோடு விண்ணப்பிப் பாராயினர்: "கண்ணா, நாங்கள் அறிவிலிகள். எங்கள் பிழையைப் பொறுத்தருள். எங்கள் நெஞ்சத்தினின்று அகந்தையை நீ அகற்றி வை. உன் அருளால்தான் நாங்கள் உன்னை அறிந்துகொள்ள முடியும். மேலும் நீ மறைந் திருக்கவேண்டாம். எங்கள் முன் வா. எங்கள் உள்ளத்தை நீ ஒழுங்குபடுத்து. உன்னைப் பிரிந்திருந்து நாங்கள் உயிர் வாழோம்."

கண்ணனுக்குக் கருணை சுரந்தது. கானகத்தினின்று களிப்புடன் வெளிக்கிளம்பினான். கோபியர்களுக்குப் பித்தம் தெளிந்தது; புத்துயிர் வந்தது; பரமனைப் பணிவுடனும் பேரன்புடனும் போற்றினர். ஆற்றங்கரையில் அவனோடு திரும்பவும் ஆனந்தக்களிப்பில் ஆழ்ந்தனர். அந்த விளை யாட்டுக்கு ராசக்கிரீடை என்று பெயர். கடவுளுக்கும் உயிர் களுக்கும் இடையில் உள்ள தொடர்வு எத்தகையது என் பதை விளக்குதற்கே அந்த விளையாட்டு நிகழ்வதாயிற்று. தூயமனம் படைத்தவர்களாய், உலகப்பற்று அனைத்தையும் துறந்தவர்களாய், கண்ணனுக்கென்றே தங்களுடைய உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைத்தவர்களாய், கோபி யர்கள் ஆங்குக் குழுமியிருந்தனர். ஜீவர்களுடைய முக்கால நிலைகளையும் அறியவல்லவர் ஸ்ரீ கிருஷ்ணன். ஆதலால் அவர் பகவான் என்று அழைக்கப்படுகிறார். கோபியர்கள் அடைந்திருந்த மனபரிபாகத்தையும், அவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்து வந்த பிரேமை பக்தியையும் கண்ணன் என்னும் கடவுள் முற்றும் அங்கீகரித்தான். அவனுடைய கருணை இப்பொழுது கோபியர்களுக்கு உரியதாயிற்று. பாங்கிமார் எத்தனைபேர் ஆங்குக் கூடியிருந்தார்களோ

அத்தனை வடிவங்களாகக் கண்ணன் தன்னைப் பெருக்கிக் கொண்டான். பரிபக்குவம் அடைந்துள்ள யோகி ஒருவனுக்குத் தன்னைப் பல வடிவங்களாகப் பிரித்துக்கொள்வது சாத்தியமாகிறது. பிறகு யோகேசுவரனுகிய கண்ணனுக்கு ஏன் இயலாது? அது மட்டுமன்று. அகிலாண்டத்துக்கும் சாட்சியாயிருக்கிற பரமபுருஷன் நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் மனசாட்சியாக வீற்றிருந்து வருகிருர். அத்தகைய பெரிய பொருள் அன்றிரவு நிகழ்ந்த ராசக்கிரீடையில் புறத்திலும் பல வடிவங்களாகத் தம்மை அமைத்துக் கொண்டார். பக்தியின் பெருமைக்கு அது யாண்டும் சிறந்ததொரு எடுத்துக்காட்டு ஆகிறது. கடவுளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்வதற்கு ஜீவாத்மாவுக்கு உயர்குலம் என்னும் உலகத்தவர் பாராட்டுகிற மதிப்புத் தேவையில்லை. கல்வியும் அதற்கு முற்றிலும் அவசியமானதன்று. பெண்பாலர் ஞானத்துக்குத் தகுதியற்றவர் என்பது உலகத்தவர் கொள்கை. அது ஆதரவற்ற கொள்கையென்று இப்பொழுது நிரூபிக்கப்படுகிறது. நெடுநாள் ஆத்மவிசாரம் செய்து ஞானியர் பெற விரும்புகிற பரபோதத்தை இப்பெண்பாலர் இப்பொழுது தூயபக்தியின்மூலம் பெற்றுவிடுகின்றனர்.

உயர்ந்ததொரு மணல்திட்டின்மீது நின்றுகொண்டு கண்ணன் வேணுகானம் பண்ணினன். இனிய அக்குழலோசையானது கோபியர்களை ஆனந்த பரவச நிலையில் ஆழ்த்திவிட்டது. குழலோசைக்கு ஒப்ப கண்ணனைச் சுற்றி ஆனந்தத் தாண்டவம்புரிய அவர்கள் முனைந்தனர். ஒவ்வொருத்திக்கும் தோழனுக ஒவ்வொரு கண்ணன் தனது யோக மாயையினுல் தோன்றி வந்திருந்தான். கை கோத்து வட்டமிட்டபொழுது காரிகை ஒவ்வொருத்திக்கும் வலப் பக்கத்

திலும் இடப் பக்கத்திலும் கண்ணனே கைகொடுத்திருந்தது புலனயிற்று. கண்கொண்டு அவர்கள் கண்டது கண்ணனுடைய வடிவம். மூக்கால் அவர்கள் முகர்ந்தது கண்ணனுடைய மேனியினின்று கிளம்பி வந்த நறுமணமாகும். நாவால் அவர்கள் சுவைத்தது கண்ணனுடைய திருநாமம். அவர்களுடைய மனதில் ஊற்றெடுத்து வந்தது கண்ணனைப் பற்றிய பேருணர்வு. இங்ஙனம் ஐம்பொறிகளும் அந்தக் கரணமாகிய மனதும் கண்ணன் என்னும் கடவுள் நுகர்ச்சியில் குவிந்துவிட்டன. அதனால் யோகானுபூதியின் உயர்வு விளையாட்டாக அவர்களுக்கு வாய்த்துவிட்டது.

சாதாரண யோகியர்களுக்குக் கிட்டாத உயர்ந்ததொரு யோகசித்தி கோபியர்களுக்குக் கிட்டியது. தூய பக்தியினின்று விளைந்தது அந்த யோகசித்தி. உலக மக்களுக்கு ஐம்பொறிகள் உலக நுகர்ச்சிக்கே பயன்படுகின்றன. பொறிவாயில் ஐந்தின் வழியாகப் புறவுலக வாழ்க்கையில் ஈடுபடுதற்குப் பிரவிருத்தி என்று பெயர். ஐம்பொறிகளை அடக்கியாண்டு அகத்தில் மனதில் நிறுத்திப் பழகுதற்கு நிவிருத்தி என்று பெயர். யோகிகளும் ஞானிகளும் முனிவர்களும் பழகுவது நிவிருத்தி. உலகப்பற்றுடைய ஏனைய அனைவரும் பழகுவது பிரவிருத்தி. பிருந்தாவனத்துக்கோபிகளோ ஐம்பொறிகளை அடக்கிப் பழகவில்லை. அவைகளை உலகப்பற்று என்னும் சிறு நெறியிலும் செலுத்தவில்லை. கண்ணனுக்குக் கைங்கரியம் செய்தல் என்னும் செந்நெறியில் அவைகள் செலுத்தப்பட்டன. கண்கொண்டு அவர்கள் கண்டதெல்லாம் கண்ணனைப் பற்றிய காட்சிகளாம். காது கொடுத்து அவர்கள் கேட்டதெல்லாம் கண்ணனது குழலோசையும் குமுதச் செவ்வாய் மொழியுமாம். கைகோர்த்து அவர்கள் களிப்புற்று விளையாடியதெல்லாம் கண்ணனிடத்துத்

தங்களைக் கொடுத்துவிடுதல் பொருட்டேயாம். நாவால் அவர்கள் நவின்றதெல்லாம் அந்த நம்பியின் நயங்களைப் பற்றிய நல்லுரைகளாம். இப்பொழுது நடுநிசியில், நிலா வெளிச்சத்தில், ஆற்றங்கரையில் அவனோடு ராசலீலையில் உவகைகொண்டு கலந்தவிடத்துக் கோபியர்களுடைய உடல், உள்ளம், உயிர் அனைத்தும் அவனுக்கு உரியவைகள் ஆய்விட்டன. ஏன் இதை சம்போகம் என்று செப்ப லாகாது என்று ஒருவர் கேட்கலாம். அதற்கு மறுமொழி யாக இந்நிகழ்ச்சியை சம்யோகம் என்று சாற்றுவதேசாலும். போகத்தில் உயிர்கள் ஒன்றித்துத் தேய்கின்றன, மயங்கு கின்றன, மாய்கின்றன. யோகத்திலோ ஜீவாத்மாக்கள் பரமாத்மாவில் பரிபூரணர்களாகின்றார்கள், பேரின்பமெய்து கிறார்கள், பரமாத்ம சொரூபமாய் விடுகிறார்கள். அழிவைத் தருவது போகம்; ஆக்கத்தை நல்குவது யோகம். நலம் தருவது போன்று மையல் ஊட்டி ஜீவனைக் கெடுப்பது போகம்; மற்று ஜீவனை யாண்டும் எடுப்பது யோகம். கண்ணனோடு விளையாடிக்கொண்டு இருக்க இருக்க ஒவ் வொரு கோபியும் தனது ஜீவபோதத்தைக் கடந்து விட் டாள். தன்னைக் கிருஷ்ணனாக உணர்ந்தாள். பேதங்கள் எல்லாம் போய்விட்டன. கிருஷ்ணானந்தம்! கிருஷ்ணானந்தம்! இப்பேருணர்வு ஒன்றே எஞ்சி நின்றது. போக்கு வரவற்ற பெருநிலை இது. ஞானியர் நிர்விகற்ப சமாதியில் பெறுகிற நிலை இது. கோபியர் இதை விளையாட்டாகப் பெற்று விட்டனர். கடவுளோடு விளையாடியதன் விளைவு இது.

இறைவனைச் சார்வதால் உலகுக்கு நஷ்டமில்லை

நெடுநேரத்துக்குப் பிறகு கண்ணனுடைய அருளால் கோபியர்களுடைய உள்ளம் உலக நிலைக்குக் கீழே இறங்கி

வந்தது. ராசலீலையை அவர்கள் ஒரு முடிவுக்குக்கொண்டு வந்தார்கள். இதற்குள் சந்திரனும் மேற்குத் திசையில் நெடுந்தூரம் போய்விட்டான். ஆற்றங்கரையினின்று அவ ரவர் வீடு போய்ச் சேர ஆயர் மடந்தையர் மனங்கொண் டனர். கண்ணனும் அதற்கு உடந்தையானான். கும்பலாக அவர்கள் ஊருக்குள் வந்துசேர்ந்தனர். வீட்டுக்குள் நுழைந்து பார்த்த மாது ஒவ்வொருத்தியும் தனது பிரிவால் ஆங்கு எவ்விதமான இடுக்கணும் நேர்ந்துவிடவில்லை என் பதை உணரலானாள். தங்களைவிட்டு மனைவிமார்கள் பல வந்தமாகப் பிரிந்து ஓடிவிட்டார்கள் என்று கணவன்மார்கள் கருதவில்லை. குழந்தைகளுக்குப் பாலூட்டிக்கொண்டிருந்த வர்கள் அச்செயலை அரைகுறையாக வைத்துவிட்டு வெளி யேகிவிட்டார்கள் என்று எவரும் மனம் நொந்துகொள்ள வில்லை. ஏனென்றால் வீடுகள்தோறும்நிகழவேண்டியகிருத்தி யங்களைச் செய்ய கண்ணன் அருளால் வேறு மாந்தர்கள்அப் போதைக்கப்போது வந்துவிட்டார்கள். அப்படி வந்த வனி தைகளை வேற்றூர் என்று கண்டுபிடிக்க வீட்டில் இருந்த யாருக்கும் இயலவில்லை. இல்லத்து அலுவல்கள் அனைத்தும் இன்னல் இன்றி நிறைவேறிவிட்டன. கோபியர்கள் கிரகங் களுக்குள் வந்ததும் அவர்களுடைய பிரதிநிதிகள் மாயமாய் மறைந்து போய்விட்டனர். கண்ணனுடைய யோக மாயை யின் வலிவு அது.

அத்தகைய அதிசயச் செயல் அன்று ஒருநாள் அபூர்வ மாக நிகழ்ந்தது என்று எண்ணலாகாது. அது ஈசன் செயல். அன்று ஒருநாள் அபரிமிதமாக நேர்ந்தது. மற்றுச் சிறிய அளவில் அது யாண்டும் நிகழ்ந்து வருகிறது. இறைவனு டைய அருள் என்னும் குழல்ஓசை ஓயாது ஒலித்துக்கொண் டிருக்கிறது. அது ஓவாத சத்தத்து ஒலி. பாக்கியவான்

களாகிய யாரோ சிலர் மனபரிபாகம் அடைந்துவரும் வேளை களில் அவ்வோசையைக் கேட்கின்றனர். அது இறைவ னுடைய அழைப்பு. அதைக் கேட்டதும் உலகப்பற்றுக்கள் அனைத்தையும் அவர்கள் அப்படியப்படியே ஒதுக்கி வைத்து விடுகின்றனர். இறை பணியாற்றுதற்கும் இறைவனேடு ஒட்டி உறவாடுதற்கும் அவர்கள் உலக வாழ்வைத் துறந்து விடுகின்றனர். பரமனேடு பேரிணக்கம்கொள்ள அவர்கள் புதிய சூழ்நிலைக்குப் போய்விடுகின்றனர். துறவு என்பது இதுவே. பிரவிருத்தியை விட்டொழித்து நிவிருத்தியில் நாட்டம் கொள்ளுதல் என்பதும் இதுவே. இறைவனை நாடி அவர்கள் அப்படி வெளியேகுவதால் வீட்டுக் காரியங் கள் நின்றுவிடுவதில்லை. அப்பணிவிடைகள் ஏதேனும் ஒரு விதத்தில் பூர்த்தியாய்விடுகின்றன. தம்மை நாடி வருபவர் களை முன்னிட்டு அப்பொறுப்பைப் பரமன் தாமே எடுத்துக் கொள்கின்றார். காலமெல்லாம் இந்த அதிசயச்செயல் நிகழ்ந்து வருகிறது. இந்நிகழ்ச்சிக்குப் பேருருவம் கொடுத்து விளக்கியது ராசக்கிரீடை என்னும் கண்ணனுடைய விளை யாட்டாகும்.

கண்ணனிடத்துக் கோபியர்கள் அன்புகொண்டிருந்தது போன்று கோபாலர்களும் அன்புகொண்டிருந்தனர். அன்று இரவு அவன் ஊதிய குழல் ஓசையை கோபியர் காது கொடுத்துக் கேட்டது போன்று கோபாலர்களும் கேட் டிருப்பார்கள். அப்படியிருந்தும் ராசலீலையில் கலந்து கொள்ள பெண்பாலர்மட்டும் புறப்பட்டுப் போயினர். ஆண் பாலர் யாரும் போகவில்லை. ஆடவர் மகளிர் ஆகிய இரு பாலாரும் அந்தப்பக்திப் பிரவாகத்தில் கலந்திருக்கவேண்டும். ஆனந்த பரவசம் என்பது முதியவர்களுக்கும் இளையவர் களுக்கும் பொதுவானது. ஆதலால் பிருந்தாவன வாசிகள்

அனைவருமே அதில் கலந்து கொள்ளுதல் பொருத்தமானது. ஆயினும் அதற்கு மாருக இளம் மங்கையர் சிலர் மட்டும் அவ்விளையாட்டில் கலந்து கொண்டதற்குக் காரணம் யாது? இத்தகைய கேள்வி எழுவது இயல்பு. இதற்கு அடிப்படையாயுள்ள தத்துவத்தை அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.

உலகு அனைத்துக்கும் பதியாயிருப்பவர் பரம்பொருள் ஒருவரே. பல நாயகர்கள் பிரபஞ்சத்துக்குக் கிடையாது. அந்த ஒரு தலைவனுக்கு உட்பட்டவர்கள் உயிர்கள் அனைவரும். அறிந்தோ அறியாமலோ தங்கள் தலைவனை நாடுபவர்களாய் உயிர்கள் எல்லாம் இயங்கி வருகின்றன. தலைவனுக்கும் தங்களுக்கும் இடையில் உள்ள தொடர்வை நிலைநாட்டிவிட்டால் வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறி விடுகிறது. இந்த மேலாம் நிலையை அடைதற்கு ஜீவர்கள் அனைவரும் தளராத முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். பிறவிதோறும் அவர்கள் பிரயத்தனப்படுவது இந்த ஒரு லட்சியத்துக்காகவே. காந்த ஊசி வடதிசையையே நோக்கியிருப்பது போன்று ஜீவர்கள் தங்கள் பதியையே நாடி நிற்கின்றனர். ஆதலால் அவர்கள் அனைவரும் பதிவிரதைகள் என்று பெண்பாலர்களாகவும் கருதப்படுகிருர்கள். உண்மையை உள்ளபடி உணருங்கால் கடவுள் ஒருவரே ஆண்பால். உயிர்கள் எல்லாரும் அவருக்குரிய பெண்பாலர்கள் ஆய்விடுகின்றனர். இக்கோட்பாடு வேதாந்தத்துக்கு மட்டும் உரியதன்று. பல மதங்களுக்கு இது பொதுவானது. கிறிஸ்துவ மதத்தில் கடவுள் (bridegroom) மணாளன் என்றும், உயிர்கள் (brides) மணப்பெண்கள் என்றும் பகரப்பெறுகிருர்கள். கடவுள் பக்தியில் உச்சநிலைக்கு வருகிற ஆண்மக்கள் பெண் இயல்பு படைத்தவர்கள் ஆய்விடுகிருர்கள். மாணிக்க

வாசகர், கௌராங்கதேவர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியவர்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள் ஆவார்கள். இப்பேருண்மையை மக்கள் யாண்டும் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவசியமாகிறது. கண்ணன் அதற்காக வென்றே தன்னை நாடிவந்த உயிர்களை எல்லாம் உடல் அமைப்பிலும் பெண்பாலர்களாக வைத்து விளக்கிக் காட்டியுள்ளான்.

கடலுக்குப் பக்கத்தில் வந்துவிடுகிற நதிக்குப் பொங்குதல் வடிதல் என்னும் விளையாட்டு அதிகரிக்கிறது. நதியே கிட்டத்தட்ட கடல் போன்று ஆய்விடுகிறது. அங்ஙனம் பக்திப் பெருக்கை முன்னிட்டுக் கடவுளுக்குப் பக்கத்தில் வந்துவிடும் ஜீவர்களுக்குப் புதிய இளமை பிறக்கிறது; ஆடுதல், பாடுதல், களிகூர்தல் அளவுகடந்து போய்விடுகின்றன. அச்சம், நாணம், வெகுளி முதலிய ஜீவ இயல்புகளுக்கு ஆங்கு இடமில்லை. கண்ணனிடம் பறந்தோடி வந்த இளம் கோபியர்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகின்றனர். பிருந்தாவனத்தில் நிகழ்ந்த ராசலீலையானது பராபக்தியின் முடிந்த நிலைக்குத் தெளிந்ததொரு விளக்கமாகிறது. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினிடம் எங்ஙனம் ஒன்றித்து விடுகிறார்கள் என்பதையும் அந்த விளையாட்டு விளக்கிக் காட்டுகிறது.

8. மதுராபுரிக்கு அழைப்பு

கொல்லுதற்குக் கடைசி உபாயம்

கண்ணனுடைய திருவிளையாடல்களைப் பற்றிய செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கம்சனுடைய காதுக்கு எட்டியது. அதற்கேற்ற ஒற்றர்களை அவன் நியமித்து வைத்திருந்தான். அவர்களும் தாங்கள் கண்டறிந்தவைகளையெல்லாம்

கம்சனுக்குச் சொல்லியனுப்பி வந்தார்கள். அசுரப் பாங்குடையவர்கள் பலர் பிருந்தாவனத்துக்கு அனுப்பப்பட்டனர். ஏதேனும் ஒருவிதத்தில் கிருஷ்ணனைக் கொன்று விடுவது அவர்கள் கொண்டிருந்த கொள்கை. அதற்கேற்ற சித்திகளும் அசாதாரணமான சக்தியும் அவர்களிடத்திருந்தது. அதனால் என்ன? எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் பயன்படாது போய்விட்டன; கையாண்ட சூழ்ச்சிகளெல்லாம் ஒன்றுக்கும் உதவாது போய் விட்டன. கம்சனுடைய கவலை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

கடைசியாகப் புதியதோர் உபாயத்தைப் பிரயோகிக்க அவன் முனைந்தான். மக்களை மகிழ்வித்தல் பொருட்டு விழாவொன்று வைக்கப்பட்டது. மதுராபுரி வாசிகளுக்கு மட்டும் அது உரியதன்று. வெளியூர்க்காரர்களுக்கும் அழைப்பு சென்றது. கோகுலவாசிகள், பிருந்தாவன வாசிகள் ஆகிய எல்லார்க்கும் அதில் இடமுண்டு. நந்தகோபனையும் அவனுடைய குடும்பத்தார் அனைவரையும் மரியாதையோடு அழைத்துவர அக்ரூரன் என்பவனைக் கம்சன் அனுப்பி வைத்தான். பொதுப்பட கம்சனிடம் காரியஸ்தர்களாயும், சிப்பந்திகளாயும், ஏவலாளர்களாயும் இருந்தவர்களுக்குக் கம்சனுடைய மனப்பான்மையும் வாய்த்திருந்தது. ஈவு, இரக்கம் என்பதை அவர்கள் அறியார்கள். கொடூரத் தன்மையும் கல்நெஞ்சமும் அவர்களுக்கு இயல்பாய் அமைந்தவைகளாகும். ஆனால் இவ்விதிக்கு விலக்காயிருந்தவன் அக்ரூரன். நேர்மையும் ஒழுக்கமும் கடவுள் பக்தியில் நிறைந்தவன் அவன். கம்சன் வேண்டுமென்றே அவனை அழைப்பாளனாக நந்தகோபன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அதனால் சந்தேகத்துக்கு இடமில்லாது போய்விடும் என்பது அவன் கருத்து

அரசனுடைய ஆணையை மேற்கொண்டு அக்ரூரனும் ஆயர்பாடியை நோக்கிச் சென்றான். ஆனால் அவன் இரு தலைக்கொள்ளி எறும்புபோல் வேதனைப்பட்டான். கூற்று வனைக் காட்டிலும் கொடியவன் கம்சன். அவன் ஆணையை மீறினால் உயிர்ச்சேதம் உண்டாகும். அப்படியல்லாது அவனுடைய உத்தரவை நிறைவேற்றினால் நந்தகோபனுக்குக் கேடு சூழ்வதாகும். வேந்தனது வெவ்விய வினைத்திட்டத்தை வெளியிட்டால் அது ராஜத் துரோகமாகும். அதன் விளைவு மரணதண்டனை. உண்மையை ஒளித்து வைத்தால் அது நல்லார்க்குச் செய்யும் நயவஞ்சகமாகும். அக்ரூரனுடைய மனசாட்சி அதற்கு இடந்தரவில்லை. தன்னையே நொந்து கொண்டு அவன் நந்தகோபனுடைய இருப்பிடத்தை நோக்கி நண்ணினான். வழி நெடுக உயர்ந்ததோர் சிந்தனையில் அவன் மூழ்கியிருந்தான். அதாவது இந்த "நந்தகோபாலன் சாமானியமான சிறுவன் அல்லன். தெய்வீகப்பெற்றிகள் யாவும் அவனிடத்துப் பொலிகின்றன. சாதாரணமான மனிதர்களால் செய்ய முடியாத செயல்களையெல்லாம் அவன் விளையாட்டுப் போன்று முடித்து விடுகிறான். கம்சன் ஏவிய அரக்கர்களில் ஒருவனாயினும் அச்சிறுவனை ஒறுக்க வல்ல வனாகவில்லை. அதற்கு மாறாக அப்புல்லியர்குழாம் முழுதும் வேரறுக்கப்பட்டது. ஒருவேளை மும்மூர்த்திகளுக்கும் மேலான முதல்வனே இவ்வடிவம் தாங்கி வந்துள்ளானோ! தேவகியின் எட்டாவது வாய்ப்பு கம்சனைக் களைந்தெறியப் போகிறது என்ற அசரீரி அன்று ஒருகால் எழலாயிற்று. ஆனால் அது பெண்பாலாய்ப் போய்விட்டது. கம்சனால் வதையுண்ணுதற்கு மாறாக அது அவனைப் பகடிசெய்து கொண்டு அந்தர்தானமாய்விட்டது. கம்சனுடைய எதிரி நந்தகோபன் வீட்டில் வளர்ந்துவருகிறான் என்றல்லவோ அப்

பெண்ணுருவம் பகர்ந்துவிட்டுச் சென்றது. ஒருவேளை இந்த கோபாலகிருஷ்ணன்தான் கம்சனுக்குக் காலனாய் வந்துள்ளானே! என் மனத்தகத்து மிளிரும் போராட்டத்தை இவன் நன்கு அறிந்துகொள்வான். என் கருத்தை நான் வாய்விட்டுப் பேசினால் குற்றவாளியாவேன். ஆதலால் என் எண்ணத்தை மனதுக்குள்ளேயே வைத்துக்கொள்கிறேன். என் உடல் கம்சன் வசத்தில் இருக்கிறது. ஆனால் என் உள்ளமோ நந்தகோபாலனுக்கே உரியது. அவன்தான் என்னைக் காத்தருளவேண்டும்.'' இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டு அக்ரூரன் ஆயர்பாடியை வந்தடைந்தான்.

கண்ணனையும் அவனுடைய தமையன் பலராமனையும் பார்த்தவுடன் அக்ரூரன் ஆனந்த பரவசமடைந்தான். தன் ரதத்தினின்று அவன் குதித்துக் கீழே இறங்கினான். அடியற்ற மரம்போன்று கண்ணன் காலில் வீழ்ந்து வணங்கினான். பிறகு பலராமனுடைய பாதங்களையும் பிடித்துக்கொண்டான். சகோதரர் இவருடைய பாததூளி படிந்த பூமியிலே படுத்துப் புரண்டான். அவனுடைய உள்ளன்பை அறிந்துகொண்ட பலராமன் அவனைப் பூமியினின்று வாரியெடுத்து நிற்கவைத்தான். உடன் பிறந்தார் இருவரும் அவனைக் கட்டித்தழுவிக்கொண்டனர். தான் ஜன்மசாபல்யம் அடைந்துவிட்டதாக அக்ரூரன் உணர்ந்தான். ஏனென்றால் பலராமனும் கிருஷ்ணனும் பரமாத்மாவின் அவதாரங்கள் என்பது அவனுடைய துணிபு. ஆனால் சகோதரர்கள் இருவரும் சாதாரணமான மானுடர் போன்று நடந்துகொண்டார்கள். அன்பு பூண்டவனாய் வந்த அதிதியை ஆதரவுடன் வரவேற்பது தங்கள் கடமையென்று இளைஞர் இருவரும் உணர்ந்தார்கள். அக்ரூரனுக்குப் பாதம் கழுவுதற்கு நீர் கொடுத்தார்கள். பின்பு அவனை ஒரு ஆசனத்தின் மீது

அமரப்பண்ணினார்கள். களைப்புற்று வந்திருந்த விருந்தின னுக்கு மூத்தவன் தானே விசிறி வீசினான். இளையவன் சுவை நிறைந்த சிற்றுண்டிவகைகளைக் கொண்டுவந்து வழங்கினான். நறுமணம் நிறைந்த பூமாலையொன்றை அவனுக்குச் சூட்டி னான். அக்ரூரனும் பெருமகிழ்வுற்றவனாய் அந்த உபசரிப்பு களையெல்லாம் ஏற்றுக்கொண்டான்.

இதற்குள்ளாகத் தந்தை நந்தகோபனும் அங்கு வந்து சேர்ந்தான். அக்ரூரனுக்கு அவன் நல்வரவு கூறினான். அவன் ஆயர்பாடியை நோக்கி வந்ததற்குச் சிறப்பான கார ணம் ஏதாவது உண்டா என்று விசாரித்தான். வந்தவனும் அதையெல்லாம் விரிவாக எடுத்து விளக்கினான். கம்சன் ஒரு பெரிய விழா வைக்கப்போகிறான் என்றும், அதற்கு முக்கியமான பிரமுகர்களெல்லாம் வரவழைக்கப்படுகிறார் களென்றும், அதில் நந்தகோபனுடைய குடும்பத்தார் அனை வரும் கலந்துகொள்ள வேண்டுமென்றும், பலராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் விசேஷமான வரவழைப்பு அளிக்கப்படு மென்றும், மதுராபுரியில் நிகழப்போம் மற்போரைப் பார்த்து அனைவரும் களிப்புறவேண்டுமென்றும் அவன் சொல்லி முடித்தான்.

இதற்கிடையில் கிருஷ்ணனும் பலராமனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு புன்சிரிப்பு சிரித்தார்கள். அந்த விழாவின் அடிப்படையான எண்ணம் யாது என்பது அவர் களுக்கு விளங்கிவிட்டது. அவர்களும் அதற்காகவென்று தான் அமைதியாகக் காத்திருந்தார்கள். தாங்கள் நிறை வேற்ற வேண்டிய முக்கியமான செயல் ஒன்றுக்குக் காலம் கிட்டிவிட்டது. இதையெண்ணி அவர்கள் ஒருவிதத்தில் மகிழ்வடைந்தார்கள். ஆனால் அந்த மகிழ்வு திடீரென்று சோகரசமாக மாறியது. அதற்கும் தக்க காரணம் ஒன்று

இருந்தது. மதுராபுரி வாசிகளின் யோக க்ஷேமங்களைப்பற்றி நந்தகோபன் வந்திருந்த அக்ரூரனிடம் வினவினான். அவனும் விஷயங்களை விரிவாக எடுத்து விளக்கி வந்தான். இயல்பாகவே அப்பேச்சு வசுதேவனையும் தேவகியையும் பற்றியதாக வடிவெடுத்தது. அவர்கள் இருவரும் என்னென்ன துன்பங்களுக்கெல்லாம் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை அக்ரூரன் தெற்றென விளக்கினான். அதைக் கேட்டதும் கண்ணனும் பலராமனும் மனம் வாடினார்கள். சிறப்பாக கிருஷ்ணனுடைய பிறப்பை முன்னிட்டே அவனுடைய பெற்றோர்களுக்குத் துன்பத்துக்குமேல் துன்பம் உண்டாயிற்று. அவர்கள் சிறையில் அடைபட்டுக் கிடந்ததற்கும் அவனே மூலகாரணமாவான். அவனுக்கு முன்பிறந்தவர்களுள் ஆறு பேர் அடித்துக் கொல்லப்பட்டதற்கும் அவனது பிறப்பே முகாமையாயிற்று. அதையெல்லாம் எண்ணி அவன் தன் பெற்றோர்க்காக வருந்தினான். தாய் தந்தையர்க்கு விரைவில் விமோசனம் தேடித்தரவும் அவன் தீர்மானம் செய்தான்.

அடுத்த நாள் காலையிலேயே அவர்கள் மதுராபுரிக்குப் புறப்படத் தீர்மானித்தார்கள். பலராமனும் கிருஷ்ணனும் அக்ரூரனுடைய ரதத்தில் ஊர்ந்து அவனுடன் செல்வார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு கண்ணன் தந்தை நந்தகோபனும் மற்றவர்களும் புறப்பட்டு வருவார்கள். அங்ஙனம் தீர்மானிக்கப்பட்டவுடன் கம்சனுக்குக் காணிக்கையாகப் படைக்கப் பல பொருள்களைச் சேகரிக்க கோகுலக் கோமான் முற்பட்டான். இரவெல்லாம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆய்க் கொண்டிருந்தன.

கண்ணன் பிருந்தாவனத்தினின்று புறப்பட்டு மதுராபுரிக்குப் போகப் போகிறான் என்ற செய்தி கோபியர்களுக்கிடையில் பரவியது. சிறிது நேரத்துக்குள் ஊரார் அனை

வர்க்கும் அது எட்டிவிட்டது. தங்கள் உயிருக்கு உயிராய் இருந்தவனை விட்டுப்பிரிய யாருக்கும் மனம் வரவில்லை. கவலைக் கடலில் கோபியர்கள் மூழ்கினார்கள். வாழ்க்கையே இருள் சூழ்ந்ததாக அவர்களுக்கு மாறிவிட்டது. புறப்படும் தறுவாயில் எங்குத் திரும்பிப் பார்த்தாலும் வியாகுலத்தின் காட்சியே தென்பட்டது. கண்ணீர் சிந்தியவளாக அசை வற்று நின்றாள் ஒருத்தி; கண்ணா என்று ஒருத்தி வாய்திறந் தாள்; மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை. தலை குனிந்தவளாக ஒருத்தி தியானத்தில் மூழ்கிவிட்டாள். விம்மி விம்மி மெய்மறந்து நின்றாள் மற்றொருத்தி. இடைச் சிறு வர்கள் ஏங்கி நின்றார்கள். முதியோர்களுக்குப் பேச நா எழவில்லை. மூர்ச்சை போன நிலைக்கு ஊரார் அனைவரும் வந்துவிட்டனர். புறப்படும் பொழுது பிரிவுச் சொற்கள் சில வற்றைக் கண்ணன் கூறலாயினான்: "வாழ்ந்திருப்பவர் களுக்கு எங்கெங்கிருந்தோ வந்து கூடுதல் என்பது இருப் பது போன்று, விட்டுப் பிரிதலும் உண்டு. மகிழ்வுடன் பிரிந்து போகத் தெரிந்து கொண்டவர்களே வாழத்தெரிந்து கொண்டவர்கள் ஆகின்றனர். உடல் அமைப்பில் நான் உங்களை விட்டுப் பிரிகிறேன். ஆனால் என்னை உள்குகின்ற வர்கள் உள்ளத்தினின்று நான் இமைப்பொழுதும் நீங்கேன். இவ்வுண்மையை அறிந்து, அதில் நிலைபெற்று இன்புற்றி ருங்கள்." இங்ஙனம் கண்ணன் சொல்லி முடித்ததும் தேர் புறப்பட்டது. அது காட்சிக்குத் தெரிந்துகொண்டிருந்த வரையில் ஊரார் அதை உற்று நோக்கிய வண்ணமாய் நின்றனர். கண்ணனுடைய பிருந்தாவன வாசம் அத்துடன் முடிவு பெற்றது.

கண்ணாடியில் பல பிம்பங்கள் தெரிந்துகொண்டிருக் கின்றன. ஆனால் இடம் மாறிப்போனதும் அந்த பிம்பங்

களின் அடையாளம் எதையும் கண்ணாடியில் காணமுடியாது. மேலோரது பண்பட்ட உள்ளம் அத்தகையது. கண்ணன் யாண்டும் கண்ணாடி போன்று இருந்தான். யமுனை நதிக் கரைக்கு ரதம் வந்து சேர்ந்தது. பலராமனும் கிருஷ்ணனும் அதில் இறங்கி நீராடினார்கள். அத்துடன் அவர்களுடைய விளையாட்டுப் பருவம் முடிந்தது. வாழ்க்கையே ஒரு பெரிய விளையாட்டு என்பதைப் புகட்டிய பாடம் அத்துடன் முடிவுக்கு வந்தது. செய்தற்கரிய செயல்களைச் செய்து சாதிப்பவர்கள் வீரர், என்னும் பாடத்தைப் புகட்டும் பருவம் அடுத்தபடியாக முன்வந்து நின்றது. அதற்கு ஆயத்த மானவர்களாய் சகோதரர் இருவரும் மதுராபுரிக்குள் புகுந்தனர்.

9. பெற்றோரைச் சிறையிட்ட செல்வன்

இடத்துக்கு ஏற்ற கோலம்

காண்பதற்கரிய காட்சியளித்துக்கொண்டிருந்தது மதுரா புரி. கூடகோபுர மாடமாளிகைகள் விதவிதமாக விளங்கின. அவைகளின் வாயில்கள் அகன்றும் உயர்ந்தும் இருந்தன. கதவுகளில் மிளிர்ந்த தங்கம், வெள்ளி, தாமிரம், ஸ்படிகம் ஆகியவைகள் அந்நகரம் செல்வத்தில் தலைசிறந்தது என்ப தற்கு எடுத்துக்காட்டுகளாயின. ஜன்னல்களில் ஒளிர்ந்த ரத் தினங்களுக்கு அளவில்லை. வீதிகளெல்லாம் அகன்றும் நேரா யும் அமைக்கப்பெற்றிருந்தன. இருமருங்கிலும் மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. பூங்கா, இடத்துக்கு ஒருவிதக் காட்சி கொடுத்தது. ஆலயங்கள் அற்புதமாய் அமைக்கப்பெற் றிருந்தன. மக்கள் விதவிதமான தொழில்களில் ஈடுபட் டிருந்தனர். மயில்கள் தோகையை விரித்து ஆடிக்கொண் டிருந்தன. புறாக்கள் ஆங்காங்குக் கூவிக் குலாவிக்கொண்

டிருந்தன. நிகழ்தற்கிருந்த விழாவிற்கு அறிகுறியாகத் தோரணங்கள் பல இடங்களில் கட்டப்பட்டிருந்தன.

பலராமனும் கிருஷ்ணனும் ஊர்ந்து வந்த ரதம் இத் தகைய பட்டணத்துக்குள் பிரவேசித்தது. அந்த இளைஞர் களின் பொலிவோ பார்த்தவர்களின் உள்ளத்தைக்கொள்ளை கொண்டு போயிற்று. சிறையில் கிடந்த தையல் தேவகியின் மைந்தர்கள் இவர்கள் தாம் என்ற வதந்தி வீதியெங்கும் விரைவில் பரவிற்று. வீட்டுக்குள் இருந்தவர்களெல்லாம் வெளியே ஓடி வந்தார்கள். பொதுமக்கள் எல்லோரும் தங்களைக் காண்பதற்கு ஆவலோடு இருந்தார்கள் என்பதை உடன்பிறந்தார் இருவரும் நொடிப்பொழுதில் அறிந்து கொண்டார்கள். கம்சனுடைய கொடூரச் செயலுக்கு உடந் தையாய் இருந்தவர்கள் மிகச் சிலர் என்பதும் அவர்களுக்கு விளங்கிவிட்டது. ஆயர்பாடியில் அவர்கள் அணிந்திருந்தது இடையர்களுக்கேற்ற எளிய உடை. ஈண்டு இனி நிகழப் போம் விழாவிற்கேற்ற மேலாம் உடை தரித்துத் தங்களை அலங்கரிக்க அவர்கள் எண்ணங்கொண்டனர். உடனே அதற்கேற்ற உபாயமும் கையாளப்பட்டது. கம்சனுக்கு ராஜரீதியில் உடை ஆயத்தப்படுத்தியவனிடம் அவர்கள் சென்றார்கள். தங்களுக்கு ஒத்த உயர்ந்த உடைகளைத் தரும்படி ஆணை பிறந்தது. ஆனால் அங்கி ஆயத்தப்படுத் தியவனுக்கு அடங்காத கோபம் மூண்டுவிட்டது. அரச னுக்கு உரிய ஆடைகளை ஆடுமாடு மேய்க்கும் இடைப் பையன்கள் வேண்டுவதா, என்பது அவன் கொண்ட சீற்றம். இவர்களை அரசாங்க அதிகாரிகளிடம் கொடுத்து மரண தண்டனைக்கு ஆளாக்குவது உசிதம் என்று அவன் கருதி னான். ஆனால் அதே வேளையில் அந்த அங்கிக்காரனைக் கிருஷ்ணன் கூற்றுவனுக்கு இரையாக்கிவிட்டான். பிறகு

இருவரும் தங்களுக்கு ஒத்த உடைகளை எடுத்து அணிந்து கொண்டனர். நீலவஸ்திரத்தைப் பலராமன் கட்டிக்கொண்டான். கிருஷ்ணன் உடுத்தது மஞ்சள் பட்டு. இப்பொழுது அவர்கள் புதிய பொலிவுடன் திகழ்ந்தனர்.

இதற்குள் இளங்கூனி ஒருத்தி மலர்மாலைகள் சில தொடுத்து கம்சனுக்காக அவைகளை எடுத்துச் சென்றாள். நறுமணம் தீட்டிய சந்தனமும் அவள் வசத்தில் இருந்தது. பலராமனையும் கிருஷ்ணனையும் பார்த்தவுடனே அவள் சிறந்த பூமாலைகளை அவர்களுக்குச் சூட்டினாள். தகுந்த பாங்கில் சந்தனத்தையும் அவர்கள் மீது பூசினாள். அதன் பிறகு சகோதரர் இருவரும் விண்ணுலகினின்று மண்ணுலகுக்கு இறங்கி வந்துள்ள தேவர்கள் போன்று தென்பட்டார்கள். இயற்கையழகும் செயற்கையழகும் ஒன்றுகூடி அவர்களை அங்ஙனம் செய்துவிட்டன. நகரவாசிகள் அனைவரும் அவர்களைத் தரிசித்து ஆனந்தபரவசமடைந்திருந்தனர். பூமாலைகள் கொடுத்துதவிய கூனியைக் கிருஷ்ணன் நிமிர்ந்து நிற்கப்பண்ணினான். உடனே அவள் அவயவங்கள் திருத்தியமைக்கப்பெற்ற கட்டழகியாக மாறி விட்டாள். குள்ளியாயிருந்தவள் போதிய உயரம் படைக்கப்பெற்றவளாகவும் காட்சி கொடுத்தாள். மற்று, கொடூரனாகிய கம்சனுக்கென்றே உயிர்வாழ்ந்திருந்த அங்கிக்காரன் அழிக்கப்பட்டான். நிர்ப்பந்தத்தால் கம்சனுக்குப் பூமாலை தொடுத்துக்கொடுத்து வந்த காரிகை கண்ணனிடத்துப்பக்தி பூண்டு ஒழுகி வந்தாள். ஆதலால் அவள் உடல் புதுப்பிக்கப்பெற்றுக் காப்பாற்றப்பட்டாள்.

கொண்டாட்டமும் திண்டாட்டமும்

ஒரு விழாவின் மூலம் விரோதியை ஒழித்துவிடக் கம்சன் திட்டம் போட்டிருந்தான். ஆனால் நகரவாசிகளுக்

கும் நாட்டுப்புறத்தவர்களுக்கும் அது உண்மையாகவே உவகையூட்டும் விழாவாகவிருந்தது. உண்பதிலும், உடையுடுப்பதிலும், வெளியூர்களிலிருந்து வந்திருந்த விருந்தினர்களை உபசரிப்பதிலும் அவர்கள் மிகுந்த உற்சாகம் கொண்டிருந்தனர். இதற்குள் தேவகியின் புதல்வரைப்பற்றிய செய்தி விரைவில் நகரமெங்கும் பரவிவிட்டது. சகோதரர் இருவரின் பட்டணப் பிரவேசத்தைப்பற்றிய பேச்சே வீதிகள்தோறும் ஒலித்துக்கொண்டிருந்தது. அதனுல் தங்களுக்குப் புதிய உயிர் வந்துவிட்டது போன்றே பிரஜைகள் உணர்ந்தார்கள்.

அவர்களை அழைத்துவந்த அக்ரூரன் தன் கடமையை முறையாக நிறைவேற்றினுன். கொடூரக் கோமான் ஆகிய கம்சனுடைய முன்னிலைக்கு அவன் நேரே சென்றுன். இளைஞர் இருவரும் ராஜதானிக்கு வந்தாய்விட்ட விஷயத்தை வினயபூர்வமாக அவன் வெளியிட்டான். நிகழப்போம் மற்போரில் அவர்கள் கலந்துகொள்ள ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்ததையும் அவன் தெரிவித்தான். பிறகு சிறிது ஓய்வை நாடி அவன் தன் வீட்டுக்குப் போய்விட்டான். தனது கொடிய எண்ணம் இனி வெற்றிகரமாக நிறைவேறிவிடும் என்று வேந்தன் வீறுப்புக்கொண்டிருந்தது ஒருபுறம்; தனது இறுமாப்புக்கு எதிரிடையாகக் கொடிய கம்சனுடைய சீரிய நெஞ்சமே அவனைச் சித்திரவதை செய்துவந்தது மற்ருெரு புறம். ஏனென்றுல் நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை. கம்சன் செய்துவந்த வெவ்விய வினைகளெல்லாம் ஒன்ருகத் திரண்டு உள்ளத்தினுள் அவனை வாட்டிவந்தன. ஒரு விழாவை நடாத்தி இத்தருணத்தில் வஞ்சகமாக வாலிபர் இருவரையும் கொன்றுவிடலாமென்று கம்சன் திட்டம் போட்டிருந்தது உண்மை. ஆனுல் பிறரைக் கொல்லத்

தீர்மானித்திருப்பவனுக்கு மரணபயம் தானே வந்துவிடுகிறது. கம்சன் அத்தகைய பயத்துக்கு இப்பொழுது முற்றும் ஆளானான். அமைதியான தூக்கத்துக்கும் அவனுக்கும் வெகுதூரம் ஆய்விட்டது. மரணத்தைப்பற்றிய பயங்கரமான கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்திருப்பான். கண்ணைத் துடைத்துக்கொண்டு பைத்தியக்காரன் போன்று இங்குமங்கும் நடப்பான். திரும்பவும் தலையணைமீது சாய்வான். சிறிது நேரத்துக்குள்ளாக மற்றொரு கொடிய கனவு. ஒவ்வொரு கனவும் தான் கொலையுண்பதைப் பற்றியதாகவே இருந்தது. வீரன் ஒருவன் வீராவேசத்தோடு ஒரே ஒரு தடவை சாகின்றான். கோழை ஒருவனோ அஞ்சும்பொழுதெல்லாம் மரணத்தால் அலைக்கழிக்கப்படுகிறான். கம்சன் அத்தகைய இழிநிலைக்கு ஆளானான். பட்டப்பகலிலே நிலைக்கண்ணாடி ஒன்றன் எதிரில்நின்று பார்த்தான். அவன் கண்ட பிம்பம் மிகவும் விபரீதமானது. தன் தலை வெட்டுண்டு போய்விட, வெறும் முண்டம் மட்டும் குருதியைக் கக்கிக் கொண்டு நின்றது. சிறுவர்களை எப்படியாவது ஒழித்து விட்டால் இந்தச் சீர்கேடும் சரிப்பட்டுவிடுமென்று கம்சன் கருதிக் கொண்டிருந்தான்.

காலையில் குறிப்பிட்டவேளையில் மற்போர் மேடையைச் சுற்றிலும் வேடிக்கைப் பார்க்கும் மக்கள் திரள் திரளாய் வந்து கூடினர். பலராமனும் கண்ணனும் அவ்விளையாட்டில் கலந்துகொள்ள வீதியில் வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது எதிர்பாராத விபத்து ஒன்றுக்கு அவர்கள் ஆளானார்கள். மதம் பிடித்த யானை ஒன்றை மாவுத்தன் அவர்கள் மீது ஏவினான். அது யாருக்கும் தெரியாது கம்சன் செய்துவைத்திருந்த முன் ஏற்பாடாகும். யானையும் தன் துதிக்கையால் கண்ணனை வளைத்துப் பிடித்துக்கொண்டது.

ஆனல் அவன் ஆச்சரியமாகப் பிடியினின்று தப்பித்துக் கொண்டு மற்ருேர் இடத்தில் நின்ருன். திரும்பவும் யானை அவனைப் பிடித்தது. திரும்பவும் அவன் பிடியினின்று வழுவி இடம் மாறி நின்ருன். பல தடவை இத்தகைய விளையாட்டு. பிறகு பிள்ளையாண்டான் வேழத்தின் வாலைப் பிடித்து இப்புறமும் அப்புறமும் இழுத்து அதை அலைக் கழித்தான். ஆயாசத்தால் விலங்கின் வெறி அதிகரித்தது. அப்பொழுது குறும்புக்காரக் கண்ணன் அதன் முன் னிலையில் தரையில் படுத்தான். யானையோ ஓங்கித் துதிக்கையால் அடித்தது. அப்பொழுது மாயமாகக் கண்ணன் இடம் மாறிவிட்டான். அடியோடு தரையில் விழுந்தது. இந்த உபாயத்தைச் சிறுவன் திரும்பத் திரும்பக் கையாண்டான். மதம் பிடித்திருந்த யானை இப்பொழுது மயங்கிப்போய்விட்டது. இதுதான் தக்க தருணம் என்று யானையின் மர்மஸ்தானங்கள் சிலவற்றில் கண்ணன் ஓங்கி உதைத்தான். மாய்ந்துபோன மிருகம் மலைபோன்று கீழே விழுந்தது. அதன் தந்தம் ஒன்றைப் பிடுங்கிக்கொண்டு வெற்றி வீரனக அவன் நடந்து சென்ருன்.

விளையாட்டின் மூலம் வதை

சகோதரர் இருவரும் விளையாட்டு அரங்கத்துக்குள் நடந்துவந்த காட்சியே காட்சி. அழகும் ஆண்மையும் அடக் கமும் ஒன்று சேர்ந்து அவர்களிடம் மிளிர்ந்தன. அவ்வினிய வடிவினர்களைப் பார்த்தவர்கள் பிரமித்துப்போயினர். அவர் களை வரவேற்பதற்குக் கைதேர்ந்த மற்போர் வீரர் நான்கு பேர் அரங்கத்தில் காத்திருந்தனர். அவர்களுக்கு அரசனல் சதியாலோசனை முன்னமே சொல்லிவைக்கப்பட்டிருந்தது. மல் விளையாட்டுக்கிடையில் தந்திரமாய் அவர்களை மாய்த்து விடவேண்டும். ஆத்திரத்துடன் அவர்கள் அதற்கென்றே

காத்திருந்தனர். பலராமனையும் கிருஷ்ணனையும் எதிர் கொண்டு அழைக்க இரண்டு மல்லர் முன்வந்தனர். மற்றவர் இருவரும் அமைதியுடன் பின்னணியில் காத்திருந்தனர்.

"வாருங்கள், இளம் வீரர்களே! நீங்கள் இருவரும் எங்களுடன் மற்போர் புரிவீர்களா?" என்றான் சாணூரன். நால்வரில் ஒருவனுடைய பெயர் அது.

"நாங்கள் விளையாட்டுப் பிள்ளைகள். பெரிதும் வனத்தில் வசித்து வருபவர்கள். மற்போரைப்பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? எங்கள்போன்ற இளைஞர் இருவரை அனுப்பி வைத்தால் ஏதோ கொஞ்சம் விளையாடிப் பார்ப்போம்" என்றான் கிருஷ்ணன்.

"நீங்கள் ஏதேதோ அரும்பெரும் செயல்களையெல்லாம் செய்து சாதித்திருப்பதாக நாடெங்கும் பிரஸ்தாபம். இங்கு வரும்பொழுதே வாயிலில் இருந்த ஒரு யானையையும் ஒழித்து விட்டீர்களாமே! அத்தகைய உங்களுக்குத் தகுந்த எதிரிகள் வாய்த்தால்தானே அதில் உங்களுக்குச் சிறப்பு உண்டாகும்." இப்படிச் சொல்லிக்கொண்டு சாணூரனும் மற்றவனும் சிறுவர்கள்மீது கைவைத்தார்கள். இளைஞர்களோ முதலில் தங்களை விடுவித்துக்கொள்ள முயன்றார்கள். அத்தகைய முயற்சியிலேயே ஒரு தனி மகிமையிருந்தது. அதைப் பார்த்தவர்கள் பெருவியப்பு அடைந்தார்கள். தற்பாதுகாப்பு பிறகு ஆக்கிரமிப்பாக வடிவெடுத்தது. வடிவத்தில் சிறியவர்கள் ஆற்றலில் சிறியவர்கள் அல்லர். கை கலத்தல், கால் பின்னுதல், மடக்கி அமிழ்த்துதல், தூக்கிப் போடுதல், புரட்டுதல், புடைத்தல், தாக்குதல் முதலியன கனவேகத்தில் நிகழ்ந்தன. எல்லாம் ஒரே அமளி. சாணூரனும் அவனுடைய துணையாளும் அடியுண்டு உயிர் துறந்து பிணமாகக் கீழே விழுந்தார்கள்.

வேடிக்கை பார்த்தவர்கள் இந்த விபத்தை அறிந்து கொள்ளுதற்கு முன்பு வாலிபர்கள் இருவரும் காத்திருந்த மற்ற இருமல்லர்மீதும் பாய்ந்தார்கள். அவர்களுள் முஷ்டிகன் முக்கியமானவன். முஷ்டிகனும் அவனுடைய துணை வீரனும் அரங்கத்தினுள் இளைஞர்களால் இழுத்து வரப்பட்டனர். பழைய போராட்டம் திரும்பவும் நிகழ்ந்தது. ஆனால் இப் பொழுது அதில் பாதி நேரங்கூட ஆகவில்லை. முஷ்டிகனும் மற்றவனும் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு தரையில் விழுந்து மடிந்தனர்.

களியாட்டத்தைப் பார்க்க வந்தவர்கள் போராட்டத் தைப் பார்த்தார்கள். ஆதலால் அவர்கள் பிரமித்துப்போய் விட்டார்கள். அவரவர் இருப்பிடத்தில் பொம்மைகள் போன்று பேச்சற்று மூச்சற்று அசைவற்று இருந்தனர். சிற்றரசர்கள் பலர் தங்களுக்கேற்ற அரியாசனங்களில் அசை வற்றிருந்தனர். அவர்களுக்கெல்லாம் மேலாக ஆடம்பர மான சிம்மாசனத்தில் வீற்றிருந்த கம்சன் விதிர்விதிர்த் துப் போய்விட்டான். இப்படிக் கனவுகள் பல அவன் கண்டிருக்கிறான். இப்பொழுது நிகழ்வது கனவா, நனவா வென்று அவனுக்கே விளங்கவில்லை. முஷ்டிகனும் மற்றவ னும் மாய்ந்த நொடிப்பொழுதில் மாயோனாகிய கண்ணனும் அவனுடைய அண்ணனும் அரசனைப் பிடித்து அரங்கத்துக் குக் கொண்டுவிந்துவிட்டார்கள். சிறிது நேரத்துக்குள் அவனுடைய பொதியுடல்தான் பூமியில் எஞ்சிக்கிடந்தது! நொடிப்பொழுதில் அவனை நமனுக்கு இரையாக்கிவிட்டார் கள். ஒழிந்தான் கம்சன். மக்கள் உள்ளத்தினின்று துன்பச் சுமையும் ஒழிந்தது. இப்பொழுது விந்தையினுள் பெரிய விந்தையொன்று வெளியாயிற்று. கொடுங்கோல் ஆட்சிக்கு அஞ்சி ராஜபக்தி பண்ணி வந்தவர்களுக்கு ஒரு கணப்பொழு

தில் அந்தப் பாசாங்கான ராஜபக்தி பறந்தோடிவிட்டது. குதூகலத்தோடு விழாக்கொண்டாடும் நிலை மக்களுக்கு வந்துவிட்டது.

பொறுப்பை நிறைவேற்றுதல்

அரசன் இல்லாத நாடு நாடாகாது. வடிவத்தில் இளைஞன் எனினும் கண்ணனுக்கு இது நன்கு தெரியும். எனவே அவன் அப்பொழுதே மதுராபுரிக்கு மன்னனை நியமிக்கும் பொறுப்பை மேற்கொண்டான். தனக்கு விருப்பமான யாரை வேண்டுமானாலும் அப்பதவியில் அவன் நியமித்திருக்கலாம். ஆனால் தனது முயற்சியில் அவன் சிறிதும் முறை வழுவவில்லை. தன் தந்தையாகிய உக்கிரசேனனைச் சிறையில் அடைத்து வைத்த சீரிழிவு கம்சனுடையது. அக்கொடியவனை இப்பொழுது கொன்றாய்விட்டது. இனி உக்கிரசேனனை உய்விப்பதும் தனது பொறுப்பு. புல்லிய பேராசை எதற்கும் உக்கிரசேனன் உட்பட்டவன் அல்லன். தற்பெருமைக்காகவென்று நாடாளவேண்டுமென்ற அவாவும் அவனுக்குக்கிடையாது. மக்களுடைய நலத்துக்காகவென்றே அவர்களின் தந்தைபோன்று அரியாசனத்தில் அமர்ந்திருந்து அவனியை ஆளும் பாங்குடையவனாக அவன் இருந்தான். தகைசான்ற அத்தாதையைத் திரும்பவும் சிம்மாசனத்தில் அரசனாக அமரும்படி கண்ணன் செய்துவைத்தான். நாட்டார் அனைவர்க்கும் அது புதியதொரு மகிழ்வையும் ஊக்கத்தையும் உண்டுபண்ணிற்று.

பின்பு, மைந்தர் இருவர்க்கும் தங்களுடைய முக்கியமான கடமை முன்வந்து நின்றது. தங்களை ஈன்றெடுத்த அன்னையையும் பிதாவையும் பற்றிய எண்ணம் அவர்கள் மனதில் யாண்டும் குடிகொண்டிருந்தது. ஆனால் ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற தருணம் வாய்ப்பதற்கு முன்பு அதில் ஈடுபட

லாகாது. தூக்கிவினை செய்பவர்களுடைய கோட்பாடு அது. தாய் தேவகியும் தந்தை வசுதேவனும் அடைபட்டுக்கிடந்த சிறையை நோக்கிச் சிறுவர் இருவரும் விரைந்து சென்றனர். பூட்டு இட்டுத் தாள் இட்டுத் துருப்பிடித்துக்கிடந்த பெருங் கதவுகள் படக்கெனப் பலவந்தமாகத் திறக்கப்பட்டன. பிள்ளைகள் இருவரும் பெற்றோர் முன்னிலையில் சென்று அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்.

புதிதாகத் தங்களிடம் வந்திருந்தவர்கள் யார் என்று வசுதேவனுக்கோ தேவகிக்கோ விளங்கவில்லை. அதுகாறும் ஆறாகப் பெருகிய கண்ணீரால் அவர்களுடைய கண்களே மங்கிப்போய்விட்டன. துயரத்தால் பைத்தியம் பிடித்தவர் போன்று அவர்கள் ஆய்விட்டனர். நற்காலம் இனித் தங்களுக்கு எப்பொழுதாவது வருமா என்ற அவாவும் அவர்களை விட்டு அகன்றுபோய்விட்டது. ஆறாத்துயரத்தில் ஆழ்ந்தவர்களாய் எஞ்சியிருக்கும் வாழ்நாளைப் போக்குவதைத் தவிர வேறு கதியில்லை. அத்தகைய நெருக்கடியில் அவர்களுக்குப் புத்துயிர் ஊட்டுதற்குப் பிள்ளைகள் முன் வந்து விட்டார்கள். தங்களை இன்னார் என்று அவர்கள் அறிவித்தபொழுதே பெற்றோர்களுக்கு மெய்யுணர்வு வந்தது. கொடூரமே வடிவெடுத்திருந்த கம்சனைத் தாங்கள் துடைத்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். அப்பொழுது அம்மையப்பனுக்கு இன்னும் கொஞ்சம் புத்துயிர் பிறந்தது. முன்பு தங்களுக்குக் கிடைத்திருந்த ஞானக்காட்சியைப் பற்றியும், பிறந்திருந்த தெய்வீகக் குழந்தையைப்பற்றியும் இப்பொழுது தெற்றெனெ அவர்கள் உணர்ந்தனர். தேவகியின் வயிற்றினின் மாயமாய் மறைந்து போய், ரோஹிணியின் வயிற்றில் சிறிது வாய்த்திருந்தபின் தன்னைத் தோற்றுவித்துக்கொண்ட மூத்தவன் பலராமனும் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான். இதையெல்லாம் கேட்டதும் பெற்

றோர்களுக்கு முழு உயிர் வந்துவிட்டது. மக்களை மார்போடு கட்டியணைத்துக்கொண்டனர். "மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்" என்னும் பொய்யாமொழிக்குச் சிறப்பாக இவர்களே இலக்கு ஆயினர். தாங்கள் துய்த்திருந்த துன்பக்கடலும் இப்பொழுது வெறுங்கனவாய் மறைந்து போய்விட்டது.

பெற்றோரைச் சிறையினின்று மீட்டுவித்து வெளியே கொண்டுவந்தது கண்ணனுடைய சீரிய செயலாயிற்று. தாங்கள் பட்டதுயரங்களையெல்லாம் உள்ளக்கசிவுடன் அவர்கள் தெரிவித்தார்கள். அக்கூற்றுகளுக்குக் காது கொடுத்த கண்ணனுக்கே இடையிடையே சிறிது முகவாட்டம் வந்துவிட்டது. எதற்கும் கலங்காத நெஞ்சம் படைத்தவன் அவன். அண்டங்களே அழிந்துபோனாலும் அவன் அசையாதவன். அத்தகையவனுக்கும் பெற்றோரை முன்னிட்டு வருத்தம் வந்துவிட்டது என்றால் அதில் புதுமை ஒன்று புலனாகிறது. தாய் தந்தையர்மீது மக்கள் வைக்கவேண்டிய அன்பு மிக மேலானது. பெற்றவர்களுடனேயே இனிப் பெரிதும் வாழ்ந்திருக்க அவன் தீர்மானித்துவிட்டான். அவனை முன்னிட்டு அவர்கள் பட்ட துயரத்துக்கு ஆறுதல் அளிப்பது முற்றிலும் அவசியமாயிற்று.

வினையின் இயல்பு

துன்பம் கலவாத இன்பம் இவ்வுலகில் இல்லை. மிக நல்ல செயலிலும் பொல்லாங்கு கொஞ்சம் புணர்ந்திருப்பது இயற்கையின் இயல்பு ஆகும். பெற்றோரைச் சிறைமீட்டது கண்ணனுடைய செயல்களுள் மிகச் சிறந்தது. ஆனால் அதற்கு ஈடு மற்றொருபுறம் கொடுக்க வேண்டியதாயிற்று. வளர்ப்புத் தந்தையாகிய நந்தகோபனிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுக்கொள்ளும் காலம் அதுவாயிற்று. கண்ணன் தன் சொந்த மகன் அல்லன் என்பதை அவன் கண்ணனிட

மிருந்தே அறிகிறன். அது உண்மை எனினும் மனதுக்கு ஒவ்வாத உண்மை. தன்உயிரையே தன்னிடமிருந்து பிடுங்கி விட்டதுபோன்று ஆயர்கோன் உணர்ந்தான். தாய் யசோதையின் நிலைமை அதைவிட மோசமாய்விட்டது. கண்ணனைப்பிரிந்துதான் திரும்பிப்போக வேண்டுமென்று அறிந்ததும் அம்மாது மூர்ச்சைபோட்டுவிட்டாள். இனி பிருந்தாவனத்தில் ஆனாலும் சரி, கோகுலத்தில் ஆனாலும் சரி தங்கள் வாழ்க்கைக்குச் சோபை போய்விட்டது என்று இதுகாறும் கண்ணனுக்குப் பெற்றேராய் இருந்தவர்களும் மற்றவர்களும் உணர்ந்தார்கள். உயிரை இழந்த உடலங்கள்போன்று அவர்கள் தங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பினார்கள்.

பாங்குக்கேற்ற காட்சி

வயதில் சிறியவன் எனினும் மாந்தர்க்குக் கண்ணன் கொடுத்த காட்சி ஒருதரப்பட்டதன்று. அவரவர் கொண்டிருந்த இயல்புக்கும், பூண்டிருந்த இணக்கத்துக்கும் ஏற்ப பலதரப்பட்ட பாங்குகளில் அவன் புலப்பட்டான். பெற்றவர்களுக்கு யாண்டும் செல்லப் பிள்ளையாகவே அவன் இருந்துவந்தான். விளையாட்டுத் தோழர்களுக்கும் தோழிகளுக்கும் விளையாட்டுப் பிள்ளையாகவே அவன் விளங்கி வந்தான். அரக்கர் கூட்டத்துக்கு அளவையில் அடங்காத ஆற்றல் தெய்வமாக அவன் தென்பட்டான். கம்சன்போன்ற கொடியவர்களுக்குக் கண்ணன் பயங்கர சொரூபியாகக் காட்சி கொடுத்தான். அவனைப் பரம்பொருள் என்று உணர்ந்து ஏத்தி வணங்கிய சான்றேர்க்கு அவன் பரம்பொருளாகவே ஞானக் காட்சி கொடுத்தான். யோகியர் உள்ளத்தில் அந்தராத்மாவாக அவன் அமர்ந்திருந்தான். பிரேமை பக்தியுடன் போற்றியவர்களுக்கு அவன் தெள்ளமுதமாகத் திகழ்ந்தான்.

தாயுமானவர் இயற்றிய பாடல்கள்

உபநிஷதங்கள் கூறுகின்ற பரதத்துவங்கள் யாவற்றையும் தாயுமானவர் பாடல்களில் காணலாம். இவருடைய பாடல்கள்யாவும் மறைந்து பட்டுப்போகாது தமிழ் மக்கள் கைவசம் இருப்பது தமிழ் நாட்டின் தவச்செல்வமாகும். ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு இவருடைய நூல்கள் ஒப்பற்ற அருள்விருந்தாக அமைந்துள்ளன. ஒவ்வோர் ஆத்ம சாதகரும் இவருடைய பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களை அறியும் வண்ணம் இதுவரை சுமார் 8 தலைப்புக்கள் கொண்ட பாடல்களுக்கு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் விரிவான விளக்கம் தந்துள்ளார்கள். ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக யாவரும் படித்துப் பயன் பெறும் வகையில் வெளிவந்துள்ளது. அவைகளாவன:

1. பரசிவ வணக்கம்	கிரௌன் சைஸ்	பக்கம்	44	ரூ. 1-00
2. பரிபூரணானந்தம்	,,	,,	160	ரூ. 3-00
3. சின்மயானந்த குரு	,,	,,	166	ரூ. 3-00
4. மௌன குரு வணக்கம்	,,	,,	154	ரூ. 3-00
5. ஆனந்தமானபரம்	,,	,,	148	ரூ. 3-00
6. சுகவாரி	,,	,,	148	ரூ. 3-00
7. கருணாகரக்கடவுள்	,,	,,	154	ரூ. 3-50
8. எங்கும் நிறைகின்ற பொருள்	,,	,,	108	ரூ. 2-50

இந்த எட்டு நூல்களையும் ஒரே சமயத்தில் தபால் மூலம் தருவித்துக் கொண்டால் தபாற்கட்டணத்திற்காக ரூ. 3-50 மட்டும் சேர்த்து அனுப்பினல் போதுமானது.

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் பாடல்கள் மூலம் மட்டும் தனிப்புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் பாடல்கள் பதம் பதமாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன் அரும்பதவுரைகள் பாடல்களுக்கு அடியிலேயே தரப்பட்டிருக்கின்றன. இதுவாசிப்பவர்களுக்கு மிக எளிதாக இருக்கும்.

விலை ரூ. 6-00 தபாற் கட்டணம் ரூ. 1-40

விலை ரூ. 6-00